
ராஜாராணி
மு. கருணாநிதி
640
முழு வசனம்
பாடல்கள்

# ராஜா ராணி

முழுவசனம், கதை
பூராப்பாடல்கள்

விலை அணு 0—8—0

★

மலர் மன்றம்
விருதுநகர்.

## ★ கதைச் சுருக்கம் ★

ராஜன்:—கலை ஆர்வம் கொண்ட கட்டிளங்காளை. நடிக்கச் சென்றவன் துடியிடையாள் ஒருவளின் துணையோடு திரும்புகிறான். சிற்றிடையாள் மயக்கம் செல்வம் கொழித்தவள் என நம்பத் தோன்றுகிறது ராஜனுக்கு. அதன்காரணமாக கணக்கற்ற சிக்கல்கள் ?

ராணி:— இதயத்தைக் கவறும் வடிவழகு பெற்றிருந்தும் இதயத்தில் சாந்தி பெறும் அளவு அமைதி கிடையாது அவள் உள்ளத்திற்கு அதன் முடிவு வேலை செய்ய ஒப்புக் கொண்டாள் ராஜனிடம். அந்த வேலையே அவனுக்கு என்றும் வேலைக்காரியாகும் அதாவது அவன் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் வளைந்து கொடுக்கும் உரிமை கொண்ட வேலைக்காரியாக மாறினாள், அப்படி மாறுமுன் ஏற்பட்ட எண்ணற்ற சிக்கல்கள் ?

இந்த சிக்கலை ஏற்படுத்திவைத்தவர்களும் பின் பிரித்துக் கொடுத்தவர்களும் சமரசம், சாந்தம், பாபு, கரண்ட் இப்படி எத்தனையோ பேர்? அத்தனை பேரும் என்ன செய்தார்கள்? அதுதான் கதை. எங்கே பக்கத்தைப் புரட்டுங்கள்.

★ பாடல்கள் ★

பாட்டு: 1.

(1) ஆனந்த நிலை பெறுவோம்—எல்லோரும்
அன்புடனே சமாதானம் காணுவோம் (ஆ)
வீணான பேதங்களும்—பகை
விளையும் பொறாமைகளும்—நெஞ்சில்
வீணான பேதங்களும்—பகை
விளையும் பொறாமைகளும்—புவி
தனைநீங்கியே—சாந்தி தழைத்தோங்கியே (ஆ)
சாந்தம் சமரசம் போல் இணையாகவே
வாழ்ந்திடும் மாந்தரின் இல்லறம் தன்னிலே
தீதான சந்தேகமே—உரு
வானால் எந் நாளிலுமே—பெரும்
தீதான சந்தேகமே—உரு
வானால் எந் நாளிலுமே—இன்பம்
காணுமலே—வாழ்வு வீணாகுமே (ஆ)

பாட்டு: 2.

தோ: காணாத இன்பமெல்லாம் கண்டிடலாம் இங்கே
காண்பதும் உண்மை தானுங்க
எல்லாம் உண்மை தானுங்க—எங்கும் (கா)

பாபு: அழகோடு உறவாடும் மலர் நாணும் மேனி
இசை பாடும் வாணி வா என் கண்மணி

தோ: ஆஹா ஆசை பாருங்க
ஆஹா ஆசை பாரு அதுக்கு வேறு ஆளைப்பாரு நீதான்...

பாபு: சாக சந் தானா ஓகோ எல்லாம் வேஷந்தானா

தோ: காண்பதும் உண்மை தானுங்க
எல்லாம் உண்மை தானுங்க (எங்கும்)

தோ: என்னைப்பாருங்க என் கண்ணைப் பாருங்க
பெண்களில் என்னைப்போலே பேரழகி இல்லீங்க!

பாபு: ஆமாம் பூங்கொடி அலங்காரப் பொன்முடி
பாடும் குயிலும் நீ பவனி வரும் தென்றல் நீ

தோ: ஓடும் உயிரோட்டம் நான்
ஓடும் உயிரோட்டம் ஒளி வீசும் புதுமை நிலா
நானே கயல்விழி மானே

பாபு: வாழ்வில் உன்னால் இன்பம் தானே

தோ: காண்பதும் உண்மை தானுங்க—எங்கும் (கா)

பாட்டு: 3.

ராணி: வாங்க...வாங்க...வாங்க...எல்லோரும் இங்கே வாங்க
டிக்கெட்டு வாங்க...வாங்க...இன்றிரவு மிக நன்றிரவு
இணையில்லாத இன்ப இரவு

நிர். 1. ஒருவன்: தரை ஒண்ணு!

ராணி: அரை ரூபா!

அவன்: கொடு கொடு இந்தா!

ராணி: தரை அரை ரூபா!...கரை படிந்த தரை அரை ரூபா
ரத்தக் கரை படிந்த தரை அரை ரூபா
வெற்றிலை பாக்கு கரை படிந்த தரை அரை ரூபா
(இன்றிரவு) ... (இன்றிரவு)

நிர். 2. ஒருவன்: ஏம்மா இன்னிக்கு என்ன ட்ராமா?

ராணி: அட வெங்கட்ராமா க்யூவிலே நில்லு!

அவன்: எப்படித் தெரியும் என்பேரு?
செப்படி வித்தை கற்றவளோ?

ராணி: தரை அரை ரூபா...பெஞ்சு ஒண்ணு பேக் பெஞ்சு
மூணு!...ஏ...காலி! காலி!...நாற்காலி
அஞ்சு ரூபா...

நிர். 3. ஒருவன்: கொஞ்ச ரூபா சொல்லு

ராணி: ஆ!

அவன்: கொஞ்ச ரூபா சொல்லம்மா...கோகிலவாணி
அம்மா கோகிலவாணி அம்மா கோகிலவாணி

ராணி: வஞ்சகனே போடா!...ஏடா...மூடா...
வீணே சாகாதேடா...

அவன்: ஆ!

ராணி: எங்க நாடகத்தில் இந்த வசனங்களை கேட்க
கொஞ்ச ரூபாயா? அஞ்ச ரூபாதா!
அழகான நாடகம் எழிலான காட்சிகள்
அனல் வீசும் பேச்சுகள்...ஆடல்...பாடல்
ஊடல்...கூடல் எல்லாம் காண இங்கே வாங்க...

வாங்க டிக்கெட்டு வாங்க வாங்க
மூனு வயதுக்கு மேல் முழு சார்ஜு
இடம்மாறி உட்கார்ந்தால் டபுள் சார்ஜு
டர்னிங் சீனில் அடிக்கக்கூடாது டார்ச்சு (மூனு)

**கிழவன்:** ஐம்பத்து மூனுக்கு?
**ராணி;** ஈளி சேர்!...
**ஒரு பெண்:** ஏம்மா! பெண்களுக்குத் தனி இடம்உண்டா?
**ராணி;** பிள்ளைகள் போட ஏணையும் உண்டு' பீடா சிகரெட்
பாக்கு வெத்திலை சோடா கலர் ஆரஞ்சு
**குள்ளன்:** ப்ரீயா?
**ராணி:** அட்.. ட்ரீயோ! ட்ரீயோ டேயன்னு!
முட்டன்னு டாவன்னு ள்ளன்னு போய்யா (மூனு)

**ஸீர். 4 ஒருவன்:** ஏம்மா அரை டிக்கட் உண்டா?
**ராணி;** யப்பா...உமக்கு முழு டிக்கட்டும் இல்லே!
**அவன்;** ஏனும்?
**ராணி;** ஹவுஸ் புல்!

**பாட்டு: 4.**

சிரிப்பு...... இதன்
சிறப்பை சீர்தூக்கி பார்ப்பதே நமது பொருப்பு!...
கறுப்பா வெளுப்பா என்பதை எடுத்துக்
காட்டும் கண்ணுடி சிறப்பு! மனம் இது
களையை நீக்கி கவலையைப் போக்கி
மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு
துன்ப வாழ்விலும் இன்பம் காணும்
விந்தை புரிவது சிரிப்பு! இதைத்
துணையாய் கொள்ளும் மக்களின் முகத்தில்
துலங்கிடும் தனி செழிப்பு!
பாதையில் போகும் பெண்ணைப் பார்த்துப்
பல்லிளிப்பதும் ஒரு வகைச் சிரிப்பு அதன்
பலனும் உடனே பரிசாய் கிடைப்பது
காதறுந்த பழஞ் செருப்பு
சிந்திக்கத் தெரிந்த மனித குலத்துக்கே
சொந்தமான கையிருப்பு!—வேறு
ஜீவராசிகள் செய்ய முடியாத
செயலாகும் இந்த சிரிப்பு!
இது—அதிகாரிகளின் ஆணவச் சிரிப்பு!
இது—அடங்கி நடப்பவன் அசட்டுச் சிரிப்பு!
இது—சதிகாரர்களின் சாகசச் சிரிப்பு!
இது—சங்கீதச் சிரிப்பு!

பாட்டு: 5. தாண்டவன் பாடல்.

வேலையில்லாத தொல்லை காலை பனி போலே நீங்கி போனதே...
நான் எண்ணாத நல் வாழ்வுதான் தன்னால் வந்து சேர்ந்ததே.
இன்ப நன்னாளிதே செல்வ பொன்னாளிதே...
ஆஹா ஆனந்தம் ஆனந்தமே...
முன்பின் அறியாதார் உறவால் என் மனம் போலவே
நலமே நானடைந்தேன் அன்பின் உருவாகவே
எந்தன் துயர் நீங்கவே நன்மை தந்திட வந்தார் இன்றே
என்னை சீமாட்டி என்றெண்ணி ஏமாந்தாரே
ஆஹா விந்தையிதே...

பாட்டு: 6. விருத்தம்

ஆழிசூழ் உலகம் விடிந்த தென்று—என்
ஆருயிர் மணவாளரை எழுப்பிவிட்டு
கோழிபோல் கொக்கரித்து என் கற்பையும்
கொத்திவிட்டாய் கொடியவனே! படுபாவி!
ஊழிபோல் வந்திங்கு ஆடிவிட்டாய் உடைந்த
தாழிபோல் ஆகிவிட்டேன்—இனி
ஒரு கணம் இந்த உயிர் நில்லுமோ
கற்புக்கு இலக்கணம் சொல்லுமோ சொல்லுமோ...
எந்தன் உயிர் நில்லுமோ

பாட்டு: 7.

மணிப்புறு!...புது மணிப் புறு!...புத்தப்
புது மணிப் புறு!...நானே தான் (மணி)
மேவிடும் அன்பால் தாவிடும் உன்பால் நெஞ்சம்
பூ விரித்து அழைக்குது மஞ்சம்
பூமானே வாராய் கொஞ்சம் (மணி)
ரோஜாக் கொல்லை முல்லைத் தோட்டம்
எந்தன் முகந்தானே ராஜா உமக்கு நான் தான் ராணி
தருவேன் சுகந்தானே! (மணி)

பாட்டு: 8.

லீலா!...லாலீ!...அது போலீ!...
கண்ணற்ற தகப்பனுக்கு பெண்ணாகப் பிறந்தவளே!
எண்ணற்ற பொய் சொல்லி என்னையே
மாற்றிய என் தங்கமே!
பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு
போகுமோ? மியாவ் மியாவ்
வானை நோக்கித் திரையைப் போட்டால் வட்ட நிலாவும்
மறைந்து போகுமோ (கண்)

கெட்டிக்காரன் பொய்யும் புரட்டும்
எட்டு நாளைக்கு—இந்தக்
கட்டிக் கரும்பின் பொய்யும் புரட்டும்
எத்தனை நாளைக்கு?...ஆ! (கண்)

வசனம்; ராணி

நான் ஒண்ணும் பொய் சொல்லலே எல்லாம் உண்மை தான்...

பாட்டு; ராஜா

அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுப் பெண்ணே!
அநியாயமாய் உண்மை சொல்வதிலே உனக்கு
அவனியிலே நிகர்யாரு கண்ணே!

வசனம்: ராணி

ராணி; ராஜா!
ராஜா: ராணி!
ராணி: ஆ!...(வியப்பு)

பாட்டு; ராஜா.

சீட்டுக் கட்டு ராணி போல சிக்கிவிட்டாய் பெண்மயிலே
வாட்டமே இல்லாமலே வாழலாம் பூங்குயிலே!
கிளாவர் ராணி! உனக்கு என்ன வேணுமின்னு கேளு!...
ஆட்டின் ராணிபோல ஆடு டைமன் ராணிபோல ஆடு
அட இஸ்பேட் ராணி! ஏனிந்த சோகமோ?
என் மேல் என்ன கோபமோ?
உண்மை சொன்ன பாபமோ?
உன் மனதில் என்ன தாபமோ?

பாட்டு: 9. ரேடியோ பாடல்

திருமணம் ஆகாத பெண்ணே—உன்
நிலை தன்னை தீர்மானம் செய்திடு கண்ணே!— (திரு)
பொய்மொழி பேசி பலர் பெண் கொள்ள வந்திடுவார்
நல்ல விலை பேசுவார் நாளும் சுமந்து பெற்றோர்கள் (திரு)
புல்லென உன்னை மதிப்பார்—கண்ணில்
கல்யாண மாப்பிள்ளை யாரென்று காட்டார்
கண்ணே உனக்கொரு சேதி இந்தக்
கல்யாண தரகர்க்கு அஞ்சிடவேண்டாம் (திரு)

பாட்டு: 10. ராணியின் சோகப் பாடல்

ஒரு சொல்லாலே வீணானதே...காதல் சுகமும் கனவானதே(ஒ)
தேன்மொழி பேசும் மான்விழி மாதே
திருமணம் செய்வேன் என்றே...
சொன்னதை யெல்லாம் மறந்தும் ஏனோ துரையே
என் வாழ்வெல்லாம் மானில மேலே தேய்பிறை போலே (ஒ)

வாழ்வதிலால் பயனேது? வஞ்சகரெல்லாம் மகிழ்ந்ததனாலே
மங்கை என் வாழ்வெல்லாம் (ஒரு)

பாட்டு: 11.

ராஜா: திரைபோட்டு நாமே மறைத்தாலும் காதலை
தெளிவாக நானே தெரியாமல் போகுமோ?
ராணி: சரியான நேரம் கிடைக்காத போதிலே
திரைபோட்டுக் காப்பதே முறையாகும் வாழ்விலே
ராஜா: சரியான நேரம் என்னேரமோ!
ராணி: அலை மோதும் நெஞ்சம் நிலைகாணும் நேரமே!
ராஜா: சந்தோஷம் காணவே தடை போடலாமோ?
ராணி: தவறாக என்னை எடை போடலாமோ?
ராஜா: அரும்பான காதல் மலராகுமோ?
ராணி: குறும்பான கேள்வி இது நியாயமாகுமோ?
ராஜா: கரும்பாக பேசும்!
ராணி: என்னாசை ராஜா!
ராஜா: உறவாகி இன்பம் காண்போம் ராணி...
ராஜா: ராணி:.........(சரியான)

★ நடிகர்கள் ★

| | | |
|---|---|---|
| சிவாஜி கணேசன் | ... | ராஜா |
| எஸ். எஸ். ராஜேந்திரன் | ... | பாபு |
| என். எஸ். கிருஷ்ணன் | ... | சமரஸம் |
| கே. துரைசாமி | ... | ஞானக்கண்ணு |
| எம். என். கிருஷ்ணன் | ... | கரண்ட் |

★ நடிகைகள் ★

| | | |
|---|---|---|
| பத்மினி | ... | ராணி |
| ராஜ சுலோசனா | ... | கீதா |
| டி. ஏ. மதுரம் | ... | சாந்தம் |
| அங்கமுத்து | ... | கீதாவின் தாய் |

பாடல்கள்:
மு. கருணாநிதி, ஏ. மருதகாசி. கே. பி. காமாக்ஷி,
எம். கே. ஆத்மநாதன், வில்லிபுத்தன், விவேகன்.

[ஞானக்கண் மேசையின் மேல் படுக்கவைக்கப் பட்டிருக்கிருர். சுற்றிலும் டாக்டரும் உதவியாளர்களும் நிற்கிருர்கள். ராணி வெளியே உட்கார்ந்திருக்கிருள். பையன் வருகிருன்.]

பையன்; அம்மா! டாக்டர் உங்களைக் கூப்பிடுருரு...

[ராணி வருகிருள்.]

டாக்டர்: சிக்கிரம் குணமாகிவிடும். வருத்தப்படாதீங்க... இப்படி வாம்மா

ராணி; என்ன டாக்டர்?

டாக்: அப்பா நல்ல வேலேயா பிழைத்து விட்டார்.

ராணி; ரொம்ப 'தேங்க்ஸ்' டாக்டர். அவர் கண்பார்வையெல்லாம் சரியா ஆயிட்டுதா'

டாக்: சாதாரண விபத்தா அவருக்கு? பிழைச்சதே ஆபூர்வமாயிற்றே! எதுக்கும் வீட்டுக்கு அழைச்சிகிட்டுப்போயி மருந்தை விடாமல் சாப்பிடட்டும். பின்னுலே பார்ப்போம்!

ராணி; அப்படின்னு... அவன் கண்...?

டாக்; அப்போதே முன் கூட்டியே சொல்லியிருக்கேனேயம்மா—அவருக்கு வயது ஆயிடுச்சு. இனி கண்பார்வை வருவது சந்தேகந்தான்!

ராணி: அப்பா...!

* * * *

ஞானக்கண்; ராணி!...ராணி!...

ராணி: இதோ வந்துட்டேனப்பா.

ஞான; என்னம்மா செஞ்சிக்கிட்டு இருந்தே?

ராணி: உங்களுக்கு 'ஹார்லிக்ஸ்' போட்டேனப்பா... இந்தாங்க, சாப்பிடுங்க...இருங்கப்பா. நானே தர்ரேன்.

ஞான; [குடித்துவிட்டு] அப்பாடா! ராணி...அம்மா ராணி!...

ராணி: அப்பா!...அப்பா!...

ஞான; உம்... அப்பாவுக்கு அன்புப் பணி செய்வதையே கடமையாகக் கொண்ட கை...இனிமேல் என்னுல் பார்க்க முடியாதே அம்மா! கள்ளமில்லாத உன் புன்னகையை என்னுலே காணமுடியாதே அம்மா!

ராணி; அப்பா!

ஞான. [அவளது கையைத் தடவியபடியே] எங்கே அம்மா மோதிரம்?

ராணி: அதை விற்றுத்தானம்பா ஆஸ்பத்திரி செலவு செய்தேன்... விலையுயர்ந்த மருந்துகளுக்குக்கூட உங்கள் விழிகளுக்கு ஒளியேற்றும் வலிமையில்லை அப்பா...

ஞான: அழாதே அம்மா! எனக்குக் கண்போனால் என்ன? இனி நீ தான் என் கண்கள் —உன் நல்ல பண்பும் நல்ல நடத்தையும்தான் என் கண்ணின் மணிகள்! பிறகு நான் எதுக்கம்மா கவலைப் படணும்? ஆனால் இந்தக் குருடனை கட்டிக்காக்கும் குடும்ப பாரம் உன் தலையிலே விழுந்ததேன்னு நினைக்கும் போது தான்...

ராணி: என்னப்பா அப்படிச் சொல்றீங்க! படிப்பும் மூளையும் இருக்கும்போது பிழைப்பைப்பற்றி என்னப்பா கவலை? இன்னைக்கே ஆரம்பிக்கிறேன், ஒரு நல்ல வேலை தேடுறதுக்கு...

ஞான; உம்... வேலை பார்ப்பது! சின்னஞ் சிறுசை வெளியே அனுப்பிவிட்டு என்னாலே எப்படியம்மா வீட்டிலே இருக்க முடியும்? மெல்லாமெ விழுங்குகிற மலைப்பாம்புகளும், மனச்சாட்சியோட இருக்கிறவங்களைப் பார்த்துப் பழிக்கும் மந்திகளும் இருக்கிற உலகமம்மா இது!

ராணி; உங்கள் மகளுக்கு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் மனவலிமை நிறைய இருக்கிறதப்பா ...

ஞான: உண்மைதான் அம்மா! மனவலிமை என்பது உள் அழகு ஆனால் வெளி அழகு சில நேரங்களில் வேதனைக்குப் பாக்கு வைத்துவிடும்...

ராணி. என்னப்பா சொல்றீங்க?

ஞான: நான் அடிக்கடிச் சொல்வேனே, கூந்தலுக்குப் பூவும், நெற்றிக்குப் பொட்டுங்கூட வைக்கக் கூடாதுன்னு, அதைத்தானம்மா ஞாபகப்படுத்துகிறேன்........அந்த ஆபத்து நிறைந்த அழகையெல்லாம் அந்தஸ்து உள்ளவர்களுக்கே விட்டு விடுவோம்...என்னம்மா பேசாமல் இருக்கிறாய்? உம்.. அழகுக்கு அழகு செய்துகொள் என்று சொல்ல வேண்டிய அப்பா ஆமைபோல் முடங்கச் சொல்கிறானே என்று வருத்தப் படுகிறாயா?

ராணி· இல்லேப்பா...நீங்க பாத்து ஆனந்தப்படமுடியாத அழகையெல்லாம் நான் ஏனப்பா செஞ்சுக்கப்போறேன்...

ஞான: ஆமாம்மா! அதுதான் புத்திசாலிப் பெண்ணுக்கு அழகு!

ராணி: சரிப்பா! ஒரு கம்பெனியிலே வேலையிருக்குன்னு கேள்விப்பட்டேன். இப்பவேபோனா கொஞ்சம் அனுகூலமாயிருக்கும். நான் போய் பார்த்துட்டு வரட்டுமாப்பா?

ஞான: சரியம்மா! நான் வேற வழி என்ன சொல்லப் போறேன்—ஜாக்கிரதையாப் போயிட்டு வாம்மா...

[கீதா நடனமாடுகிருள். முடிவுற்றதும்]

பாபு: ஹா... ஹா...! சபாஷ் கீதா! சபாஷ்! புழுவைப் போல் நெளிந்து புள்ளி மயிலைப்போல் ஆடிவிட்டாய்... அய்யோ அய்யோ... அய்யோ... எத்தகச் சக்கமான அபிநயம், ஏராளமான முகவெட்டு, அசைவு, இசைவு, வலைவு நெளிவு --எல்லாம் அபாரம்! அபாரம்!!

தாயம்மாள்: அப்பப்பா! என்ன திருஷ்டி, ஹூம்!

பாபு: ரொம்ப களைப்பாயிருக்கும், ஏய் யாரங்கே!... காபி சப்பிடுகிறியா?

கீதா: ஊஹூம்.

பாபு: கூல்ட்ரிங்...?

கீதா: ஊக்கும்...

தாயம்: இந்தக் காலத்துப் பெண்கள் நாலு குதி குதிச்சா உம், மேமூச்சு, கீழ்மூச்சு வாங்குது. எங்க காலத்திலே நாங்க ஆட ஆரம்பிச்சோம்னு, ஒண்ணு கால் முறியணும்; இல்லாட்டி மேடை முறியணும்! ஹி...ஹ .அப்படி ஆடுவோம் தம்பி!

பாபு: ஏன், இப்பத்தான் என்ன, நீங்க ஆடாமலே மேடை கிடையெல்லாம் தூள் தூளாப் பறக்குமே!

தாயம். உம்...அது கிடக்கு பழைய கதை. என்னமோ தம்பி, என் பொண்ணு உக்களேயே நம்பியிருக்கு!

பாபு: இருக்கட்டும்; இருக்கட்டும்!

தாயம்: அவளை ஆளாக்க வேண்டியது உங்க பொறுப்பு.

வேலைக்காரி: (அங்கு வந்து) உங்களைப் பார்க்கணுமாம், யரோ ஒரு பொம்பளை வந்திருக்காங்க.

பாபு: ஆ! பொம்பளையா? யாரது?

ராணி: உம் வணக்கங்க! என் பெயர் ராணி.

பாபு: யாரு? என்ன வேணும்?

ராணி: ஒங்க நாடகத்துக்கு டிக்கட் விற்பனை செய்ய ஒரு பெண் தேவையென்று கேள்விப்பட்டேன்.

பாபு: ஆமாம், ஆமாம். தேவைதான்; தேவைதான். இப்படி உட்காரேன்!

ராணி: உம், பரவாயில்லையிங்க, அந்த வேலையை எனக்குக் கொடுத்தால்— -

பாபு; உம், பாடத் தெரியுமா?

தாயம், என் பெண்ணுக்கு ஆடவும் தெரியுமே!

பாபு: அடாடா -இது வேற சிவ பூசையிலே கரடி மாதிரி பூந்துகிட்டு.

கிதா: அம்மா, நீ சும்மா இரும்மா!

பாபு: பரவாயில்லே ராணி! நாளைக்கு நாடகப் நடக்கம் போவது – பிறகு தொடர்ந்து நாடகங்களை நடத்திக்கிட்டே இருக்கப் போகிறோம்! நாங்கலெல்லாம் 'அமைச்சூர்ஸ்' — அதிகமா சம்பளம் எதிர்பார்க்கக்கூடாது.

ராணி: சம்பளத்தைப் பத்தி என்னங்க.

பாபு: உம், நீ நாளைக்கு டிக்கட்டு விற்கிற திறமையைப் பாத்துகிட்டு அப்புறம் சம்பளம் போட்டுத் தர்ரோம்,

ராணி: ரொம்ப நன்றிங்க!

பாபு: ஹோ ஹோ!

—0—

(நாடகம்: "சேரன் செங்குட்டுவன்")

[ராணி பாடிக் கொண்டே டிக்கட் விற்கிறாள். உள்ளே சமரசம், அவர் மனைவி சாந்தம் இருவரும் உட்கார்ந்திருக்கிறார்கள்,]

நாடகத் துவக்கத்திற்கு முன்பு குரல்.

"செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகாரத்திலே ஒரு பொன்னேடு!...

கண்ணகி சிலை நாட்டுவதற்கு வடநாட்டிலே யிருந்து கல் கொண்டுவந்த கதை!

தமிழகத்துப் பழம் பெரும் சரித்திரத்தைச் சொல்லும் வீர வரிகள்!

அன்றொரு நாள் அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு நாம் அரசு கட்டிலில் அமர்ந்திருந்த நாள்!

அப்போது வடபுலத்திலே...

கனக விசயர் சபை

"தீராதி தீர ... தீன தயாபர ... தெய்வீக புருஷ...வேதாந்த சாகர, வேந்தர் குல திலக, உத்திரதேசத்து மன்னாதி மன்னர்கள் – கடவுள் அவதார கனக விசயர் பராக்! பராக்!!

மன்னர்கள்: நமஸ்கார்!

கனகர்; நமஸ்கார்!

விஜயர். நமஸ்கார்!

கன; சுயம்வரத் சுந்தரிக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும் ஹி ... ... ஹி ...

மன்; ஆமாம், நீங்கள் இருவருமே வந்து விட்டீர்களே; சுயம்வரப் போட்டியில் உங்களில் ஒருவர் ஜெயித்து விட்டால்

அந்தப் பெண்ணை நீங்கள் இருவரும் எப்படிப் பங்கு போட்டுக் கொள்வது?

தமிழ்நாட்டுப் புலவர். பிறகு பாரதம்தான்

விஜ: யாரப்பா நீ? என்ன பேசுகின்றாய்?

புல: தமிழ்! செந்தமிழ்! உலகத்தோடு பிறந்த தமிழ்! கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தத் தமிழ்!

விஜ: சுயம்வர மண்டபத்தில் உனக்கென்ன வேலை?

புல: உம்...விசித்திரமான கேள்வி வேந்தரே! சுயம்வர மண்டபத்தில் வயதான உங்களுக்குத்தான் வேலை...வாலிபர்களாகிய என் போன்றவர்களுக்கு வேலை இல்லை என்பது...

விஜ: குறும்பு தேவையில்லை; நீயார் என்று கூறு!

புல: நானோர் தமிழ்ப் புலவன்—வட நாட்டு யாத்திரை வந்தேன்,

கன: புலவனா? கவிதை புனையத் தெரியுமா, உனக்கு?

புல: கவிதை புனையத்தெரியாத புலவன்—கத்தி தூக்கத் தெரியாத வீரன்—இவர்களைத் தமிழகம் இதுவரைக் கண்டதே இல்லை...

கன: அதையும் பார்த்துவிடுவோம். எங்கே, உடனே ஒரு கவிதை சொல்லு!

புல: கங்கை நதி தீரத்திலே போராடினான்—தமிழன்
காவிரியின் ஓரத்திலே புகழ் பாடினான்.
பொங்குகடல் அத்தனையும் கட்டி ஆண்டான்—
தமிழன்
பூதலத்தில் மேலவனென்றுலகம் போற்ற...

கன: நிறுத்து, நிறுத்து!

விஜ: நிறுத்தும் ஓய்!

கன: பைத்தியக்காரன்...கங்கை நதி தீரத்திலே போராடினான்—தமிழன்—போராடு போராடுவான்! அவன் இந்தக் கனக விஜயன் காலத்திலே வந்து போராடினால் காலை ஒடித்து விடுவோம்...ஜாக்கிரதை!

மன்னர்கள்: ஹா...ஹா...ஹா...

விஜ: கனகர் சொன்னது அகரம் லக்ஷம் பெறும். யுவனே! இமயத்தின் நெற்றியிலே உம் மன்னர் புலி—வில்—கயல்—சின்னங்களைப் பொறித்தபோது எம்போலும் மன்னர் எங்கில்லை போலும்...

புல: ஏன்? காலில் விழுந்து காணிக்கை செலுத்தவா? பித்து மனம் கொண்டவரே! கேளீர், இன்றே தென்னாடு திரும்புகிறேன். "காவா நாவிற் கனகனும் விஜயனும் விருந்

தின் மன்னர் தம்முடன் கூடி அருந் தமிழாற்றல் அறிந்திலராகி செப்பிய மொழிகளைச் சேரனுக்குணர்த்துவேன் மதோன்மத்தர்களே! மாண்டுவிடவில்லை. தமிழர் வீரம் மீண்டும் சந்திப்போம், ஆண்டு கொண்டிருப்பவன் சேரன் செங்குட்டுவன்! சேரன் செங்குட்டுவன்!!...

[செங்குட்டுவனும் வேண்மாளும் இருக்கின்றனர்.]

வேண்: சுவையான கதையொன்று சொல்லுங்கள் அத்தான்!

சேரன்: சொல்லட்டுமா? சோழன் மகளை சேரன் மணந்தான்; சேரனுக்கு ஒரு செல்வன் பிறந்தான்; செல்வன் இந்தச் சிலையை மணந்தான்...

வேண்; தெரிந்த கதைதானே இது...

சேரன்; நடந்த கதைகூட....

வேண்: நடக்காத கதை யொன்று சொல்லுங்கள் அத்தான்!

சேரன்: சுவைக்காது கண்ணே அது!

வேண்: உம்...காதல் கதையொன்று...

சேரன், ஊஹூம்...இதோ புறநானூற்றிலே...

வேண்; போதும்; வீரக் கதைதானே...

சேரன்: வீரத்தை மணந்த காதல் கதை! தந்தையையும் கணவனையும் பலிகொடுத்த பெண்ணொருத்தி தன் மகனையும் போருக்கனுப்பிய புறக்காட்சி வேண்மாள்! கொஞ்சம் கேளேன்; நானே எழுதியிருக்கிறேன் புதிய நடையில்...

"காவிரிதந்த தமிழகத்துப் புது மணலில்
களம் அமைத்துச் சேரசோழ பாண்டிமன்னர்
கோபுரத்துக் கலசத்தில் யார்கொடிதான் பறப்பதென்று,
...இன்றுபோல்...
போர்தொடுத்துக் கொண்டிருந்த காலமது; அந்நாளில்
ஓர் களத்தில்,
தாய்நாடு காக்கத் தாவிப்பாய்ந்து செத்தார்
தந்தை என்ற சேதிகேட்டு, தணல்விழ் மெழுகானாள்
தமிழகத்துக் கிளியொருத்தி!
அனல்போலும் கண்ணுடனே, அயலூர் சென்றிருந்த
அவள்கணவனும் வந்திட்டான்!
புனல் போக்கும் விழியாலே அவள் போர்ச்செய்தி
தந்திட்டாள்!
தந்தை களம்பட்ட செய்திக்கோ தவித்தாய் என்றான்.
இல்லை அன்பா!

முல்லைசூழ் இந்நாட்டுப்படையிலோர்வீரர்குறைந்திட்டால்,
நல்ல உடையிலோர் கிழிசல் வந்தது போலன்றோ?
இனித்தடையின் றிநுழைவரேபகைவர் என எண்ணினேன்;
அடைபட்ட கண்ணீர், அணை உடைத்த தத்தான் என்றாள்.
அவன்,
குகைவிட்டுக் கிளம்பும் ஒருபுலியென,
புகைவிட்டுக் குமுறும் எரிமலையென,
பகைவெட்டிச் சாய்க்கும் வாளெடுத்தான்;
சூளுரைத்தான்; சுடர்முகம் தூக்கினான்;
சுக்குநூறுதான் சூழ்ந்துவரும் பகை என்றான்.
நாடு மீட்காமல், வீடு திரும்பேன் என்றான்!
நங்கையோ,
நகைமுழக்கம் செய்து நடந்திடுக கண்ணே என்றாள்!
திரும்பி வருவேனோ இல்லையோ
எதற்கும் இப்போது ஒரு முத்தம்
இந்தா திரும்பு என்றான்!
கொடுத்தான்—பின்தொடுத்தான்
பகைவர்மீது பாணம்!
போர்! போர்! போர்! எனவே
முழங்கிற்று முரசு ஒலி!
பார்! பார்! பார்! அந்தப் பைங்கிளியின்
உரிமையாளன்—பகைவர்மீது பாய்ந்து
கொல்லும் வீரம் பார்! - என்று
பட்டாளத்துத் தோழரெல்லாம் வியந்துரைத்தார்!
அந்தக் கட்டாணிமுத்தாளும் கண்வழியே சிரித்திட்டாள்,
களத்தினிலே அத்தானுக்கு
அடுக்கடுக்காய் குவிந்துவரும் வெற்றிகளைக் கேட்டுவிட்டு!
கோட்டைகள் விடுபட்டன! எதிரியின்
குதிரைக் கால்கள் உடைபட்டன!

வேழப்படை முறிபட்டது! வேல்கள் பொடிபட்டன!
எம். கொற்றவன் படைகள் கொட்டும் பேரிகை
கோடையிடியெனக் கேட்குது! கேட்குது! எனக்
குதித்திட்டாள் -புதுப்பண் அமைத்திட்டாள்!
வீரர்கள் வந்தனர்—வெற்றி உன் கணவனுக்கே என்றனர்!
வேந்தனின் தூதுவர் வந்தனர்-வாழ்த்துக்கள் வழங்கினர்!
வீட்டோரத்துத் தோழிகள் வந்தனர்—வெற்றி
நீட்டோலை வாசித்து மகிழ்ந்தனர்! அந்த அழகி,
ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள்—அப்போது,

ஏனந்த மனிதன் வந்தானே,
இறவுச் சேதி சொல்வதற்கு?—
என்னருமைப் பெண்பாவாய்
கண்ணல்ல—கலங்கதே!
களச் சேதி, கடைசிச் சேதி கேள்என்றான்—அந்தோ!
மாவிலைத் தோரணங்கட்டி, மணவிழா மேடைதன்னில்
வாழ்விலே ஒன்றானேப் என்று சொன்ன கண்ணாளன்—
மார்பிலே வேல்தாங்கி நல்ல சாவிலே வீழ்ந்துவிட்டான்—
ஆவிதான் போனபின்னும் உயிர்வாழும் ஆரணங்கு
அச்சடித்த தமிழ்ப் பதுமை—
கூவி அழுதாள்—கொத்தான மலர்
இந்தக் குடும்பம்!—
அதைக் கொத்தாமல் கொத்திவிட்ட
கொடும்சாவைப் பழித்தாள்—இழித்
துரைத்தாள்! "இனி என்ன மிச்சம்!"
கனி அழுகிப் போனதென்றும்
கதறி அழுதாள்!
பனிவெல்லும் விழிகாட்டி,
பனவெல்ல மொழி உரைத்து,
பள்ளியறைக் கவிபாடும்
நாளெல்லாம் மண்தானே?
இனி, இது, தூங்காத கண்தானே?
என அழுதாள்! அத்தான் பிணம்
கிடக்கும் களம் நோக்கித் தொழுதாள்!
சோகத்தால் வீழ்ந்துவிட்ட அவள் காதில், வெற்றி
வேகத்தால் பகைவர் தட்டும் போர் முரசம்
பட்டதுதான் தாமதம்;
கெட்டதுதான் கெட்டது நம்குடி—முழுவதுமே
பட்டொழிந்து போகட்டும் என எழுந்தாள்!
மட்டில்லாப் புகழ்கொண்ட நாட்டுக்கே அன்றி
வீட்டுக்கோ வாழ்வேன் என்றாள்—
வட்டிலிலே நிலாப்பார்க்கும் விதங்கண்ட தமிழ்நாட்டுமாதரசி,
தொட்டிலிலே இட்டு, தான் வளர்த்த தூயசெல்வன்
அட்டியின்றிக் கல்வி கற்க, ஆலமரத்தடி
ஆசானிடம் சென்றிருக்கும் நினைவு கொண்டாள்!
அங்கு சென்றாள்—அம்மா எனப் பாய்ந்தான்,
அழகுமிகும் மழலைமொழி அன்புத் தங்கம்!
அப்பா, தாத்தா, ஊர் திரும்பினாரோ என்றான்!
திரும்பிவந்து சாவூர் சென்றுவிட்டார்—

கரும்பே—நீயும்வா என்றழைத்தாள் !
"என்ன வாங்கி வந்தார்?" என்றான் !
மானம் ! மானம் ! அழியாத மான மென்றாள்—
மகனே ! அதைச் சுவைக்க நீயும் வருக என்றாள்.
வந்துவிட்டான்—குலக்கொழுந்து !
குடும்பவிளக்கு எரிந்துகொண்டே கூறுகின்றாள்—
"எதிரிகளின் படையெடுப்பால்—நம் குடும்பம் தழை
உதிர்த்துவிட்ட மரமாகப் போனதடா தம்பீ !
கவலையில்லை, களம் சென்றார்; மாண்டார்!
ஆனாலும் இந்த,
நிலம் உள்ளவரையில் 'மானங்காத்தார்' என்று
பெயர் பூண்டார் !

என் மகனே! நீயும் தோளில்,
பலம் உள்ளவரையில் பகையைச் சாடு !
பரணிபாடு ! இது உன்
தாய்த் திருநாடு!—உடனே ஓடு !" எனத்
தாவி அணைத்துத் தளிர் மகன் தன்னை,
சீவிமுடித்துச் சிங்காரித்து, ரத்தக்
காவிபடிந்த வாள் கொடுத்து,
"சென்றுவா மகனே, செருமுனை நோக்கி !"
என வாழ்த்திவிட்ட திருவிடத்துக்
காட்சிதனை போற்றிப் பாடாதார் உண்டோ—
திருமகளே! இந்தப் பூவுலகில்?...

புலவர்: [குறுக்கே வந்து] உண்டு; உண்டு!

சேர : என்ன ?

புல: அந்த உண்டு கொழுத்தவர் உண்டு உத்தமா! நம் வீரத்தைப் பழிப்போர் இந்த அவனியிலே உண்டு !

சேர: ஆ !

புல; வேந்தரும் அரசியும் தனித்திருக்கும் வெள்ளிமாடத்திற்கு வந்திருக்கிறேனே என்று வியப்படைய வேண்டாம். இதைவிட வியப்பான செய்தி ஒன்று கூறப்போகிறேன்...

சேர; புலவரே !

புல: நமது வீரம் பொல்லாத புல்லர்களால் தூற்றப்பட்டது மன்னவா!

சேர. தூற்றியவர்கள் இருக்கிறார்களா?

புல ; இருக்கிறார்கள்—வட நாட்டு மன்னர்கள் வால் நீட்டுகிறார்கள்!

வேண். பிறகென்ன? அவர்கள் வாலையா நீட்டுவார்கள்?

புல: கனக விசயர் இல்லாத காலத்திலே இமயத்திலே படை எடுத்தோமாம்—அவர்கள் ஆளும்போது கால் எடுத்து வைக்கட்டும் பார்ப்போம் என்று கர்ஜிக்கிறார்கள்!

சேர: நமது வாளைப் பழித்தார்கள்! அவர்களைத் தாள் பணிய வைக்கிறேன்! வேண்மாள்...வேலை வந்து விட்டது! வீரத்துக்கு சோதனை வந்து விட்டது! வருகிறேன்!

சேரன் சபை

[நாடகத்திற்கு தலைமை தாங்கும் சமரசம் உணர்ச்சி வசப்பட்டு எழுந்திருக்கிறார்.]

சாந்தம்: என்னங்க...ஒக்காருங்க...நீங்க தலைவரு.

★

[சேரன் செங்குட்டுவனுக்கும் கனக விசயருக்கும் நடைபெற்ற போரில் செங்குட்டுவன் வெற்றி பெறுகிறான்.]

சேரன்: வில்லவா! வெற்றி முழங்கும் இந்த இடத்திற்குப் பெயர் என்ன?

வில்லவன்: குயிலாலுவம்!

சேர: குயிலாலுவம்; குறித்துக் கொள்! இந்தப் பாறைகள் அனைத்தும் பைந்தமிழர் வீரம் தீட்டிய ஏடுகள்! வெற்றி மட்டும் போதாது வில்லவா: அந்த வீணர்களை விடக்கூடாது!

வில்: காஷாய உடையிலே ரிஷிகளைப் போல் எங்கோ ஓடி விட்டார்களாம் கனக விஜயர்கள்!

சேர: ஹா ... ஹா ...! புதுமையல்ல...அவர்களுக்கு உரியதான ஒரே பழக்கம் அதுதான்!

[கனக விஜயர் சாமியார் உடையில் கைது செய்யப்பட்டு கொண்டு வரப்படுகிறார்கள்.]

கனக விஜயர்: மன்னவா! மண்டியிடுகிறோம். மன்னித்து விடுங்கள்!

சேரன்: மன்னிப்பதா? நான் மன்னிப்பதா? தமிழ் நாட்டு மண்ணில் வந்துமண்டியிடுங்கள், அது உங்களை மன்னிக்கட்டும்!

வில்: மன்னவா! தமிழகம் திரும்பவேண்டாமா? புறப்பட்டு முப்பத்தி ரெண்டு திங்கள் ஆகின்றனவே!

சேர: புறப்படுவோம்—வில்லவா! அதற்குள் கண்ணகிக்குச் சிலை நாட்ட இங்கு கல் எடுக்க வேண்டுமல்லவா?

வில்: ஆமாம்!

சேர: அந்தக் கல்லைச் சுமப்பதற்குச் சரியான எருதுகள் கிடைத்து விட்டன! கனக—விஜயா! தமிழரின் வீரத்தின்மீது வீசினாய் ஒரு சொல்—இப்போது தூக்கு கல்!

வீரர்கள்: "சேரன் செங்குட்டுவன் வாழ்க!"

(மேடையில்)

பாபு: சபையோர்களே! இப்போது இந்த நாடகத்திற்கு தலைமை வகித்திருப்பவரும், சமாதானக் கமிட்டித் தலைவரும், எனது மைத்துனருமாகிய திரு சமரசம் அவர்கள் இந்த நாடகத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் பேசுவார்கள்.

[பாபு மாலை போடுகிறான்.]

சம: போடு; போடு! உம்—வேற யாரையாவது போட்டு இருக்கச் சொல்லலாம் மாலை. நீயே போட்டுட்டே, பரவாயில்லை. அத்தானும், மச்சினனும்னு பேசிக்கிவாங்க, [பேப்பரை எடுக்க, அது கீழே விழுந்து விடுகிறது.] சபையோர்களே! தாய்மார்களே! ஆ! நீ வந்திருக்கிறயா? என் பெண்ஜாதி தவிற! ஆங்: இந்த சேரன். அதாவது சேரன் செங்குட்டுவன் நாடகத்தை நீங்க பார்த்தீங்க—அதிலே இருந்து தமிழர் வீரம் எவ்வளவு முன்காலத்திலே இருந்தது என்பது உங்களுக்குநாடகத்திலே இருந்து தெரிஞ்சி இருக்கும்—உம், அதாவது முன்னே ராஜாக்கள் சண்டை போடுவதுன்னு ரெண்டு படைகள்வரும்-அங்க கொஞ்சம் சாவான்—இங்க கொஞ்சம் சாவான்—யாருக்கோ ஒருத்தனுக்கு வெற்றிகிடைக்கும். இந்தக் காலத்துலே சண்டை, சண்டையை ஏவி உட்டுட்டு, அதாவது ஏவி விட்டவன் அவன் அவன் பாட்டுக்க ஜாலியா போயிடுவான். ஒண்ணுமில்லாத ஜனங்கமேலே இந்த இந்த குண்டு குண்டு போட்டு, எல்லாத்தையும் சாக சாக, செத்து செத்து விடுவான் ஆ! ஒண்ணும் தெரியாத ஜனங்க செத்துவிடுவார்கள். ஆ. ஆ. வணக்கம்.

[சாந்தம் மேலே வருகிறாள்.]

சம: என்ன?

சாந்: ஒண்ணுமில்லீங்க. அந்த சேரன் செங்குட்டுவன் போட்டாரே வேஷம்—அவரைக் கொஞ்சம் பாக்கணும்.

(நாடக வசூலை கொள்ளையடிக்க சில ரௌடிகள் திட்டமிட்டு டீயில் தூக்க மருந்தை கலந்து)

ரௌ 2: இந்தம்மா, பாபுசார் இந்த டீயை கொடுத்துட்டு வரச் சொன்னார்!

ராணி: தேங்க்ஸ். வச்சுட்டு போங்க.

[ராணி டீயை குடிக்கிறாள்.]

—:★:—

சமரசம்: இதுதான் மிஸ்டர் ராஜா!

சாந்தம்: வணக்கம்.

சம: இது என் மனைவி சாந்தம்.

ராஜா; வணக்கம்.

சாந்: உங்க நடிப்பு ரொம்பப் பிரமாதம். தமிழ் நாட்டு சரித்திரத்துக்கே புது உயிர் கொடுத்துட்டீங்க. நான் இவ்வளவு எதிர்பார்க்கவே இல்லே.

ராஜா: ரொம்ப தேங்க்ஸ்.

சாந்: எங்க பாபுவைக் காணும்?

ராஜா: அவன் கலெக்‌ஷன்ஸ் பாக்கறதுக்கு புக்கிங்க்கு போயிருப்பான்.

சாந்: என்னுங்க—தம்பிக்கு ஒரு பரிசு கொடுக்கலாம்னு—

சம: கொடுத்தா போச்சு...

[என்று தன் அங்கவஸ்திரத்தை எடுக்க, சாந்தம் மோதிரத்தைக் காட்டுகிருள்.] உம்...உம்...கொடுத்துடு.

சாந்: தம்பி! இதை நீங்க தயவு செய்து வச்சிக்கணும். உம், நேரமிருந்தா வீட்டுப் பக்கம் வரணும்.

ராஜா; எனக்கு விடு தெரியாதுங்களே!

சாந்; தம்பியைக் கேட்டா சொல்லுவானே!

ராஜா: சரி, நான் விசாரிச்சுகிட்டு வர்ரேன்.

சாந்; அப்ப போவலாங்களா?

சம: சரி!

கிதாவின் தாய் தாயம்மாள்; நம்பளேப்பத்தி ஒன்னும் சொல்லாமலே போறீங்களே!

சம; உங்களேப் பத்தியா?

தா: உம்! டாட்டர்!

சம; ஓகோ! டாக்டரா? அவருரொம்ப நல்லமனுஷன்—யாரு நம்ப?

தா: என் கொழந்தையைப்பத்தி கேட்டேன்.

சம; ஓ! டாட்டரா!—இதுவா? ரொம்ப நல்லா அழகா இருக்கு. நல்ல புள்ளே—படிச்சிருக்கா?

தா: உம்—நடிப்பு?

சம; நடிச்சுதா? நான் கவனிக்கலே-ஓ பேஷ்! பேஷ்! பேஷ்—நல்ல நடிப்பு. பேஷ் பேஷ்-பிரமாதம்! பிரமாதம்!

(கலெக்‌ஷன் ரூம்பில் ராணியை கற்பழிக்க முயல்கிறன் பாபு)

[வெளியே வந்த ராணி, மயக்க மருந்து கலந்த டீயைக் குடித்திருந்ததால் தெருவில் நின்றிருந்த ராஜாவின் காரில் படுத்துவிடுகிருள். தன் வீடு சென்றதும் ராஜா பார்க்கிறன்.]

ராஜா: ஆகா! பொம்பளே! நம்ம வண்டீல எப்படி வந்தாங்க? இது என்னடா இது டேஞ்சரா போச்சு! அய்யய்யோ, இந்தாம்மா, யார் அது? இந்தா ஒண்ணேத்தான்! இது. இது, இந்தா பொண்ணு எழுந்திரி, கீழே வா—வா. கீழே எறங்கு, எறங்கு. அட அடடே. இந்தா. இந்தா, எழுந்திரி! இந்தா எழுந்திரிம்மா, எழுந்திரி. யார் நீ? யார் நீ?

ராணி: தூக்கம், ஊக்கும்.

ராஜா: யாரு? என்றது தூக்கமா? நான் யாருன்னு கேக்கிறேன். தூக்கமாம்ல, தூக்கம். இந்தா தூங்குறதுக்கு இதுதானா எடம்? இந்தாம்மா, ஒன்னைத்தான், என்னடா இது தர்மசங்கடமா போச்சு! இது என்ன உண்மையிலே தூக்கந் தானா, வேற ஏதாவது? பொண்ணை பாத்தா அப்படி தெரியலே, நல்ல பொண்ணு மாதிரிதான் தெரியுது. என்னடா இது சங்கட மாப் போச்சு. நடு ராத்திரிலே இந்தப் பொண்ணை எப்படி தனியா உட்டுட்டு போறது? எவனாவது கையிலே கழுத்திலே உள்ளதை, இந்தம்மா இந்தா, அங்கு வந்து தூங்கு. வா, வா, இந்தா, இந்தா. படி, படி,

ராணி; [மயக்கத்தில்] எதைப் படிக்கிறது?

ராஜா: ஆ! மாடிப் படி! ஸ்டெப்ஸ்! படி, ஏறிப்போற துல்ல அநதப் படி.

ராணி; எப்படி?

ராஜா: ஆ! இப்படி; வா! தூக்கமா இது. உம்.

ராணி; உம், உம். (முனு முனுக்கிருள்.)

ராஜா: அடடே! இந்தம்மா, இந்தா! இந்தா, உன்னைத் தான்! ஏ! பொண்ணு, எழுந்திரி, அடே என்னடா இது, இந்தா, எழுந்திரு, எழுந்திரு, எழுந்திரு, மெல்ல, மெல்ல, மெல்ல, வா இங்கே, தள்ளாதே, சே! நியூசன்ஸ்.

ராஜா; [யோசனை] சே, இது என்ன பைத்தியக்காரத் தனம்! தேவதை இல்லே, ரைட்டு, ரைட்டு, அப்புறம் யாரா இருக்கலாம்? எப்பாடி—தூக்கத்திலே பெரிய கும்பகர்ணன் சிஸ்டரா இருப்பாபோல இருக்கே. பொம்பளைங்க எல்லாம் இப்படி தூங்குனா ஊரு உருப்பட்ட மாதிரிதான். (தினசரி பத்திரிகை ஒன்றை எடுத்துப் படிக்கிருன்.)

மூதேவி என்று சொன்னவன் மூக்கறுபட்டான்—பத்தரை லக்ஷம் பேருக்கு வேலை யில்லாத் தொல்லை நீங்கிவிட்டது—போலீஸ்காரர்களையே ஏமாற்றிய பக்தாத் திருடர்கள்—உம், அய்யய்யோ! உம், நம்பகிட்ட ஒண்ணும் நடக்காது.

அன்புள்ள மகள் லீலாவுக்கு, உன் அப்பா தெரிவிப்பது. என்னையும் உன் அருமைத் தாயாரையும் ஏராளமான சொத்துக் களையும் விட்டுவிட்டு நீ இப்படிப் போகலாமா? நீ கூறியபடியே உனக்குகல்யாணம்செய்கிற ஏற்பாட்டைகைவிட்டுவிட்டோம். உனக்கு இஷ்டம் ஏற்படுகிறபோது நீயே கல்யாணத்தை முடிவு செய்து கொள்ளலாம், உன் கோபத்தை விட்டுவிட்டு தயவு

செய்து வீட்டுக்குத் திரும்பி வரும்படி கேட்டுக்கொள்கிறோம். கல்யாணத்துக்கு நிச்சயமாக பிடிவாதம் செய்யமாட்டோம். உன்னைக் காணாமல் மிகவும் நொந்து போயிருக்கிறோம். உடனே வரவும்.

உன் அன்புள்ள,
அப்பா.

ஊம், லீலா...

"உனக்கு இஷ்டம் ஏற்படுகிறபோது நீயே கல்யாணத்தை முடிவு செய்து கொள்ளலாம். என்னையும் உன் அருமைத் தாயாரையும், ஏராளமான சொத்துக்களையும் விட்டுவிட்டு..."

ராஜா: ஓகோ! பெரிய பணக்கார வீட்டு பொண்ணுபோல இருக்கு. சே, சே! நம்ம நினைச்சமாதிரி தப்பான பொண்ணல்ல, ஹும்...

[உடனே உள்ளே ஓடிப்போய் ராணிக்கு தலையணை தருகிறான்.

அடடே, அம்மா. இதோ பாருங்க, கொஞ்சம் எழுந்திருங்க இதோ. அம்மா. ஹு...மெல்ல, மெல்ல, அய்யய்யோ, பரவாயில்லை.

[பிறகு அறைக்கு வெளியே சென்று தூங்குகிறான். பொழுது விடிந்ததும் வேலைக்காரன் காப்பி கொண்டு வருகிறான்.]

வேலை; சார்! சார்! மணி ஒன்பதரை ஆகுது சார், எழுந்திருங்க சார், சா...! (போர்வையை விலக்க ராணியைப் பார்த்து)...யாரு?

(வெளியில் ஓடி ராஜாவின் மேல் விழுகிறான்.)

ராஜா: டேய், டேய்! யார்ரா அவன்?

வேலை: சார், சார். நான்தான் சார்!

ராஜா: நீயா? ஏண்டா இப்படி மேலே வந்து விழுந்தே?

வேலை: சார்! அது யார் சார் அது? ராத்திரி 'ட்ராமா' விலே 'ஆக்ட்' பண்ணினவங்களா?

(ராணி விழித்துப் பேசுவதை கவனிக்கிறாள்.)

ராஜா: கழுதை, அதுக்காகவா இப்படி ஓடிவந்தே? அது பெரிய எடத்துப் பொண்ணுடா! பேரு லீலா! அவுங்க அம்மா அப்பா கிட்ட சண்டை போட்டுக்கிட்டு வீட்டை விட்டு வந்துடுச்சு!

வேலை: என்ன சார் கோபம்?

ராஜா: அட, எனக்கென்னடா தெரியும்? நான் பத்திரிகையிலே படிச்சேன்.

வேலை; ரெம்ப அளகான பொண்ணு சார்!

ராஜா: ஆ...!

வேலே: சார், இந்தப் பொண்ணே...

ராஜா : என்னடா? அந்த பொண்ணுக்கு என்ன?

வேலே; எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு சார்...

ராஜா : என்ன சொன்னே?

வேலே; நீங்க கல்யாணம் பண்ணி என் கண்ணுல பாக்க ணும், சார்!

ராஜா : போடா, அது பெரிய இடத்துப் பொண்ணு! நம்மை யெல்லாம் கல்யாணம் பண்ணிக்குமா? டேய், நீ ஏண்டா அங்கே போனே? போடா அந்தப் பக்கம்—'மங்கி பிராண்டு!'

(ராணி ஓடிப்போய் படுத்து விடுகிருள்.)

ராஜா : ஹும்! பரவாயில்லே, பரவாயில்லே! ஒண்ணும் பயப்பட வேண்டாம். யாருமில்லே, ராத்திரி தூக்க மக்கயத் திலே ஏதோ...

ராணி : ஓகோ! அயாம் ஸ்சாரி! உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்தேன்!

ராஜா : பரவாயில்லே. அதனுல் என்ன?

ராணி : உம்...ராத்திரி...

ராஜா : இங்கதான் படுத்திருந்தீங்க—இந்த இடத்திலே தான் படுத்திருந்தீங்க!

ராணி : நான் எப்படி இங்கே ?...

ராஜா : நம் காரு...

ராணி ; ஓ காரு, சரி: சரி!

ராஜா : ஆமாம், காரு...

ராணி : நீங்க ?

ராஜா : நான் தான் ராஜா!

ராணி : எந்த ஊருக்கு ?

ராஜா அய்யய்யோ! என்னம்மா இது, டேஞ்சர் பண்றீங்க? சரிதான், சிஸ்டருக்கு இன்னும் தூக்கம் தெளியல போலிருக்கு! அம்மா, நான் எந்த ஊருக்கும் ராஜால்ல; என் பேரு...என் பேரு ராஜா!

ராணி ; ஓ, எக்ஸ்யூஸ்மி!

ராஜா : பரவாயில்லே, பரவாயில்லே!

ராணி : உம், இது...

ராஜா : நம்ப வீடுதான் ; நம்ப விடுதான்! நேத்தி நான் நாடகத்துலே 'ஆக்ட்' பண்ணினேனே. சேரன் செங்குட்டு வன்...நீ நாடகத்துக்கு வந்து பாக்கிலே!

ராணி : இல்லே, நாடகத்திலே டிக்கட்...

ராஜா : ஆமாம், ஆமாம், கெடச்சி இருக்காது...டிக்கட் கெடச்சி இருக்காது! ஏராளமான கூட்டம்—ஹவுஸ்புல்!

ராணி: ஆமாம்: ஆமாம்!

ராஜா: ஆமாம், ஆமாம்! ஆங், ஏம்மா, இவ்வளவு பெரிய எடத்துப் பெண்ணாயிருந்தும் உங்க அப்பா அம்மா மனசு வருத்தப்படும்படியா நடந்துக்கலாமா?

ராணி: உங்களுக்கு நான் யாருன்னு தெருயுமா?

ராஜா: ஓ! இதோ, இந்தப் பத்திரிகையிலே எல்லாம் போட்டிருக்கே. ஆமாம் லீலா! உங்கப்பா பேரையும், விலாசத்தையும் பத்திரிகையிலே போட்டா எல்லாருக்கும் யாருன்னு தெரிஞ்சுபோகும்: அதனாலே குடும்பத்துக்கு கெட்ட பேரு வருங்கிறதுக்காக ரொம்ப தந்திரமா 'நியூஸ்'—கொடுத்திருக்காரே! பெரிய சாமர்த்தியசாலிதான் உங்கப்பா!

ராணி: (சமாளித்து) ஆமாம்!

ராஜா: ஆமாம்! ஆ, காப்பி சாப்பிடுலே!...

ராணி: (காப்பி சாப்பிட்டுவிட்டு) அப்ப...நான் வர்ரேன்!

ராஜா: ஊஹூம்...இரும்மா! நில்லு...இந்தா நில்லு! உம்: உன்னைத் தனியா அனுப்ப மாட்டேன். உங்க வீட்டு வரைக்கும் வந்து உன்னை விட்டுட்டு வர்ரேன்!

ராணி: வேண்டாம், வேண்டாம்! வீட்ல ஏதாவது அனுவசியமா தப்பா நினைச்சுக்கு வாங்க!

ராஜா: லீலா! நீ என்னை ஏமாத்தப் பாக்கிறே! நான் உன்கூட வந்து உங்க பங்களா வாசல்ல உன்னை இறக்கி விட்டுட்டுதான் வருவேன்: யாரும் தப்பா நினைச்சுக்க மாட்டாங்க.

ராணி: உம். உங்களுக்கு ஏன் வீண் சிரமம்! என் கோபந்தான் தெளிஞ்சு போச்சே! நானே போயிடுவேன்!

ராஜா: இருந்தாலும், பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணு...நம்ப கார் இருக்கும்போது நடந்தா போறது! கொஞ்சம் இரு. இதோ வந்துட்டேன்!

———★———

(சமரசத்திடம் பாபு பணம் கேட்க சமரசம் பாபுவை ஏமாற்றுகிறார் தன்னிடம் பணம் இல்லையென்று.)

——0——

வேலை: (சாந்தம்மாளிடம்) அம்மா! அய்யா என்ன ஒரு மாதிரியா பயித்தியம் மாதிரி ஒளர்ராரு? காலையிலியே ஏதாவது...உம்

சாந்: ஹி...ஹி! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லேடா! என்ன விஷயம்?

வேலை: இல்லே; பாக்கி வசூல் பண்ணிக்கிட்டு வரச் சொன்னாரு. 300 ரூபா வாங்கியாந்து கொடுக்கப் போனேன். அதை பூ இங்கிராரு; மொட்டுங்கிறாரு: மாலையாக்கட்டி படத்துக்கு போடுங்கிறாரு!

சாங்; ஓகோ! விஷயம் இருக்கு; எவ்வளவுடா பணம் இருக்கு?

வேலை: முந்நாறு!

சாங்: கொண்டா இங்கே!

[ கீழே ]

பாபு: அத்தான்! எனக்கு நீங்க 200 ரூபாய் கொடுக்கலை யானா ரெண்டு மொழம் கயிறுகூடவா கிடைக்காம போயிடும்?

சம: உம். நீ திரிக்கிற கயிறு 2 முழம் என்ன; 20 கூட கெடைக்கும்!

பாபு: அத்தான். நீங்க கொடுக்கலே...?

சம: என்ன செய்வே?

பாபு: கழுத்திலே துணியைச் சுற்றி இப்படியே இழுத் திடுவேன், தெரியுமா?

சம: நல்லதுதான்! இழு, இழு. நெரம்புக்கு நல்லது!

பாபு: அத்தான்!

சம: உம்...

பாபு: இழுத்திடுவேன், அத்தான்.

சம: இழு இழு!

பாபு: அத்தான், அத்தான்...!

சாங்: (அங்கு வந்து) தம்பீ...தம்பீ! இந்த மாலையைப் போட்டுக்கடா! (பணத்தை மாலையாகக் கட்டிப் போடு கிறான்.)

சம: அடே பணத்தை...என்னது? என்னது?

சாங்: இது புது தினுசு பூமாலை?

சம: பூமாலையா?

பாபு: ஆ, ஆ! அத்தான், இந்த மாலைக்காகத்தான் நான் இவ்வளவு நேரம் காத்துகிட்டு இருந்தேன், தெரியுமா?

சாங்; தம்பீ! அதிலே 200 பூ இருக்கு, அந்த மாலையை தியேட்டர்காரரு கழுத்திலே போட்டுடு!

சம. டேய், வா இங்கே! பிடிடா இதை, பிடியிடா இதை பணத்தோட அருமை தெரியாமே அதை மாலையா கட்டு றீங்க! போ.

பாபு: வர்ரேன்த்தான்! இதுவா செவந்திப்பூ? இதுவா மொட்டு? வர்ரேன் அத்தான், வர்ரேன்!

சாந்: என்னங்க, அது?

சம: போயி...அதை...

சாந்: என்னங்க, இப்படி கோவிச்சுகிறீங்க! 200 ரூபா அவன் கேட்டான். பூ, மொட்டுன்னு சொல்லி அனுப்பிச் சுட்டீங்களே!

சம: அய்யய்யோ! சாந்தம்மா, கோவிச்சுக்காதே! சாந்தம்மா, நமக்கு இப்படி கோபம் வரக்கூடாது! அவன் செலவு பண்ணிடுவானே அதுக்காகப் பாத்தேன்!

சாந்; செலவழிச்சா என்ன! நம்பத் தவிற வேறு யாரு குடுப்பா?

சம; கோபிச்சுக்காதேன்னு சொன்னு கேக்க மாட்டேங்கிறியே; இந்தா எப்பவும் நாம சந்தோஷமா இருக்கணும்; கோபமே கூடாது! எங்க கொஞ்சம் சிரி!

சந், சிரிக்க முடியாது!

★

(ராணியை ராஜா காரில் கொண்டு வந்து சமரசம் வீட்டில் இறக்கிவிட்டு செல்கிறான்.)

0

(வீட்டை நோக்கிச் செல்லும் ராணியின் மனப் போரரட்டம்)

மனம்: என்ன உலகமிது...ம்...இரக்கமுள்ளவனைப்போல் நடித்து இழி செயலில் ஈடுபட்ட பாபு—அறிமுகமில்லாத என்னை அன்போடு உபசரித்து ஐஸ்வரியவான் வீட்டுப் பெண் என்று நம்பிட்ட ராஜா— இரவெல்லாம் எங்கே போயிருந்தாயம்மா என்று கேள்வி கேட்கப் போகும் அப்பா...அய்யோ! இரவு நான் எங்கே போயிருந்தேன்? எப்படி அப்படித் தூங்கி விட்டேன்? அப்பாவுக்கு என்ன பதில் சொல்லுவது? எனக்கொன்றும் புரியவில்லையே ..

நிழல். ஏன் புரியவில்லை ராணி? என்ன விழிக்கிறாய்? நானிருக்கும்போது எதற்காகப் பயப்படுகிறாய்? நான்தான் லீலா! அந்த ராஜாவிடம் பொய் சொன்னாயே அந்த லீலா நான் தான்.

ரர்ணி லீலாவா?

நிழல் ஆமாம், ராணி. கவலைப்படாதே. அபலைகளை, ஆலையிட்ட கரும்பாக ஆக்கிவிடும் உலகமடி இது–சாமர்த்தியக்காரர்கள்மட்டுமே பிழைக்கக்கூடிய ஜகமடி இது-பிறருக்குக் கேடு வராத அளவுக்குப் பொய் சொல்வதில் தவறில்லை பெண்ணே; தவறில்லை!

ராணி: அப்பாரிடமும் பொய் சொல்வதா?

நிழல்: இனமறியாத ஒரு ஆண்மகன் வீட்டிலே இரவு முழுவதும் தங்கியிருக்கிறாய்—'எந்தக் களங்கமும் இன்றி அங்குத் தூங்கினேன் அப்பா' என்று சொன்னால் அப்பா நம்பிவிட முடியுமா? எப்படியும், தவறு செய்யாதவள் நீ; அதனால்பொய் சொல்வதில் தவறில்லை.

ராணி. எப்படிப் பொய் சொல்வது?

நிழல்; இந்த லீலா இருக்கும்போது ஏன் அதற்காகக் கவலைப்படுகிறாய்? வா, போவோம்!

(வீடு வந்த ராணியை ஞானக்கண் இரவு ஏன் வரவில்லை என கோபிக்கிறார்)

★

[ராஜாவின் எலக்ட்ரிக் ஸ்டோரில்]

['டைப்பிஸ்ட் தேவை' என்ற போர்டைப் பார்த்து ராணி உள்ளே போகிறாள்.]

கரண்ட், வாங்க, நான்தான் கரண்ட்! இந்தக் கம்பெனிலே அசிஸ்டெண்ட்! ஒங்களுக்கு என்ன வாண்டு?

ராணி வெளியிலே போர்டு பார்த்தேன்.

கரண்ட்; ஓகோ!

ராணி: உங்க முதலாளியைப் பார்க்கலாம்னு வந்தேன்!

கரண்ட்: என்ன விசேஷம்?

ராணி, ஒங்க கம்பெனியிலே 'டைப்பிஸ்டு' தேவைன்னு...

கரண்ட்; அதுவா? எங்க கம்பெனிக்கி பொம்பளை டைப்பிஸ்ட் வேண்டியதில்லை! ஆம்பளைதான் வேணும்!

ராணி; அப்படி ஒண்ணும் போர்டுல போடலியே!

கரண்ட். அடடா! நான் அப்பவே சொன்னேன்; கேட்டானா அந்த போர்டு எழுதுறவன்! பரவாயில்லே அதை மாத்தி எழுதிடுறோம்.

ராணி, இந்தாப்பா! பிளீஸ், ஒங்க முதலாளியை பாக்கும்படியா ஏற்பாடு பண்ணேன்!

கரண்ட்: அவரை பார்க்க முடியாதும்மா! அவரு ஒரு மாருதி...

ராணி: மாட்டே?

கரண்ட். மாட்டேன், இந்த வம்புல நான் மாட்டவே மாட்டேன்!

(ராணி உள்ளே போகிறாள்.)

கரண்ட்; அம்மா அம்மா! இந்தாங்க. இந்தாங்க! அடடா, அடடா!

ராஜா. யாரு, லீலாவா? அடடடே...வா லீலா. வா, வா! உட்காரு, உட்காரு...

கரண்ட்: சார் சார், இந்தம்மா நான் சொல்ல சொல்ல உள்ளே வந்துட்டாங்க சார்!

ராஜா: கெட்அவுட், ராஸ்கல்! டேய், ஒன்னைத் தாண்டா, யாரு என்னன்னு தெரியாம ஒளறிகிட்டு போடா; போயி காப்பி, சோடா, கிரஷ் எல்லாம் வாங்கிட்டு வாடா; மூஞ்சியைப் பாரு...நீ ஒக்காரு லீலா, என்ன லீலா சௌக்கியமெல்லாம் எப்படி? வீட்ல தகராரு ஒன்றுமில்லையே? ஒங்க அப்பா, அம்மாவெல்லாம் உன் மேலே சந்தோஷப்பட்டாங்களா?

ராணி: ஓ!

ராஜா: ஆமா, நீ எப்படிநம்ப கடையைக்கண்டு புடிச்சே? இனிமே எங்க உன்னைப் பார்க்கப் போறோம்னுல இருந்தேன், நான். அது சரிதான்...ம், பரவாயில்லை...என்ன, கல்யாணமெல்லாம் இப்போ எவ்வளவு தூரத்திலே இருக்கு?

ராணி: அதான்...கல்யாணந்தான்...இப்ப பண்ணிக்கப் போறதில்லைன்னு சொல்லிட்டேனே!

ராஜா: ஆமாம். ஆமாம். அதான் அன்னைக்கே பேப்பர்ல பாத்தேனே...ஆமா, கல்யாணம் பண்ணிக்காம...?

ராணி: எனக்கு ஏதாவது வேலை பார்க்கலாம்னு ஆசை!

ராஜா: அடே, இது என்ன இது! புதுசா இருக்கே! நீ வேலை பார்க்கிறதாவது...பேஷ் பேஷ்! பணக்கார வீட்டு புள்ளைங்க, வேலை பார்க்கணும்னு சொல்ற குரலை இப்பத்தான் என் ஆயுசிலே முதல் முறையா கேக்கிறேன்!

ராணி: சோம்பேறித்தனமா வாழறது எனக்குப் பிடிக்கிறதே இல்லை. ஏதாவது கௌரவமான வேலை, ஏன் உங்க கம்பெனியில்கூட 'டைப்பிஸ்ட்' வேலை காலியாயிருக்கு போலிருக்கே...!

ராஜா: ஆமாம்...அந்த வேலை...நீ, நீ, என்ன லீலா, விளையாடுறே! என் கம்பெனி ரொம்ப சின்னக் கம்பெனி; நீயோ பெரிய வீட்டுப் பெண்ணு; இந்த வேலை எல்லாம் ஒனக்கு சரிப்பட்டு வருமா?

ராணி: பரவாயில்லை, அதனால என்ன, பழகின எடமா இருக்கிறது நல்லதுதானே?

ராஜா: அது சரிதான்...அது சரிதான்!

ராணி: அப்ப இன்னைக்கே வேலையை ஆரம்பிக்கிறேன். 'அப்பாய்ன்ட்மென்ட்' போடுங்க.

ராஜா: அப்பாய்ன்ட்மென்ட்... நமக்குள்ள எதுக்கு இதெல்லாம்? நீ வேலையை ஆரம்பி...அதெல்லாம் நானு... [கதவு தட்டப்படுகிறது] எஸ் கமீன்...

[கரண்ட் டீ கொண்டு வருகிறன்]

சாப்புடு...டேய் கரண்ட்! என்னடா பாத்துக்கிட்டே நிக் கிறே? இன்னேல இருந்து நம்ப கம்பெனிக்கு இவுங்கதான் 'டைப்பிஸ்ட்டு'...தெரியுமா?

கரண்டு; ஓ! [ராணி ராஜாவின் வேஷப் போட்டோவைப் பார்ப்பது கண்டு] நீங்க என்ன பாக்குறீங்க? சேரன் செங் குட்டுவன் நாடகத்திலே அய்யாவோட போஸ் இது.

ராணி: ஆ!...ஓ!

கரண்ட்; ஏங்க...அப்ப வெளியிலே மாட்டியிருக்கிற போர்டு...?

ராஜா; கழட்டு போ!

ராணி: நீங்க நடிகரா?

ராஜா: இல்லே, இல்லே. எங்கூட ஒரு அமைச்சூர்ஸ் 'குருப்' இருக்கு. அவுங்க எப்பவாவது நாடகம் போடுவாங்க. என்னை யும் ஆக்ட் பண்ண சொல்வாங்க; பண்ணுவேன். அன்னைக்கி கூட ஓங்கிட்டே சொன்னேனே, ஓனக்குஞாபகம் இருக்காது... ஆ!... நடிப்பே தொழிலல்ல...

ராணி: கலையிலே ஒரு ஆசை போலிருக்கு.

ராஜா; ஆமாம்; ஆமாம்! இப்ப உனக்கு வேலைசெய்ய னுங்கிற ஆசையில்லே, அது மாதிரி எனக்கு ஒரு ஆசை.

---★---

[ராணி "வேலையில்லாத் தொல்லையில்லை" என்று பாடிக் கொண்டிருக்கிறுள்.]

ஞானக்கண்: ராணி! ராணி...!

ராணி: அப்பா!

ஞான: என்னம்மா. ஒரே கொண்டாட்டமா இருக்கே?

ராணி: வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து விட்ட தப்பா!

ஞான: அப்படியா? உனக்கு வேலை கிடைச்சுட்டுதா? இந்த சந்தோஷமான செய்திக்கு நான் உனக்கு என்ன பரிசு கொடுக்கப்போகிறேன்!

[ராணி தன் கையிலிருந்த மலரை அவரிடம் கொடுத்து...]

ராணி: இந்தாங்கப்பா. இந்த ரோஜா மலரை நீங்களே என் தலையில்...

ஞான: என்ன?...

ராணி: ஹா, இல்லேப்பா! வேண்டாம்! நீங்க பார்த்து ஆனந்தப்பட முடியாத அலங்காரம் எனக்கு எதுக்கு அப்பா? [பூவை கீழே எறிந்து] உம். சாப்பிடுகிறீர்களாப்பா?

ஞான: உனக்கு வேலை கிடைச்சதே நான் சாப்பிட்ட மாதிரிதாம்மா!

ராணி: சரி, வாங்கப்பா!

—★—

[ராஜா வருகிறான்.]

கீதா: வாங்க...வாங்க!

ராஜா: பாபு இல்லே?

தாயம்மாள்: வந்துடுவாரு. வாங்க தம்பீ, வாங்க, உக்காருங்க. இப்பத்தான் உங்களைப் பத்தி பேசிக்கிட்டே இருந்தோம்!

ராஜா: என்னைப் பத்தியா?

தாயம்: ஆமாங்க.

ராஜா: என்ன?

கீதா: அன்னைக்கு நாடகத்திலே உங்க நடிப்பு ரொம்ப பிரமாதம்—நானே உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன்!

ராஜா: ஹு...ஹு...தேங்க்ஸ்!

தாயம்: கீதா 'போர்ஷனை'த்தான் ரொம்ப குறைச்சிட்டிங்களே தம்பி...உம்...ஒரு சீனுகூட முழுசா இல்லையே!

ராஜா: நான்என்னசெய்யறது? அதுக்கெல்லாம்பொறுப்பு பாபுதான். உம்...கதையும் அதுமாதிரி! பரவாயில்லை, அடுத்த புது நாடகத்திலே ..

வேலைக்கார சிறுமி பிரேமா: புதுநாடகத்துலே எனக்குக் கூட ஒரு சான்ஸ்' கிடைக்குமா?

ராஜா: ஆங்—

கீதா: சீ, போடி! பாத்தியாம்மா இந்தப் பொடிச்சை! உம்—எனக்கே சான்ஸ் கிடைக்கலியாம்—இவளுக்கு சான்சாம்ல சான்ஸ்!

தாயம்: பிரேமா! வாயை மூடு! அதுக சின்னஞ் சிறிசுக தமாஷா பேசிக்கிட்டு இருக்கும்போது—கீதை, தம்பியை மாடிக்கு அழைச்சிட்டுப் போறதுதானே!

ராஜா: அய்யோ, வேண்டாம்! நான் இங்கேயே இருக்கேன்!

தாயம்: சரி! வாடி, போவோம்!

[தாயம்மாளும் பிரேமாவும் போய் விடுகிறார்கள்.]

கீதா: புது நாடகம்னு எதுவா இருக்கலாம்?

ராஜா: பாபு உங்ககிட்டே சொல்லலே? ரெண்டு மூணு கதையிருக்கு! லைலாமஜ்னு, அனார்கலி, அகல்யா தேவி...

கீதா: கம்ப்ளீட் லௌவ் ஸ்டோரியா இருந்தா ரொம்ப நல்லாயிருக்கும் நம்ப ரெண்டுபேரும் காதலனும் காதலியா ஒரு 'புல்' நாடகத்திலே நடிக்கணும்னு எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு!

ராஜா: அதுக்கு என்னம்மா—ஆக்ட் பண்ணினு போச்சு!

கீதா: ஹூம், நாடகத்திலாவது என் ஆசை நிறை வேறட்டும்!

ராஜா: நீ என்ன சொல்றே?

கீதா: புரியலியா?

ராஜா: ஊஹூம்...!

கீதா: வசனங்களை மிடுக்காகவும் அழகாகவும் பேசத் தான் தெரியும் போலிருக்கிறது—அதன் உட்பொருளை புரிந்து கொஉள முடியதாக்கும்!

ராஜா: ஓஹோ...உட்பொருளைப் புரிஞ்சுக்கிட்ட சமயத் திலே கைப்பொருளுக்கே ஆபத்து வந்துடும்மா!

கீதா: புனிதமான காதல், பொருளை எதிர்பார்த்து ஏற் படுவதில்லையே!

ராஜா: இந்தாம்மா! நான் இங்க வந்தது பாபுவைப் பார்த்து புதிய நாடகம்பற்றி பேசுவதற்காக!

கீதா: அதைத்தான் நானும் சொல்றேன், காதல் நாடகம் நடத்துவோம்னு!

ராஜா; நான் சொல்ற நாடகம், ஆயிரம் பேருக்கு முன்னுலே அழகான மேடை போட்டு...

கீதா: அக்கினி சாட்சியா...

ராஜா: நீ என்னும்மா நீ டேஞ்சர் பண்றே—சரி, சரி, நான் போறேன்...பாபு வந்தான்னு...

கீதா: (சட்டையை இழுத்து) இருங்கள் போகலாம்!

[பாபு வருகிருன், அக்காட்சியைப் பார்த்தபடி]

பாபு: என்ன மிஸ்டர் ராஜா, எங்கே இந்தஜயம்?

ராஜா: வா பாபு! உன்னைப் பாக்க வந்தேன், நம்ப புது நாடக சம்பந்தமாக! அகல்யா நாடகத்துக்கு வசனமெல்லாம் ரெடியாயிருக்கு!

பாபு: இப்ப ஒன்னும் புது நாடகம் நடத்துவதாக உத்தேசமில்லே.

ராஜா: ஏம்ப்பா?

பாபு: சில பசங்க, கலையை ஆதரிக்கிறேன்; நாடகத்தை வளர்க்கிறேன்னு கதை அளந்துட்டு, சுகதம் கலையை வளர்க்க கிளம்பி விடுருனுங்க!

ராஜா: நம்ப அமைச்சூர் கம்பெனியிலே அது மாதிரி ஆளு யாருமில்லையே!

பாபு: ஏன் இல்லே? ராஜா வேஷம் போட்டவன் எல்லாம் தன்னை ராஜான்னு நினைச்சுகிட்டு அலையருன்கல்லே...

ராஜா: நீ என்ன சொல்றே?

பாபு: விளக்கம் வேறு தேவையோ? இத பார் ராஜா! இனிமேல் நீ நாடகம் கீடகம்னு சொல்லிகிட்டு இங்க வரக் கூடாது! என் நாடகக் கம்பெனியிலே உனக்கு வேலை கிடையாது!

ராஜா: அட இதோ பாருப்பா? நான் ஒண்ணும் உங்கிட்ட வேலை தேடி வரவில்லை! எங்க 'எலக்ட்ரிக் ஸ்டோர்'ஸிலே நான் கொடுப்பேன் ஏழு பேருக்கு வேலை—தெரியுமா? என்னமோ, நாடகக் கலையிலே உள்ள பிரியத்தினாலே வந்தேன். அவ்வளவு தான்! எனக்கும் நாடகம் நடத்தத் தெரியும்பா!

பாபு: அதை நிறுத்த எனக்கும் தெரியும்!

ராஜா: அட., நல்லா இருந்தியே-ஏன் உனக்கு திடீரென்று இப்படி மூளைக் கோளாறு?

பாபு: திடீர்னு ஒன்னுமில்லே!

ராஜா: ஓகோ! எப்பவும் அப்படித்தானா?

பாபு: ராஜா! உன்னை நான் மொதல் தடவையா மன்னிக்கிறேன். பிளீஸ் கெட்டவுட்!

○

கரண்ட்: கோபம் இல்லை சார்—வயத்தெரிச்சல்... பொறாமை. இத பாருங்க, நீங்க இல்லேன்னா அந்த நாடகக் கம்பெனி இல்லேன்னு ஊர்ல பேசிக்கிறாங்க. கம்பெனிக்கு சொந்தக்காரரு பாபு!...ஆனா பேரு உங்களுக்கு! அவருக்கு கோபம் வராதுங்களா?

ராஜா: ஏண்டா வருது அநாவசியமா?

கர. என்னாங்க இப்படி சொல்லிட்டீங்க...இந்த பாருங்க...இந்த எலக்ட்ரிக் கம்பெனிக்கு நீங்க சொந்தக் காரரு...கரண்ட் மாத்திரம் இல்லேன்னா எலக்ட்ரிக் கம்பெனி ஏதுன்னு ஊர்ல பேசிக்கிறதா வச்சுக்கிங்க...அப்ப உங்களுக்கு கூட கோபம் வரும்ல...?

ராஜா ஏய், என்ன சொன்னே...கரண்ட் இல்லேன்னா?

கர: என்னைச் சொல்லலே சார்...கரண்ட்...கரண்ட் கரண்ட் இல்லேன்னா எலக்ட்ரிக் கம்பெனி ஏதுன்னு சொன்னேன்...என்ன சார் இது, இதுக்கே கோபம் வருதே உங்களுக்கு! அதிலே வேற-அந்த அம்மா வேற...அது வேற ஒங்க கிட்ட சிநேகிதம்னு...வேற பேசிக்கிறாங்க. கோபம் இருக்குமா இருக்காதா...சார்...?

ராஜா: ஏய் கரண்ட், எப்படியாவது கண்டிப்பா நாடகம் நடத்தியே தீரணும்...

கர: நடத்துவோம்.

ராஜா: ஆறு ஹீரோயினு யார் ஆக்ட் பண்றது?

கர: நான் போட்டுக்கிறேன் சார்.

ராஜா: என்னது, நீ போட்டுக்கிறியா?...டேய் கழுதை! உன் மூஞ்சியை கண்ணாடியிலே பாத்தியா?...

கர: ஏன் சார்?...

ராஜா: ஹீரோயின்னு கதாநாயகிடா!

கர: ஒகோ! அப்படியா? அப்ப முடியாது! நான் ஹீரோவாக்கும்னு பாத்தேன்...

ராஜா: ஹீரோவா? ஒங்களை ஹீரோவா போட்டு நாடகம் நடத்த நான் என்ன அகஸ்தியர் நாடகமா நடத்தப்போறேன்..

[சிரிக்கிறார்கள். அப்போது ஒருவர் வருகிறார்.]

வந்தவர்: சார் பல்பு இருக்குதா?

ராஜா: டேய், போய் வியாபாரத்தை கவனி...போ...

கர: என்ன சார் வேணும் உங்களுக்கு?

வந்: அறுபது வால்ட் பல்பு ஒன்னு வேணும்!

கர: என்ன கலர்?...

வந்: என்னென்ன கலர் இருக்கு உங்ககிட்ட?

கர: பச்சை இருக்கு.. சேப்பு இருக்கு...நீலம் இருக்கு... ஊதா இருக்கு — டெக்னிக் கலர் — கேவா கலர் — எல்லாம் இருக்கு—எந்தக் கலர் வேணும்?

வந்; எடுங்க பார்க்கலாம்...

[ராஜா ராணியிடம்]

ராஜா: லீலா! நான் நாடக பார்ட்டி ஆரம்பிக்கிறதைப் பத்தி உன்னோட அபிப்பிராயம் என்ன?

ராணி: உம், தாராளமா ஆரம்பிக்கலாமே! ஆரம்பிச்சா எனக்குத்தான் வேலை அதிகமாகும்!

ராஜா: பின்னே இல்லே...

ராணி: ஆறு, வருமானம் நெறைய வரும்!

ராஜா: உம்...

ராணி: நாடக வரவு, கம்பெனி வரவு எல்லாம் நெறைய வருமே! 'இன்கம் டாக்ஸ்' கணக்கு எல்லாம் எப்படி காட்டப் போறீங்க?

ராஜா. எப்படிக் காட்டப் போறீங்களா? இது வரைக்கும் எப்படி காமிச்சேன்; அதெல்லாம் நம்பகிட்ட 'டுப்' கணக்கெல்லாம் கிடையாது!

ராணி. அதுக்கு இல்லீங்க! எனக்கும் ஏதாவது சம்பளம் போட்டீங்கன்னு, இன்கம் டாக்ஸ் கொஞ்சம் கொறையும் பாருங்க.. அதுக்காகச் சொன்னேன்!

ராஜா: ஓ! நீ அந்த வழியிலே போறியா? நான் இது வரைக்கும் அந்த வழியை கையாண்டதில்லே! எனக்கு இப்பத்தான் புரியுது—அதுக்கென்னு போட்டுக்கோ!

ராணி: எவ்வளவு?

ராஜா: உம்...முன்னூறு!

ராணி: முன்னூறு?

ராசா: ஏன், ரொம்ப கம்மியா இருக்கா? 500 போட்டுக்கோ...500 போட்டுக்கோ!

கரண்ட்: என்னுது, என்னுது? சார், சார்...என்ன சார் இது? கரண்ட் கண்டு பிடிச்ச நாள்ளே இருந்து இந்தக் கம்பெனியிலே வேலே செய்றேன் நான், என் சம்பளம் ஐம்பதுக்கு மேலே ஏறுல. நேத்து வந்த இந்த அம்மாளுக்கு ஐநூறு ரூபா சம்பளமோ?

ராசா: டேய், யார்ரா அவன், சுத்த கரண்டா இருக்கான்! இப்ப லீலாவுக்கு போட்ட சம்பளம் என்ன, உண்மையிலேயா கொடுக்கப் போறோம்? சும்மா இன்கம்டாக்ஸுக்காகத்தானே! 'அட்ஜஸ்மெண்டு'க்காகத் தானேடா! யார்ரா இவன்...அது பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணு; நம்ம கம்பெனி சின்னக் கம்பெனி! இந்த 500 ரூபா பிச்சைக் காசை வாங்கித்தான் அவுங்களுக்கு நெறையப் போவதா? அவுங்க என்னமோ பொழுது போக்குக்காக வேலே செய்யிறாங்க···சம்பளம் கிம்பளம்னு போட்டா அவுங்க கவுரவத்துக்கு கம்மிடா! இல்லேயா, லீலா?

ராணி: ஆமாம்!

கர: ஆகா, அப்படியா? அது சரி சார்...என்ன இருந்தாலும் இந்தப் பொய் கணக்கு எழுதறது எனக்கு புடிக்கலே சார்!

ராணி: ஆமாம்; எனக்குக்கூட பிடிக்கவே இல்லே!

ராசா: நீ சொல்லும்போதே எனக்குப் பிடிக்கலே! என்னமோ நீ சொன்னியேன்னு நான் சரின்னு சொன்னேன்! அப்ப சரி, கொடுக்காத சம்பளத்தை எழுத வேண்டாம்... இல்லே; லீலாவுக்கு சம்பளம் இல்லே! நீ போடா! நீ வேலேயைப் பாரு லீலா!

★

[வேலேக்காரன் வேலேக்காரி கண்ணம்மாவை காதலிக்க முயல அவள் மறுக்கிருள்.]

★

[ராணி வேலே முடிந்து ராசாவுடன் ஆபீஸைவிட்டு வெளியேறுகிருள்.]

★

[ராசா, ராணியைக் கொண்டுவந்து விட்டுப் போகிருன்.]

சமரசம்: யாரது? யாரோ வந்த மாதிரி இருந்ததே!

[அப்போது அவனிடமிருந்து புரு பறந்து ராணியின் தலே

மேல் உட்காருகிறது, ராணி நடக்க அது நகர்வது தெரிகிறது.]

சமரசம்: உம்...விட்டுடுவேனு! ஒன் மேலே எவ்வளவு பிரியம் எனக்கு- ஓடப் பாக்றியே!

[புறாவை பிடிக்க முயற்சிக்கிறார். சாந்தம்மாள் மாடியின் மேலிருந்து பாத்து விடுகிறாள், ராணி தப்பி விடுகிறாள்.]

—★—

சாந்தம்: என்னப்பா விஷயம்?

வேலைக்காரன்: ஒண்ணுமில்லேம்மா!

சமையல்காரன்: டேய், சும்மா இரு. இப்ப அய்யா, அந்த பொண்ணுகூடவேல்லே சுத்திக்கிட்டு திரியிராரு...

சாந்: ஆ! நீயும் பாத்துட்டியா?

சமை: என் கண்ணாலே பாத்தோம்மான்னு. அது இன்னைக்கி நேத்தா நடக்குது? அது எவ்வளவு நாளா நடக்குது...

வேலை; சும்மா சொல்றான் க. ஒண்ணுமில்லேம்மா!

சாந்; டேய், நீ சும்மா இரு, நீ அய்யா ஆளுல்ல, அவன் நேரே பாத்தவன் சொல்றான்! ஊகூம்...அப்படியா சேதி! சரி, சரி, ஒங்க வேலையைப் போயப் பாருங்க...ஏண்டா நீ நிக்கிறே?

வேலை; ரொம்ப நாளா இல்லீங்க. இன்னைக்குத்தான்!

சாந்; உம்...இன்னைக்கிதானு? வரட்டும் பேசிக்கிறேன்! (அப்போது சமரசம் வருத்தத்துடன் வருகிறார்.) உம். வாங்க சார்! வாங்க...வாங்க...இப்படி உட்காருங்க. விளையாட்டெல்லாம் முடிஞ்சாச்சா?

சம; அட கொஞ்சம் சும்மா இரு.

சாந்; ஓகோ! அதுக்குள்ளே போயிடுச்சேன்னு கவலை யாக்கும்!

சம; பின்னே இருக்காதா, விளையாடிகிட்டு இருக்கும் போதே...

சாந்; ஆமாம், ஆமாம்! பாதியிலே போயிட்டா கவலையாத் தானே இருக்கும்!

சம; நீ பாத்தியா?

சாந்; உம், அந்தக் கண்றாவியை நான் பாத்துக்கிட்டு தானே இருந்தேன்!

சம; கண்றாவியா? அடச் சீ கழுதை! ஓடிப் போயி டுச்சே அது ரொம்ப அழகு!

சாந்; ஊகூம்...அப்ப இருக்கிறது மட்டமா?

சம, மட்டம்னு சொல்லலியே! அது மாதிரி இலலே! ஆஹா, ஓடிப் போயிடுச்சே!

சாந்: அய்ய! நான் வேணும்னு போயி வரச் சொல்லட்டுமா?

சம; வரச் சொல்லட்டுமா...?

சாந்; ஓய்! உம்ம புத்தி வரவர ரொம்ப மட்டமா போவுது!

சம; இந்தா...இந்தா...என்ன இன்னைக்கு நீ சேஞ்சா யிட்டே?

சாந்; அங்க சேஞ்சாயிடுச்சில்ல. இனி இங்கயும் சேஞ்சாக வேண்டியதுதானே!

சம; இந்தா! என்ன நீ ஓன்பாட்ல கடகடான்னு பேசிக்கிட்டே போறே?

சாந்; கடகடான்னு ஒண்ணும் பேசலே; உண்மையைத்தான் சொல்றேன்!

சம; எந்த உண்மையை?

சாந்; அட, எங்கப்பா பெரிய ஆளுப்பா!

சம; ஆ! நீன்னு சொல்லிட்டே என்னை நீ? உம்...

சாந்; நீ...

சம; நீயா? எங்கே, இன்னொரு வாட்டி சொல்லு.

சாந்; நீ...நீ...

சம; நீ...?

சாந்; நீ....

சம; புருஷனைப் பாத்து நீங்கிறே. எங்கே இன்னொரு தரம் சொல்லு நீ.

சாந்; நீ,

சம: இரு, இந்தா வர்ரேன்.

வேலைக்காரன்; எசமான்...

(அவன் ஒரு பலகை கொண்டு வருகிறான். சமரசம் அதை வாங்கி மனைவியை அடிக்க ஓங்குகிறார்.)

சம; கொண்டா இங்கே...

வேலை, அய்யய்யோ, அது "சமாதானம் ஓங்குக!" சமாதானம்.

சம; உம்...

வேலை; எழுதி வாங்கிக்கிட்டு வந்திருக்கேன்.

சம; ஓகோகோ, சமாதானம் ஓங்குகவா? சரி, சமாதானம். சாந்தம்மா, சர்தான் வா. இப்படி வா...உட்காரு வந்து.

சாந்: உம்...அந்தப் பொருளை கொண்டாந்து ஒக்கார வச்சுக்க.

வேலை, என்ன எசமான் இது?

சம; அதானே புரியலே. நான் ஒலக சமர்தானத்துக்கு புரு வாங்கிகிட்டு வந்தா, அது வூட்டுச் சண்டையை வளர்த்

துடுச்சே. உம்...சரி, அதைக் கொண்டுபோய் அங்கே மாட்டு.

வேலை; அப்ப இதை இப்படி திருப்பி மாட்டிட்டான்?

(பலகையைத் திருப்பிக் காட்டுகிறான்.)

சம; என்ன? "சண்டை" ஓங்குஹ." சண்டை ஓங்குஹவா? ஆ...நீ எழுதினியா? அழிடா, அழி, அழி, அழி.

—★—

(ஞானக்கண் ராணியிடம் சம்பளம் வாங்கிவரும்படி கூறுகிறார்)

★

ராஜா: யாரது லீலாவா? என்ன லீலா, இன்னைக்கு இவ்வளவு லேட்டா வர்றே?

ராணி: ஒண்ணுமில்லே. இன்னைக்கு "டேட்" ஒண்ணுல்ல—அதனால்தான் கொஞ்சம் லேட்டு!

ராஜா: ஆமாம், ஆமாம். பால்காரன், தயிர்காரன்... அந்த...சர்வண்டு...இவங்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கணும்ல. அதனால லேட்டா வந்துருப்பே.

ராணி: அமாம்...ஆமாம்!

(கரண்ட் வால்வை அலட்சியமாக வைக்கிறான்.)

ராணி; இந்தா, கரண்ட்! 'வால்' வை இப்படி அலட்சியமா வைக்காதே! இதோ, நான் ஒருத்தி இருநூறு ரூபாயை எங்கேயோ அலட்சியமா காணும அடிச்சுட்டு, வீட்டுக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம முழிக்கிறேன். அது மாதிரி நீயும் இதை போட்டு ஒடச்சிட்டு முதலாளிகிட்ட என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம முழிக்காதே!

ராஜா: ஆமாண்டா, வால்வு ரொம்ப 'காஸ்ட்லி'டா... கீழே கீழே போட்டுத் தொலைக்காதே! அப்புறம் நம்ப நாடகத்துக்கு ஹீரோயின் கெடைக்காம அலையுறேமே, அது மாதிரி வால்வுக்கு அலைய வேண்டி வரும்!

ராணி: உங்க நாடகத்துக்கு இன்னும் கதாநாயகி கெடைக்கிலியா?

ராஜா: இல்லியே!

கரண்ட்: சார்! நான் ஒண்ணு சொல்றேன்னு கோவிச்சுக்காதிங்க!

ராஜா. நீ யேண்டா கோவிச்சுக்கிறே? என்னசொல்லு...

கரண்ட் நம்ப லீலா அம்மாவே கதாநாயகியா ஆக்ட் பண்ணுறது என்ன?

ராஜா. சே, சே. அது நல்லா இருக்காது!

கரண்ட்: ஏன் சார், ஆக்ட் பண்ணத் தெரியாதுன்னு நினைக்கிறீங்களா?

ராஜா: டேய். நான் அதைச் சொல்லலேடா! லீலா ஆக்டே பண்ண வேண்டாமே; சும்மா 'ஸ்டேஜி'லே வந்து நின்னு போதுமே! ஆக்ட் பண்ண மாதிரியே இருக்குமே!

கரண்ட்; அப்புறம் என்ன சார்...?

ராஜா: அது பெரிய எடத்துப் பொண்ணு நாம இப்படி சும்மா ட்ராமா. ஸிமாவிலே ஆக்ட் பண்ண கூப்பிட்டா அவுங்க வீட்டில ஏதாவது...

ராணி: இல்லியே! நான் எங்க ஸ்கூல்லகூட நல்லா நடிப்பேனே!

ராஜா: ஸ்கூல்ல யார் வேணும்னாலும் நடிக்கலாம். அது ஒரு பெரிய காரியமில்ல. ஆனா உண்மையான ட்ராமவிலே நடிக்கணும்; அப்பத்தான் அதனுடைய கஷ்டம் உனக்குத் தெரியும். ஆனா கரண்ட், லீலா நம்ம நாடகத்திலே நடிக்கிறேன்னு சொன்னா, அது இஷ்டத்துக்கு விரோதமா ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னு நெனைக்கிறேன். என்ன லீலா...?

ராணி: ஆமாம்!

கரண்ட்; அப்ப. நாம நாடகத்துக்காக தேடித்தேடி அலைஞ்ச கதாநாயகி கிடைச்சாச்சி!

ராஜா: கெடைச்சாச்சி...கெடைச்சாச்சி! என்ன லீலா, உனக்கு சம்மதந்தானே?

ராணி: உம்...

கரண்ட்; முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்!

ராணி: ஆமாம்—முயற்சி உடையோர்...அதெல்லாம் சும்மா! நானும் காலம்பற ஏழு மணியிலே இருந்து தேடி அலைஞ்சிகிட்டே இருக்கிறேன்: காணமப் போன பணம் கெடைக்கவே இல்லே!

ராஜா: பணம் காணமப் போச்சே...எவ்வளவு?

ராணி: சும்மா 200 ரூபா!

ராஜா; 200 தானே! டோண்டு ஒரி...நான் குடுக்கிறேன்.

ராணி: ஆ!

ராஜா: நான் குடுக்கிறேன்!

ராணி: வேண்டாம், வேண்டாம். ஒண்ணு ரெண்டா: ரூபா 200ல்ல!

ராஜா; பரவாயில்லே, வச்சிக்கோ! இந்தா லீலா, வச்சிக்கோ! காணமப் போன விஷயம் வீட்டுக்கேத் தெரிய வேண்டாம்!

கரண்ட்; இந்தாங்க...

ராணி; என்ன இது?

ராஜா; கதாநாயகி பாடம்—அது பாடம்! இது பணம்! அதை வச்சிக்கோ...இதைப் படிச்சிக்கோ!...

ராணி: சரி. பாடம் பண்ணி வைக்கிறேன்!

ராஜா: நாளைக்கு ஒத்திகை வச்சிருக்கு!

★

(அகல்யா நாடக ஒத்திகை)

இந்திரன்: கவலைப்படாதே அகல்யா என்னைத் தெரிய வில்லை உனக்கு? நான் தான் சூடப்படாமல் கிடந்த இந்த சுந்திர ரோஜாவைத் தேடி ஓடி வந்த தேவராஜன்! இந்திரன் என் பெயர்.

அகல்யா; ஆ. இந்திரன்.

இந்தி: ஆமாம்—அமரர் தலைவன்-ஐராவத முடையோன்.

அகல்; அக்ரமக்காரன். அடப்பாவி, அழியாத என் கற்பை அழித்து விட்டாயே. அபலைகளின் கற்பை சூறை யாடுவதுதான் அமரர் கோனுக்கு அழகோ? நீ தான் தேவாதி தேவனோ? தீராதி தீரனோ? அய்யோ; நான் ஏமாந்தேன். கண வனைப் போல் வேஷம் போட்டு என்னை ஏமாற்றி விட்டான் இந்தக் காதகன். அட கடவுளே. கற்பரசியை ஏமாற்ற வந்த இந்தக் கபட நாடகதாரியின் வேஷம் உன் கண்களுக்கும் தெரியவில்லையா?

இந்தி; கற்பரசியான உன் கண்ணுக்கே தெரியாதபோது வேறு எவர் கண்ணுக்குத்தான் தெரியும். போனதெல்லாம் போகட்டும்; பூங்கொடியே. இப்படி வா.

அகல்; மறுபடியுமா? அட மகாபாதகா, அடுக்குமா இந்த அக்ரமம்.

முனிவர்; அடுக்காது. ...அடுக்காது!. மிடுக்காகப் பேசும் மின்னல் கொடியே. ஆஸ்ரமத்துப் பெண்ணே. அந்தரலோ கத்து இந்திரனோடு கூடிக் கிடந்தவளே. உங்கள் காதல் வேட் டைக்கும் கயமைச் சேட்டைக்கும் இந்தப் புனிதமான ஆஸ் ரமந்தானா கிடைத்தது...அடே பொல்லாதவர்களே. பொட் டுப் பூச்சிகளே, புன்மைத் தேரைகளே.

இந்தி முனி புங்கவரே!...

முனி ஆ....

இந்தி மன்னித்து விடுங்கள். அன்பு, வடிவான தங் களுக்கு ஆத்திரம் வரலாமா?...தாங்களோ சாது...

முனி நீ செய்ததோ சூது. இனி எதையும் கேளாது என் காது. அமரர் தலைவனே இது ஆகாது. இந்தப் பாபம் ஈரேழு ஜென்மத்துக்கும் போகாது, பாபிகளே. பாதகரின் ஆவிகளே....

அகல் ஸ்வாமிகளே.

முனி என்ன...?

அகல் இந்திரன் இவ்வளவு பெரிய மோசக்காரன் என்று எனக்குத் தெரியாது...

முனி ஏன் தெரியாது? திலோத்தமையும், மேனகையும், ஊர்வசியும், ரம்பையும் இந்த தேவாதி தேவனின் தேவரடியார்கள் என்பது உனக்குத் தெரியாதா? ''தேவரனையர் கயவர்'' என்ற திருக்குறளும் புரியாதா? தெரிந்தும் பிழை புரிந்தாய். புரிந்தும் பிழை புரிந்தாய்.

அகல்: இல்லை ஸ்வாமி, இல்லை. தங்களைப் போலவே உருமாறி வந்து—கண்ணே, தங்கமே, தனியாத அன்பே, என்றெல்லாம் வர்ணித்தான்...

முனி நான் என்றைக்கடி உன்னை அப்படி அழைத்திருக்கிறேன்? அப்போதாவது புரியவேண்டாமா ஆள் வேறு என்று...

அகல் தாங்கள் என்று நினைத்தேன்—தணலில் வீழ்ந்து விட்டேன். ஆ....தவறிவிட்டேன்.

முனி ஆ. தவறிவிட்டாய் தவமுனிவன் பத்தினியே. வேறு மனிதனுக்கும்—விட்டு மனிதனுக்கும் வித்தியாசம் உணர முடியாத வித்தைக்காரியே. உன் சொத்தைக் காரணத்தை என்னால் நம்பமுடியாது...அதைப்போல் இந்த சூழ்ச்சிக்காரனையும் நம்பமுடியாது...எடா இந்திரா. பிறன் மனைவியின் கற்பை கெடுத்த உன் உடம் பெல்லாம்...இது...இது வாகப் போகட்டும் அடி அகல்யா. இந்தா நீயும் பிடி சாபம்...

(என்றதும் ராணி தன் புடவைத் தலைப்பை ஏந்துகிருள்.)

ராஜா போ ராணி இப்படியெல்லாம் ஒண்டல் செஞ்சா எனக்கு ஆக்ட் செய்ய வராது–ஆமாம்—.

ராணி நான் உண்மையைச் சொல்லட்டுமா? எனக்கு என்னமோ இந்த நாடகமே பிடிக்கலே. அகல்யா வேஷம் என்னாலே போட முடியாது...

ராஜா அப்ப ஒண்ணு செய்யி முனிவர் வேஷம் நீ போடு. அகல்யா வேஷம் நான் போடுறேன்...

ராணி. ஜனங்க தியேட்டர்ல என்ன போடுவாங்க தெரியும்ல!

ராசா: நீ சொல்லித்தான் தெரியணுமோ! சரி லீலா. அகல்யா நாடகத்தை இதோட நிறுத்திட்டு வேற புது நாடகம் நடத்துவோம்.

ராணி என்ன நாடகம்?

ராசா ஹாஸ்ய நாடகம் நடத்துவோம் — படுக்கைப் புரட்சி...

ராணி ஆ!

ராசா; நாடகம்—நடத்துவோம்.

கரண்ட்: அப்ப அகல்யா?

ராசா. அவதான் கல்லாயிட்டாளே!

ராமர் வேஷ ராமன்: கல்லாயிட்டாளா ? அப்ப நான் மிதிக்க வேண்டியது பாக்கியிருக்கே!...

ராசா: அட யார்ரா இவன். இங்கு நாடகமே ஸ்டாப்பு, இவரு ராமர்வந்துட்டாரு சாப விமோசனம் பண்ண! போடா. அப்ப லீலா,வா,உன்னே விட்ல கொண்ட உட்டுட்டு வர்ரேன்... டேய், எல்லாத்தையும் எடுத்து வைங்கடா.

—★—

[ராணி ராஜாவின் காரில் வந்து இறங்குகிருள்]

ராணி: தேங்ஸ்

ராசா: மென்ஷன்...நோமென்ஷன்.

[ராசா போகிருன். கொஞ்ச தூரம் சென்றதும் காரின் பின் 'சீட்'டில் ராணி மறதியாக விட்டுச் சென்றுவிட்ட பொட்டலத்தைப் பார்த்துவிடுகிருன். அதைத் திருப்பிக் கொடுக்க காரில் திரும்பி வருகிருன். சமரசத்தின் வீட்டு வாசலில் நாய் விரட்டவே, ஜன்னல் வழியே படர்ந்திருந்த கொடியைப் பிடித்து மேலே ஏறி, சாந்தம்மாவின் அறையில் குதிக்கிருன். சாந்தம்மாள் தூங்கிக்கொண்டிருக்கிருள்]

ராஜ: சாந்தம்மா! சமரசம் வீடுல்ல இது? அய்யய்யோ. என்ன பண்ணுறது?

(அங்குள்ள பூத்தொட்டியை கீழே தட்டி விடுகிருன். அதை எடுத்து வைக்கும்போது தன் கையிலுள்ள பொட்டலத்தை அங்கேயே வைத்துவிட்டு ஓடுகிருன்.)

சம; திருடன் பிடி, உடாதே.

ராஜா, சார்...சார்...

சம; அடே ராஜா. ராஜா,

ராஜா: சார்...சார்...அய்யய்யோ.

சம; டேய், முருகா, சங்கரா, எல்லாம் வாங்கடா. டேய் பாபு...மச்சிஞெ. ஏ...மைத்துனரே....புடி உடாதே.

பாபு; என்ன? என்ன இங்கே?

சம: உடி புடாதே.

பாபு: என்ன...என்ன?

சம; அங்க...அங்க...டேய், இங்கே யாராவது ஓடுறதை பாத்தீங்களா?

வேலே: பாக்கலீங்க.

சம: பாக்கலல்ல...?

வேலே; பாக்கல.

சம; சரி, போயி படுத்துகுங்க. அங்கே...பின்னுலே சமையல் கட்டுக்கு போயிடணும். போங்க, உம்...

பாபு; என்னத்தான், என்ன நடந்தது?

சம: உம்—அந்த ராஜாவை ஏ வரச்சொன்னியா?

பாபு: ரா்ஜாவையா? சொல்லலியே. ஏன்?
சம: சொல்லலே?...
பாபு: சொல்லலியே...
சம: வந்துட்டானே...!
பாபு: எங்கே...?
சம: இங்க வந்துட்டான்...!
பாபு: எப்போ?...
சம: மெத்தைலேயிருந்து ஓடிவந்தான்—நான் பாத்தேன்!
பாபு: ஆ!...
சம: கண்ணுல பாத்தேன்! அவனே உடப்படா்து... மச்சான் போச்சி; போச்சி... நீ போயி அவனே புடிச்சி கொண்ணுபோடு!
பாபு: அத்தான்...
சம: கொண்ணு புடு!
பாபு: அத்தான், பாத்துகிட்டே இருங்க...இன்னிக்கி முடிவுதான்!

சம: மச்சான்...ஆ...சமாதா்னம். சமாதானத்தோடேயே கொல்லு. புடிச்சி கொண்டா எங்கிட்ட ஆ...பாவி.

(சாந்தத்தின் அறைக்குப் போகிறார். அங்கு ரா்சா் வைத்து விட்டு ஓடிய ராணியின் பொா்ட்டலத்தை எடுக்கிறார்.)

சம: இது என்ன? ஜாக்கெட்டு! புடவை! ஆ. இது நான் வாங்கிக் கொடுக்கலியே! எப்படி இது வந்தது? ஆ... உம்...[சந்தேகத்துடன் பீரோவில் வைத்துவிட்டுப் போகிறார்.]

★

[சாந்தம்மாள் 'முதியோர் காதல்' என்ற புத்தகத்தை பீரோவில் வைக்கச் சென்றவள், அங்கு புதிதாக இருக்கும் பொட்டலத்தை எடுக்கிறாள்.]

சாந்: புடவை! இது நான் வாங்கலியே! ஓகோ, இவ்வளவு தூரத்துக்கு முத்திப்போச்சா? அமைதியா இருந்து தான் ஆளை கையும் களவுமா புடிக்கணும்!

[அதை எடுத்துக்கொண்டு போகிறாள்.]

★

[ராஜா சமரசம் வீட்டிலிருந்து தப்பி வந்த விபரத்தை கரண்டிடம் கூறி அதற்கு மன்னிப்பு கேட்கப் போவதாக வும் கூறுகிறான்.]

★

[ராஜா வருகிறான்.]
சாந்தம்: அடடே தம்பி! வாங்க, வாங்க!
ராஜா: வணக்கம்!
சாந்: முன்னலேயே வா்ரேன்னு சொன்னிங்க!
ராஜா: ஆமாங்க!

சாந்: நல்லவேளை, இப்பவாவது வந்தீங்களே!
ராஜா: ஆமாம்.
சாந்: உட்காருங்க, ஆ...முருகா காப்பி கொண்டு வா!
ராஜா: ஆ!...இல்லீங்க. பரவாயில்லீங்க. காப்பி நான் வரும்போதுதான் சர்ப்பிட்டு வந்தேன். நானு இங்கே வந்தது...அதாவது நேத்து நான் இங்கே வர்ரத்துக்கு வரும் போர்து...அந்த நாய் என்னை...க...
சாந்; அப்ப நேத்து வந்துட்டு நாய்க்கு பயந்து போயிட்டீங்களா?
ராஜா: ஆ!...இல்...
சாந்: பரவா இல்லே...உட்காருங்க!
ராஜா; இல்லீங்க! நீங்க ஒண்ணும் என்னை வித்தியாசமா நினைச்சுக்கப்படாது...இந்த நாய் என்னை கடிக்க வந்ததுனுல தான்...
சாந்: அந்த நாய் கடிக்காது; சும்மா கொலைக்கும்.
ராஜா: அய்யய்யே! இல்லியே! அந்த நாய் என்னைக் கடிக்கவந்ததுனுலதானே நான் அங்கே இங்கே ஓடி, சுத்தி கித்தி கடைசியிலே...
சாந்: வீட்டுக்கே போர்யிட்டீங்களா?
ரர்ஜர்: ஆ! அய்யோ! அய்யோ! இது!...
சாந்: நீங்க ஒண்ணுக்கும் பயப்பட வேண்டியதில்லே, நேரா வந்துட வேண்டியதுதான்!
[அப்போது சமரசம் வருகிருர்.]
சமரசம்; உம்...
ராஜா: சார்...
சம: வந்துட வேண்டியதுதான்!
ராஜா; வணக்கம் சார்!
சம: வச்சுக்க!
ராஜா: நேத்து ராத்திரி இந்த நாயி கடிக்க வந்து...
சாந்; இப்பத்தானே சொன்னேன், அந்த நாய் கடிக்காதுன்னு. ஆமா, நீங்க புது நாடகம் நடத்தப் போர்றதா கேள்விப்பட்டேனே!
ராஜா: ஆமாங்க, அகல்யா நடத்திரதா இருந்தோம்; அது...
சம: யப்பா...ஏய்யப்பா! அகல்யர்தானே, பஷ்ட்டு நாடகம் நடத்து—நல்ல நாடகம் நல்லா நடத்து! அவனையே அகல்யா போட்டுக்க...
சாந்: ஆ! அவரு கௌதம முனிவர் போட்டுக்குவாரு!
சம: ஆமா! அப்புறம் நீ இந்திரன்! நாடகம் முடிஞ்சுது...!
ராஜா: ஆமாங்க...ஆமா! ஆ...சரி! என்ன சார், ரொம்ப கோபமா இருக்கீங்க போலிருக்கு?

சம: என்ன கோபம்? நான் கோவிச்சு என்ன...

சாந்: ஆ...! ஆ...! இல்லே இல்லே! அவரு சமாதான கமிட்டிக்கு மெம்பர்ல, அவரு அப்படித்தான் பேசுவாரு! நீங்க சொல்லுங்க, என்ன நாடகம்?

ராஜா: அது...ஏதாவது சமூக நாடகம் நடத்தலாம்ன்னு, நீங்க அதுக்கு கண்டிப்பா...

சாந்: நான் கண்டிப்பா வருவேன்!

ராஜா: ஆ! சரிங்க, சார்...

சம: என்ன?

ராஜா; நீங்களும் அதுக்கு கண்டிப்பா...

சம: அங்க...அங்க...சொல்லிட்டில்லேப்பா...?

ராஜா: சொல்லிட்டேன்!

சம: சொல்லீட்டில்ல...போதும், போதும்!

ராஜா: நீங்க கோவிச்சுக்கப்படாது!

சம: கோபம்...என்ன கோபம்?

சாந்: நீங்க போங்க, நான் பாத்துக்கிறேன்!

ராஜா: ஆ! சரிங்க, சார்...அப்ப நான்...

சம: ஆ!...போ நீ! போ...போ நீ!

[போகிறான். வேலேக்காரன் வருகிறான்]

வேலே: இது சந்தேகந்தான்!

சம; என்னடா சந்தேகம்?

வேலே: நம்ப கண்ணு மாடு போட்டு இருக்கல்ல...

சம: கண்ணு மாடு போட்டு இருக்கா? கண்ணு வலே வீசுது...வலே!

வேலே: இல்லீங்க...நம்ப மாடு கண்ணு போட்டு இருக்கல்ல...

சம: உம்...

வேலே. அது பொழக்கிறது சந்தேகம்தான்னு சொன்னேன்!

சாந்: எப்படிடா பொழைக்கும்? மனுஷன் நல்ல புத்தியோட இருந்து மாடு வாங்கிகிட்டு வந்தால்...

வேலே: ஆமா...

சம: ஏய்! பொம்பளே நல்ல புத்தியோட இருந்து அதை பாதுகாத்தால்ல...

வேலே: ஆமா...!

சாந்: பொம்பளே புத்தியோடதான்டா இருக்கா!

சம: புத்தியோட இருக்காளா?

சாந்: இல்லியா?

சம: இல்லே! இல்லேங்கிறதுக்கு நான் ஆதாரம் காட்டுறேன்!

[உள்ளே போய் பீரோவில் தேடுகிருர், பொட்டலத்தைக் காணுததால்...]

இந்தா! அது வச்சு இருந்தேனே. அது எங்கே?

சாந்: அதை ஏன் கேக்குறீங்க? அவதான் வர்லியே... ஓகோ...நீங்களே கொண்டு கொடுத்துடலாம்னு கேக்கிறீங் களா?

சம: என்ன. அவ கிவன்னு உளர்றே?

சாந்: என்ன உளர்றேன்?

சம: உம்...

சாந்: உண்மையைத்தான் சொல்றேன்...மனுஷன் நல்ல புத்தியோட இல்லேங்கறதுக்கு நான் ஆதாரம் காட்டுறேன்!

[பொட்டலத்தைத் தேட, அது கிடைக்கவில்லை]

—★—

(ராணியை ராஜா நாடகத்தில் நடிக்கக்கூடாது என்று பாபு கேட்டுக்கொள்கிருன்)

—★—

(நாடகம் நடக்கவிடாதபடி பாபு ரௌடிகளை தூண்டு கிருன்)

—★—

[படுக்கைப் புரட்சி நடந்துகொண்டிருக்கும்போது குழப்பம்]

ராஜா: அய்யோ! என்னடா இது கலாட்டா? லீலா... லீலா...எங்கே ஓடுறே? எங்கே ஓடுறே?...அடே கரண்ட், என்னடா கலாட்டா இது? ஆக்டர் டிரஸையெல்லாம் ஒண்ணு ஒண்ணு கழட்டு!

ஒரு ரௌடி: படுக்கைப் புரட்சியா நடத்துறீங்க!

(சண்டை நடக்கிறது)

பல குரல்கள்: போலீஸ்! போலீஸ்!

[ராஜாவும் ராணியும் தப்பி ஓடிப்போய் ஆற்றில் விழுந்து நீந்தி கரைசேருகிருர்கள்.]

—★—

(நாடகத்தில் கலகம் ஏற்பட சமரசம் அமைதி படுத்த முயல்கிருர்)

—★—

ராஜா: லீலா...லீலா...என்ன லீலா, பயந்துட்டியா?

ராணி: இதெல்லாம்எனக்கு ஒண்ணும்பிடிக்கவே இல்லே!

ராஜா: எது?

ராணி: நாடகம்! நாடகம் நடத்துனீங்களே அது!

ராஜா: ஓகோ! கலாட்டா வந்துடுச்சேன்னு கவலேப்படு றியா? இதெல்லாம் சகஜம் லீலா!

ராணி: உங்களுக்கு சகஜமா இருக்கலாம்; எனக்கு சங்கடமாயிருக்கு! கலாட்டாவுல ஒரு கல்லோ, கம்போ தலையில்பட்டிருந்தா என்ன ஆகிறது?

ராசா: என்ன ஆயிருக்கும்? கொஞ்சம் ரத்தம் வந்திருக்கும்! அவ்வளவுதான்! லீலா! இந்த ஒடம்பு எவ்வளவு தியாகத் தழும்புகளை ஏத்துகிட்டு இருக்கு தெரியுமா? இப்ப நம்ம நாடகத்திலே கலாட்டா நடக்குதேன்னு பாக்கிறியா? நான் இதுக்கெல்லாம் ஒண்ணும் பயப்படமாட்டேன்; இதெல்லாம், பல தியாகத் தழும்புகளை ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தான் இருக்கவேண்டும்! கல் விழும்; கம்பு போடுவான்; காட்டாறு குறுக்கிடும். இதுக்கெல்லாம் கலங்கக்கூடாது லீலா! காதல் பாதைன்னு சாமான்யமா என்ன?

ராணி: என்ன? என்ன? என்ன பாதை?

ராசா: பாதை...பாதை...கால் பாதை...ரோடு

ராணி; என்ன ரோடு?

ராசா: ரோடு...ஈரோடு! ஈரோடு!

ராணி: என்ன ஈரோடு?

ராசா: இல்லை லீலா! நீ ஈரத்தோட இருக்கிறியேன்னு சொல்லவந்தேன்! *அது* குளுவுருலே நாக்கு குழறி ஈரோடுன்னு வந்துடுச்சி! பரவாயில்லை...காஞ்சி! காஞ்சி...!

ராணி; என்ன காஞ்சி...?

ராசா: தலை காஞ்சிடுங்கிறேன்...ஈரத்தோட இருக்கியே, லீலா, ஜுரங் கிரம் வந்துடப்போவுது...நான் ஒரு பொடவை தர்ரேன் கட்டிக்கிறியா?

ராணி: எங்கே யிருக்கு?

ராசா: ஒனக்கு வேணும்னு என் வயத்தை கிழிச்சில்ல எடுப்பேன்...இந்தா! (வயிற்றிலிருந்து எடுத்துத் தருகிறன்)

ராணி: ஒங்களுக்கு?

ராசா: நான் ஒண்ணுதனே எடுத்துவச்சேன்!

[ராணி உடைமாற்றிக் கொள்கிருள்]

ராசா: லீலா...உம்...வா, வா! குளிரு அடிக்குதுல்ல?

ராணி: ஆமாம்!

ரர்சா; ஒனக்கும் குளிரு அடிக்குதுலல...

ராணி: ஆ...மா...ம்!

ராசா; எனக்கும் குளிரு அடிக்குது!

(அங்குள்ள ஒரு சிலையைக் கண்ட ராணி திடுக்கிட்டு)

ராணி; ஆ!...

ராசா; பயப்படாதே! பயப்படாதே!

ராணி: என்ன இது?

ராசா: இது...அதான், இந்த இது...அடடே இந்த இதுல்ல இது வாயில இருக்கு வரமாட்டேங்குது...

ராணி: அப்ப துப்பிடுங்க...

ராஜா: அது முடியாது! ஆம்...லவ்மீட்டர்! லவ்மீட்டர்!

ராணி: என்ன மீட்டர்?

ராசா: அதான், காதலே அளக்கும் கருவி!

ராணி; என்ன கருவி?

ராசா: ஆ! அதாவது மனசு களங்கம் உள்ளவங்க இதைத் தொட்டா 'பக்கு'ன்னு கடிச்சிபுடும்! களங்கம் இல்லாதவங்க தொட்டா ஒண்ணும் பண்ணாது! ஆ!...ஒனக்கு ஒண்ணும் இல்லேன்னு நினைக்கிறேன், களங்கம் இல்லேன்னு நெனைக்கிறேன்! நீ கையை வையி!

ராணி: உம்...நான் மாட்டேன்.

ராஜா: அப்ப ஒனக்கு களங்கம் இருக்கு! களங்கம் இருக்கு!

ராணி: எனக்கொன்னும் களங்கம் இல்லே.

(கையை வைக்கிருள்)

ராசா: அய், ஒன்னுஞ் செய்யலே, அப்ப ஒனக்கு களங்கம் இல்லே. எனக்கு மட்டும் என்னவாம்? நானும் வைக்கிறேன்.

(வேண்டுமென்றே "ஆ" என்று அலறுகிருன். அவள் அவன் கையைப் பிடித்து இழுக்கிருள்)

ராசா: லீலா...லீலா... மீனைப் பாத்தியா மீனு?

ராணி: எங்கே?

ராசா: உன் கண்ணுல.

ராணி: சரி...சரி...நிறுத்துங்க. ஒங்க போக்கு எனக்கு புரிஞ்சிடுச்சி.

ராசா: அய்....என் போக்கு புரிஞ்சிடுச்சா? ஆனு உன் போக்குதான் எனக்கு இன்னும் புரியலே. கொஞ்சம் புரிஞ்சி கிட்டு வருது ஆனு?...

ராணி; என்ன?

ராசா; ஒண்ணுமில்லே. அன்னைக்கு, நீ அந்த சேலே ஜாக்கெட்டு பாக்கெட்டை, என் காரிலேயே மறந்துட்டு...வச்சுட்டு...போயிட்டியா? நான் எடுத்துகிட்டு...ஒன்கிட்டகொடுக்கிறதுக்கு வந்தனு? வந்தா .திடீானு சமரசம் வீடு...

ராணி; சமரசம் வீடா?

ராசா; ஆமாம் அங்குள்ள அந்த நாயிகூட என்னை துரத்து துரத்துனுன் துரத்தி...வெரட்டு வெரட்டுன்னு வெரட்டி...நான் ஓடு ஓடுன்னு ஓடி...

ராணி; ஓகோ. ஓடியாடி கடைசிலே நம்ப வீட்டுக்கு பக்கத்து வீடு சமரசம் வீட்டுக்குள்ள புகுந்துட்டீங்களா?

ராசா; ஆமா! அந்த பாக்கெட்டை அந்த அம்மா அறை

யிலே போட்டுட்டு வந்துட்டேன்!

ராணி; ஆமா ஆமா! அந்த அம்மா ஏங்கிட்ட கொடுத் தாங்க!

ராசா; நான் கொடுத்ததா சொல்லி கொடுத்திருப்பாங் களே! நான் குடுத்ததா சொல்லி குடுத்திருப்பாங்க...

ராணி; ஆமா, சரி! போகலாம். குளிரும் கொஞ்சம் குறைந் திருப்பதாகத் தெரிகிறது!

ராசா; ஆமாம், குளிரு குறையத்தான் செய்யும். என்னு வார்த்தையிலே சூடேறுதுல்ல...

ராணி; ம், போகலாம்.

ராசா; இரு லீலா...கொஞ்சம் பேசிட்டு போகலாம்.

ராணி; இந்தா பாருங்க. இதெல்லாம் நல்லாயில்லே. நீங்க இப்படி எல்லாம் நடந்துகிட்டா அப்புறம் நான் வேலைக்குக் கூட வரமுடியாது. ஆமாம், எங்கவிட்ல அனுப்பமாட்டாங்க...

ராசா; அய்யய்யோ. வேலைக்கு வரமாட்டியா? உங்க விட்ல அனுப்ப மாட்டாங்களா? அப்ப இன்னைக்கு இதுவரைக் கும் போதும்...போகலாம். மெள்ள, மெள்ள. பாத்து, பாத்து.

★

(பாபு ராணியின் வீட்டில் ஏற முயற்சிக்கிருன்)

ரசா; டேய் நில்லு. அங்கே யாரு பாபுவா? ஏன் பாபு ஒன் நிலமை இப்படி யாச்சு. எதுக்காக இந்த வீட்டுமேலே இப்ப ஏறுனே?

பாபு; நிறுத்து. வீட்டு மேலே ஏர்றது—செவுறு ஏறி குதிக்கிறது—அதல்லாம் ஒன் பழக்கம்,

ராசா, நீ என்ன சொல்றே?

பாபு; அன்னைக்கு ராத்திரி ஏன் திருட்டுத்தனமா எங்க விட்டுல நுழைஞ்ச?

ராசா, அதுவா?...அது நாயி.

பாபு; யார்ரா நாய். (அடிக்கிருன்)

ராசா; பாபு....

பாபு; என்னபாபு...பாபுவாம்ல பாபு...பெரிய யோக்யன்

ரர்சா; பாபு இப்பநான் ஒங்கிட்டே என்னு கேட்டேன்...

(இருவருக்கும் சண்டை—அதை ரர்ணி பார்த்துவிடுகிருள்)

ஞானக்கண்; என்னம்மா அது?

ராணி; ஒண்ணுமில்லேப்பா. யாரோ ரெண்டுபேரு தெரு விலே சண்டை போட்டுகிட்டு இருக்காங்க.

ஞான; அதெல்லாம் சகஜந்தாம்மா. யாராவது போக் கிரிங்க குடிக்கத்தெரியாம குடுச்சிபிட்டு உருளுவாங்க,

ராணி: இல்லப்பா—நம்ப வீட்டுக்கு நேராவே சண்டை போடுறுங்க.

ஞா: நம்ப வீடென்ன, சப்இன்ஸ்பெக்டர் வீடா? அவுங்க பாட்டுக்கு உருளட்டும். நீ ஏம்மா அங்கெல்லாம் போறே. போ, படுத்துத் தூங்கு...

(ராணி ஆண் உடையில் பாபுவைத் தாக்குகிருள். ராஜா வுடன் சேர்ந்து 'ஒன்' 'டு' 'த்ரி' என்று எண்ண 'டென்' என் றதும் பாபு ஓடுகிருன். ராணி பாபுவை அடிக்க தடி ஓங்க அது ராஜாவின் தலையில் விழுகிறது)

ராசா: தம்பி, பாத்தியா? பாத்தியா? ஓடிட்டான்—ஆமா நீ என்ன தம்பீ என்னையே அடிச்சுட்டே! (உட்காந்து விடுகி ருன்: ராணி தூக்குகிருள்) மெள்ள, மெள்ள, அந்தக் கையை பிடி. இந்த கையிலே கடிச்சுப்புட்டான் தம்பீ. தண்ணீ வேணு மே....

ராணி: இரு கொண்டாரேன்.

(இருவரும் வீட்டுக்குள் வருகிருர்கள்)

ஞான: யாரது?

ராணி: யாருமில்லேப்பா—அட வீட்டுக்குள்ளேயே வந்துட் டியா?...

ராசா: ஹீ...ஹீ...

ஞான: யாரு? என்னு?...

ராணி: ஊங்...யாரோ ஒரு பாவிப் பய இவனை அடிச்சி போட்டுட்டு போயிட்டான். ரொம்ப களைப்பா இருக்காம்: கொஞ்சம் தண்ணி வேணும்னு கேட்டாரு.

ஞான: சரி...சரி. சீக்கிரம் தண்ணி கொடுத்து, வெளியே அனுப்பு- என் வம்பை எல்லாம் வெலைக்கு வாங்குறே.

ராணி: சரி—சரி, உட்காருப்பா.

ஞான: அடி பலந்தானய்யா?...

ராசா: ஆ! அடி ஒண்ணும் பலமில்லே—கடிதான் கொஞ் சம் பலம்...

ஞான: கடிச்சுட்டானு?

ராசா: ஊம்...

ஞான: அய்யோ, பாவம். இந்த காலத்திலே நாய்கூட பல்லை உபயோகிக்கிறதில்லே – மனுஷன்தான் ரொம்ப கெட் டுட்டான், சே...சே...சே...

ராஜா: ஆமாங்க, இந்தப் பசங்களுக்கெல்லாம் சோறு கெடைக்கலேன்னு...மனுஷனைத்தான் கடிப்பானுங்க...

(ராஜா: ராணியின் படத்தைப் பார்த்துவிடுகிருன்.)

ராணி: உம். இந்தாயா, தண்ணி.

ராஜா: அய்யய்யோ, இது என்ன இது...தண்ணியிலே... ஆ...பூச்சி, பூச்சி....

ராணி: பூச்சியா?

ஞான: என்ன பூச்சிப்பா?...

ராஜா: ஆ. அது தெரியலியே. முகத்தை காட்டமாட்டேங்குதே...ராத்திரி வேலையா இருகிறதுனாலே அது.

ஞான: சரி பார்த்து சாப்பிடு.

ராஜா: ஆ. பாாத்துதான் நானு. (முகத்தில் ஊற்றிக் கொள்கிறான்.)

ஞான: என்னது?

ராஜா: தன்றி....

ஞான: ஆ...அந்தக் கடிக்கு போய் மருந்து போட்டுக்க!...

ராணி: இங்க வாப்பா, கைக்கு மருந்து போடுறேன்...!

ஞான: போப்பா! போய் போட்டுக்க, பாம்பு பல்லைவிட மனுஷன் பல்லுக்குத்தான் விஷம் அதிகம்.

ராஜா: மனுஷாள் கண்ணுக்குக்கூட விஷம் அதிகம்தான்!

ஞான: யாரு பிள்ளையாண்டான், கண் ஆஸ்பத்திரி டாக்டரோ.

[ராணி மருந்து கட்டுகிறாள்.]

ராஜா: ஆ...தம்பீ!...என்ன பண்றே? மெள்ள...அய்யோ, மெள்ள தம்பி, சண்டையிலே எப்படி நாக்கவுட்?

ராணி: யாரு கொடுத்தது?

ராஜா: அவன் கொடுத்தான்! அதா...வச்சிருக்கானே! ஆமா தம்பீ, நீங்க ரெண்டுபேருந்தான் தனியா இருக்கீங்களா?

ராணி: ஆமா...!

ராஜா: ஆகாம்...தனியா இருக்கிங்களா...? உனக்கு இன்னும் கலியாணம் ஆகல போலஇருக்கு!

ராணி: உனக்கெப்படித் தெரியும்?

ராஜா: அது எனக்கு எப்படித் தெரியும்னு அது...

ராணி: ஆம்பளையெல்லாம் கழுத்திலே தாலியா போட்டுகிட்டு இருப்பாங்க, நீ பாத்த ஒண்ண கல்யாணம் ஆச்சா இல்லையான்னு கண்டுபிடிக்க...?

ராஜா: ஆ! ஆம்பளே! ஏன் தம்பி இவ்வளவு வளத்து இருக்கே...? [தலைமுடியைக் காட்டுகிறான்.]

ராணி: ஆ! இதுவா? இது ஒரு வேண்டுதலை...!

ராஜா: ஆ! வேண்டுதலையா...?

[ராணி கட்டை இருக்க, இருவர் தலையும் மோதிக்கொள்கிறது]

ராணி: அப்பா..

ராஜா: அய்யய்யோ! நீவேற கட் பண்ணாதே...!

(கட்டின் மீதியை வெட்டுகிருள்)

ராணி: இதுதான் வழி, போய்ட்டு வர்ரியா...!

ராஜா: ஆ...

ராணி: இனிமே வெளியே கிளம்பும்போது துணையோடே கிளம்புங்க!

ராணி: அந்தத் துணையும் உன் மாதிரி கிடைச்சால்ல நல்லா இருக்கும்.

ராணி: வணக்கம்!

ராஜா: பெரியவரே!...

ஞான: என்னப்பா...?

ராஜா: நான் போய்ட்டு வர்ரேன்! ஒங்க ஒதவிக்கும் ஒங்க பிள்ளையோட ஒதவிக்கும் ரொம்ப நன்றி வர்ரேன்.

ஞான: என்ன பிள்ளையா? பெண்ணை போயி பிள்ளை இங்கிருன்! ஒருவேளை இவனும் என்னப் போல குருடனு இருப்பானே?

---★---

ராணி: என்ன கரண்ட், முதலாளி எங்கே இன்னும் காணும்?

ராஜா: (வந்துகொண்டே) ஏன் லீலா, எனக்கு ஆயுசு நூறு போலிருக்கு!

ராணி: என்ன இது, கையிலே கட்டு?

ராஜா: அது...கடி...

கரண்ட்: உம்...தெரியாதா உங்களுக்கு? நேத்து ராத்திரி நம்ப சாருக்கும் பாபுவுக்கும் 'டெரிபுள் பயிட்.' ஹாம்... பயிட்டுன்னு பயிட்டு டைகர் ஓல்டன் பயிட்டாம்!

ராஜா: டேய்! தமிழ்லே சொல்லித் தொலையேன், சண்டைன்னு!

ராணி: ஆ! பேப்பர்ல ஒண்ணும் சேதி வர்லியே...!

ராஜா: சருதான்! இது என்ன, உலக மகா யுத்தமா நடந்து போச்சு, பத்திரிகையிலே வர்ரதுக்கு?

கர ஆ...இந்த மாதிரி சமாச்சாரம் எல்லாம் போடறதுக்குக்கூட பத்திரிக்கை இருக்கு சார்...இப்பவேண்ணு நான் போயி நியூஸ் கொடுத்துட்டு வரட்டுமா?

ராசா: யப்பா, கொஞ்சம் சும்மா இரு! அந்த மாதிரி விளம்பரம் நமக்குத் தேவையில்லே.

ராணி: ஆமாம்; பாபு ஒங்கிட்ட ஏன் அனுவசியமா சண்டைக்கு வந்தான்?

ராசா: ஹி...ஹி...என்ன இப்படி கேக்கிற, கடிக்கப் போற நாயி நான் கடிக்கப் போறேம்பான்னு சொல்லிபுட்டா கடிக்குது? ஊர்ல ஒலகத்திலே நடக்கிற சச்சரவெல்லாம்

காரண காரியத்தோடவா நடக்குது? அதுமாதிரி ஏதோ... சண்டைக்கு வந்தான்; செமித்தியா வாங்கிகிட்டு போனான்!

ராணி: நீங்களா அடிச்சீங்க?

ராசா: ஊம்...நான் அடிப்பனா? நான் அடிச்சா அவன் தாங்குவானா? உடஞ்சிட மாட்டான்...என்னை காப்பாத்துரதுக்காக ஒரு பையன் ஓடிவந்தான்...ஆ...அடிச்சான் பாரு... அடின்னா அடி...ஒங்க ஊட்டு அடி...எங்க ஊட்டு அடில்ல... அப்படி அடிச்சான்! உம்—

கர: அடேயப்பா! பெரிய பயில்வான் போலிருக்கு!

ராசா: உம்...பையன்...சின்னப் பையன். ஆனா; அந்தப் பையனைப் பார்த்தா பொம்பளைன்னுதான் சொல்லணும், லீலா!

ராணி: (திடுக்கிட்டு) என்னது?

ராசா: ஆமாம், அவ்வளவு எளகிய மனசு...அவ்வளவு எளகிய மனசு! பாவம், அந்தப் பையனுக்கு, ஒரு வயசான குருட்டுத் தகப்பனாரு—குடும்பப்பொறுப்பு பூரா அந்தப்பையன் தலைமேலேதான் போல இருக்கு!

கர: நல்லவேளை, கடைசி காலத்திலே அந்தக் குருட்டுக் கிழவனுக்கு உபகாரம் செய்ய, ஒரு ஆம்பளைப் பையனாவது பிறந்தானே...அதும் பெண்ணா பிறக்காம!

ராசா: ஏன்டா, பொண்ணாப் பொறந்தா என்னா? பெண்களேயே பெரிய பெரிய ராணி எல்லாம் இல்லியா... ஏன் லீலா?

ராணி, ஆமாம்!

ராசா: ஜான்ஸி ராணி...அந்த ராணி...இந்த ராணி...

ராணி: இந்தா கரண்ட்! நாலு ரேடியோ வேணும்னு ஆடர் வந்துதே, அதெல்லாம் எடுத்துக்கொண்ட கொடுத்தாச்சா?

கர: ஓ குடுத்தாச்சி!

ராசா: ஆகா!...ரேடியோன்னோன்ன எனக்கு ஞாபகம் வந்தது. லீலா, அந்தப் பையன் செய்த உபகாரத்துக்காக அவனுக்குக்கூட ஒருரேடியோ பிரசண்டேஷன் செய்யலாம்னு இருக்கிறேன்!

ராணி: கொடுக்க வேண்டியதுதான்...

ராசா: என்ன லீலா, டைம் ஆயிடுச்சா? புறப்பட்டுட்டியா? வா, வா...நான்கூட வர்றேன்!

—★—

(ராசா, ராணியைக் கொண்டுவந்து விடுகிறான். அவன் போனதும், ராணி வெளியே வர எத்தனிக்கும்போது எதிரே பாபு நிற்கிறான்.)

பாபு: யாரது? ராணியா?

ராணி: ம்...ஆமாம்!

பாபு: ஹ...ஹேய்!...நாடகத்திலே நடிக்கவே மாட்டேன்னு என்கிட்ட சொன்னியே...நீ?

ராணி: அது...அது...வந்து நான் உங்கிட்ட சொல்ல...

பாபு: சரி, சரி! நான் வாங்கிக் கொடுத்த 'பிரசண்டேஷ'னை யெல்லாம் இப்பவே திருப்பிக் கொடு!

ராணி: அய்யய்யோ! அதையெல்லாம் உபயோகப் படுத்திட்டேனே! அது எவ்வளவு விலேன்னு சொல்லுங்க. வாங்கின விலேயை அப்படியேத் திருப்பிக் கொடுத்துறேன்!

பாபு: வாங்கின விலேயா? உன்கிட்ட அவசியம் சொல்லணுமா? நான் வாங்குவேன்...அல்லது திருடுவேன்...அதைப் பத்தி ஒனக்கென்ன? கிண்டலா பண்றே? உன்கிட்ட பணம் வாங்க நான் என்ன பிச்சைக்காரனு? மரியாதையா நான் வாங்கிக் கொடுத்த சேலே ரவிக்கையை திருப்பிக் கொடு. பழந் துணியா இருந்தாலும் பரவாயில்லே...குடு!

ராணி: பிச்சைக்காரன் இல்லீங்கிறீங்க, ஆனு பெரிய குடுகுடுப்பைக்காரனு இருப்பிங்க போலிருக்கே!

பாபு; இந்தக் கிண்டல், கேலி எல்லாம் உன் லௌவர் ராஜா இருக்கானே, அவன்கிட்ட வச்சுக்க! என் பிரசண்டேஷனுக்கு பதிலாக இப்ப இந்த வளேவலேயாவது கழட்டிக் கொடு!

[அவளது கையைப் பிடிக்கிறுன்.]

ராணி: ஆ...சீ!...

பாபு; கொடு...

[அப்போது சமரசம் பார்த்துவிடுகிறுர்.[

சமரசம்; டேய்...டேய்...டேய்...பாபு!

பாபு; அத்தான், நான் ஒண்ணும்...

சம; பேசாதே! இந்த தோட்டம் இதுக்காகவா கட்டிப் போட்டு இருக்கிறேன்? சமரசம் வீட்ல இதுமாதிரி ஒண்ணு நடக்கக்கூடாதுடா...போடா...போடா...இந்தாம்மா!

[பாபு போய் திரும்பி வருகிறுன்]

பாபு; இந்தாம்மா!...நீ வந்து...

சம: டேய்...போ! போன மச்சான் ஏண்டா திரும்பி வந்தே? ரண்! ...ஓடு! ஆ... இந்தம்மா, நீ இந்த நாடகத்திலே வேஷம் போட்டவதானே!...இங்க எங்க வந்தே?

ராணி: ஆமாங்க; ஒங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லலாமுன்னு வந்தேன்.

சம; மண்ணுங்கட்டி! நீ அந்தப் பயலோடு பேசிகிட்டு இருந்ததை நான் பார்த்தேன்...

ராணி: அய்யய்யோ! நான் ஒண்ணும் செய்யலீங்க... அவருதான் எங்கிட்ட தகாத முறையிலே நடந்துகிட்டாரு... இதோ பாருங்க, என் கையை...

சம; அய்யய்யோ! [பாபுவுடன் சாந்தம் வருகிறுள்.]

சாந்தம்: ஆஹா! இப்படி நடக்குதா? அயோக்கியத் தனத்துக்கு ஒரு அளவில்லாம போச்சு!

சம: அதானே!...

சாந்: உம்...நான் ஒண்ணும் பயித்திக்காரி இல்லே: ஒண்ணும் சும்மாவிடப் போறதில்லே: ஏம்மா மின்னல் கொடி! மாயப் பொடி தாவுறியா, மாயப் பொடி!

சம: இந்தா...இந்தா...அந்தப் பொண்ணை பேசிப் பிரயோஜனமில்லே, அவனைக் கேளு!

சாந்: ஆ...ஆ...! அவனைக் கேக்க வேண்டியதுதான்! ஏண்டா நீ என்கூடப் பொறந்த தம்பியா? இப்படியெல்லாம் நடக்குதுதே, நீ பாத்துக்கிட்டுத்தானே இருக்கிறே!

பாபு: என்னக்காக...இது?

சாந்: தினம் தினம் இவ இங்க வர்ரதும், இந்த நந்த வனத்திலே ஓடியாடி விளையாடுறதும், அய்யோ!...அய்யோ!... கர்மம்...கர்மம்! என் தலையிலே எழுத்து...இந்த கெழட்டு வயசுலே...

சம: ஏ...ஏ...! என்ன அவனைப்போய் கிழவங்கிறே...

சாந், உம் உம்...அவனை சொல்லலே, அய்யா! அவனை ஒண்ணும் சொல்லலே!

சம: இங்கே... வேற யாரு கிழவன்?

சாந்: உம்...உம்மைதான்யா சொல்றேன்!

சம: என்னையா? என்னையா? கெழவன்னுட்டியா? நான் கெலவனு...ஏ, மச்சான்?

பாபு: ஆளு செய்கையிலே ஒண்ணும் கெழட்டுத்தனம் இல்லே!...

சாந்: இந்தா புள்ளே: என் புருஷன்தானு கெடச்சான் நீ ஓடிப்புடிச்சிவிளையாடுறதுக்கு?

ராணி: என்னம்மா இது, நீங்க பாட்டுக்கு ஏதேதோ பேசி கிட்டே போறீங்களே?...

சாந்: என்ன சொன்னே?

(ராணியை அடிக்கிருள்)

சம: ஏய்! இந்தா, நீ பேயில்ல; பொம்பளே!

சாந்; போடி வெளியே! இன்னொரு தரம் இந்தக் காம்பவுண்ட்டுக்குள்ளே காலே வச்சே, காலே ஒடிச்சுபுடுவேன்! ஜாக்ரதை!

சம; இந்தா...இந்தா...இந்தாபாரு, இந்தகாம்பவுண்ட்ல பாதி எனக்கு சொந்தம்! நீ, பாதி வரலாம்!

ராணி; ஆ...

(சாந்தம் மீண்டும் சண்டை ஆரம்பிக்கிருள்.)

சம; இந்தா...இந்தா...நீ வந்துடு!

(ராணியை அழைத்துக்கொண்டு போகிருர்.)

சாந்; ஆகா! அவ்வளவு தூரத்துக்கு ஆயிப்போச்சா? இவுங்களே சும்மாவிடக்கூடாது!

பாபு: ஆமாம்!...

சாந்; பாபு...

பாபு: யக்கா...?

சாந்; நீ இவுங்களை 'பாலோ' பண்ணு...

பாபு: இப்பவே பண்றேன்...அப்ப கொஞ்சம் பணம் வேணும்!

சாந்; தர்ரேன் வா!

—★—

(ராணியும் சமரசமும் ராணி வீடு செல்வதைப்பற்றி கரண்டிடம் ராஜா சொல்கிருன்)

—★—

(சமரசத்தை முதலாளி என ஞானக்கண்ணுவிடம் அறிமுகப்படுத்துகிருள் ராணி)

—★—

சாந்தம்: உம்...தம்பீ! இந்த தாசி அன்னமா வேஷம் போட்டாளே, அவ யாரு?

ராஜா: அதைப்பத்தி சந்தேகப்பட்டுத்தான் நான் ஒங்ககிட்ட கேட்டுப் போகலாம்னு வந்தேன்!

சாந்: உங்களுக்கும் சந்தேகம்தாஞ? அதுதான் எல்லோருக்கும் தெரிஞ்சுபோச்சே!

ராஜா: உம்...நம்ப சமரசம் அவர்களுக்கும், அந்தப்பெண்ணுக்கும் ஏதாவது உண்டுங்களா?

சாந்; உண்டு...உண்டு...உண்டு...அதையேன் இப்படி பயந்துகிட்டு ஒளிவு மறைவா கேக்குறீங்க?

ராஜா: இல்லே...மொதல்ல அந்தப் பெண்ணுக்கும் உங்க வீட்டுக்கும் ஒருதொடர்பும் இருக்காதுன்னு நெனேச்சேன். இப்ப பார்க்கும்போது, அந்தப்பெண்ணும், நம்ப சமரசம் அவர்களும் அந்தப் பெண்ணு வீட்டுக்குள்ளே சேர்ந்தாப்பிலே போனதை நான் பார்த்தேன்!

சாந்: போனுங்களா?

ராஜா: ஆமாம்.

சாந்: சேந்தாப்பிலே போனுங்களா?

ராஜா: ஆமா, பாத்துட்டுதான் வர்ரேன்.

சாந்; உங்க கண்ணுலே பாத்திங்களா தம்பீ?

ராசா; ஆமாம்மா,

சாந்; தம்பீ. சொல்ரேன்னு நீங்க வருத்தப்பட்டுக்காதீங்க ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ருரு. இவரு இப்படி எல்லாம் நடக்கலாமா? இவரை நான்எவ்வளவோ நம்பியிருந்தேன்தம்பீ. நீங்கதான் என்கூட பொறந்த பொறப்பு மாதிரி...உங்ககிட்ட சொல்றதுக்கு என்ன? அவரை எப்படி யாவது திருத்திடுங்க.

ராசா; நீங்க என்ன சொல்றீங்க?

சாந்; அதுதான் தம்பி. இந்தநாடகக்காரியோடே சேர்ந்து கிட்டு இந்த வயசிலே இப்படியெல்லாம் சுத்துவாங்களா?

ராசா: அய்யய்யோ. நீங்க அப்படி சந்தேகப்பட்டுட்டீங்களா? அதெல்லாம் ஒண்ணும் நெனைக்காதீங்கம்மா.

சாந்: நான் தான் கண்ணுலே பார்க்கிறேனே தம்பி! அவ தினம் தினம் தோட்டத்துக்கு வந்துபோருளே...

ராசா. கண்ணுல் கண்டதும் பொய்—காதால்கேட்டதும் பொய்—தீர விசாரிப்பதே மெய்யம்மா.

(சமரசம் வருகிருர்)

சம: ஒன்ஸ்மோர்....

ராசா: சார்...வணக்கம் சார்....

சம; வணக்கம் ஒன்சுமோர்....

ராஜா: என்னுசார் ஒங்களுக்குத் தெரியாதசார்?

சம; எனக்குத் தெரியும்; இன்னொருத்தருக்கு தெரிய வேண்டி இருக்கு.

ராஜர்: ஆ...வேணும் சார்...

சம; சொல்லுன்னு?

ராஜா: ஆ..சரி சார்..கண்ணுல்கண்டதும்பொய்—காதால் கேட்டதும் பொய்—தீர விசாரிப்பதே மெய். சார்...

சாந்: சபாஷ்...சபாஷ்....

ராஜா: சபாஷ்...சபாஷ்....

சாந்; கண்ணுல் கண்டதெல்லாம் மெய்தான். ஒண்ணும் பொய்யில்லே. நீங்க வாங்க, நாம பேசுவோம்.

ராஜா: அம்மா ...நான் வர்ரேம்மா....அப்ப சார் நான் வர்ரேன் சார்...

(சாந்தம்மாள் அறையினுள் போகிருள். சமையல்காரன் வருகிருன்.)

சம: ஏய், எங்க பொறப்பட்டே?

சமை; வேலையெல்லாம் முடிஞ்சிபோச்சிங்க...சும்மா இப்படி வெளியேபோயி படுக்கலாம்னு பொறப்பட்டேனுங்க.

சம; முருகா....

சமை; அய்யா.

சம: வந்து, அன்னைக்கு அந்த சேலை அவன் வாங்கிகொடுத்தான்னு சொன்னியே...

சமை; ஆமாங்க... அவனே தான் வாங்கிகொடுத்தான், இதில் என்னுங்க சந்தேகம்? அவன்தான் வாங்கிக்கொடுத்தான்.

சம; என்னடா இது, மூன்னுக்கு பின் முரணுயிட்டே போவது?...

சமை: என்னுங்க...நீங்க மொரனுன்று சொல்றீங்க! இந்த பயல்தான்...நம்ப சங்கரன் பயதான் வாங்கிக் கொடுத்தா னுங்க...நான் என் கண்ணுலெ பாத்தேனே!

சம: சங்கரன் பய வாங்கி யாருக்கு கொடுத்தான்?

சமை: அவனுக்கு கொடுத்துட்டான்!

சம: எவனுக்கு...?

சமை: நம்ப வேலேக்காரிக்கு!

சம: நாசமாபோச்சு! அந்த சேலே சங்கதியைபத்தித் தானு நீ சொன்னே?

சமை: பின்ன, நீங்க வேறெ எதைப்பத்தி சொல்றீங்க... நீங்க?

சம: ஒண்ணுமில்லேப்பா! நீ போய் படுத்து தூங்குபோ அப்பா! சந்தேகம் ஒரு பெரிய வியாதிதான்!

—★—

ராணி: (தனக்குள்) பிறருக்குக் கேடு விளையாத வரையில் பொய் சொல்வதால் தீமையில்லே என்பார்கள்!—அய்யோ! நான் சொன்ன பொய்களால், சமரசம் வீட்டிலே குழப்பம்—ராஜா வுக்குச் சந்தேகம்—எனக்கும் சங்கடம்—இதெல்லாம் அப்பா வுக்குத் தெரிந்துவிட்டால், ''நான் குருடன் என்றுதானேயம்மா, இப்படி யெல்லாம் என்னே ஏமாற்றியிருக்கிருய்?'' என்றுகேட்டு என் இருதயத்தைக் கோடரியால் பிளந்து விடுவாரே! ராணி...நீ சரியானபடி சிக்கிக் கொண்டாய்!

[ராஜா பாடிக்கொண்டு வருகிருன்.]

ராணி: பூலோகம் எனக்கு ஒண்ணும் இருண்டு போகலே —முதல் முதல்ல ஒரு புதுப் பெண்ணே பாத்த உடனே, உங்க ளுக்குத்தான் இருண்டு போச்சு!

ராசா: அது சரிதான்—பெரிய பணக்கார வீட்டுப் பொண் ணுல்ல, இதுவும் பேசுவ—இன்னமும் பேசுவ...

ராணி: யாரு உங்ககிட்ட அப்படிச் சொன்னு? பத்திரிகை யைப் படிச்சிட்டு நீங்களா சொன்னிங்க...என்னே எங்க உண் மையை சொல்லவிட்டீங்க! சரிதான்—அப்படித்தான் இருக் கட்டுமேன்னு நானும் ஒத்துகிட்டேன்! நான் ஏழை வீட்டுப் பெண்ணுன்னு சொல்லியிருந்தா, எனக்கு இந்த டைப்பிஸ்டு வேலே கிடைச்சி இருக்குமா? நீங்களே சொல்லுங்க...?

ராஜா: அது சரி...ராணி...

ராணி: உம்...

ராசா: நீ இருந்தாலும் எங்கிட்ட பொய் சொல்லி இருக் கக்கூடாது!

ராணி: ஒங்களுக்கென்னு? என் நிலைமை—என் கஷ்டம்— நான் சிந்திய கண்ணீர்—அதைப்பத்தியெல்லாம் உங்களுக்கு

என்னு தெரியும்? திருட்டும், புரட்டும் நிறைஞ்ச உலகத்திலே—ஒரு குருட்டுத் தகப்பனுரோட வாழும் அபலைக்கு எவ்வளவு துயரங்கள் தெரியுமா? அப்பப்பா? அந்த சமரசம் வீடு...அங்கே ...ஒரு பாவி...பர்பு! இன்னொரு காளி சாந்தம்!

ராஜா: ஆகா! போதும்...போதும்! நீ ஒவ்வொருத்தவங்களா திட்டி கடைசியிலே என்னையும் திட்ட ஆரம்பிச்சுடாதே! ஒன்னைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும்—நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்—

ராணி: இந்தப் பொர்ல்லாத உலகத்திலே நேர்மையோட நடக்கிற ஒரு பொண்ணுக்கு எவ்வளவு ஆபத்து இருக்கு தெரியுமா? அடுக்கடுக்காய் படை எடுத்து வரும் இடையூறுகளை எதிர்ப்பதற்கு, பொய் ஒரு ஆயுதமாக இருந்தால், அதை உபயோகிப்பது குற்றமா என்ன?

ராசா: நான் குற்றம்னு சொல்லலே—நல்ல காரியத்துக்கு பொய் சொல்றது தப்பு இல்லேதான்...இருந்தாலும் என் கிட்ட சொல்லி இருக்கக்கூடாது! அதான் 'பாயிண்ட்!'

ராணி: ஆமா...ஆமா...நீங்க முதலாளில்ல!

ராஜா: அய்யய்யோ! நீ என்னம்மா இது டேஞ்சர்பண்றே? அதெல்லாம் மொதலாளி கிதலாளி ஒண்ணும் கிடையாது: வெறும் ராஜாதான்...!

ராணி. ஒங்கநிட்ட சொன்னு என்னு?

ராசா: இப்படி கேட்டா நான் என்னு சொல்லப்போறேன்: காதலன் கிட்டே பொய் சொல்லலாமான்னேன்—வேற என்னு? அது இருக்கட்டும் ராணி, ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை செஞ்சிவையுன்னு பெரியவங்களே சொல்லி இருக்காங்க—நீ இது வரைக்கும் சுமார் ஆயிரம் பொய்யிக்கு மேலேயே சொல்லி இருப்பேன்னு நினைக்கிறேன். அதனுலே...

ராணி; அதனுலே...

ராஜா; அதனுலே என்ன இப்ப...அதனுலே ஒண்ணுமில்லே. நான் என்னத்தைச் சொல்லறது! நீ இதுவரைக்கும் லீலா ராணி—லீலா ராணின்னு இருந்தேன்! இனிமே ராஜா ராணி ஆயிடலாமேங்கிறேன்!

—★—

சமையல்காரன்: ஏம்மா? இப்படி கவலையா இருக்கீங்க? கொஞ்சம் காப்பியாவது சாப்பிடுங்கம்மா!

சாந்தம்; அட நீ போப்பா நீ! முருகா—இப்படி வா—இப்படி உக்காரு! அந்தப் பொண்ணு விவரம் சொன்னியே...

சமை: ஓ! அது ரொம்ப மிஞ்சிப் போச்சே.. இப்ப கல்யாணத்துக்கே ஏற்பாடு நடந்துகிட்டு இருக்கே...

சார்: ஆ! கல்யாணமா? ரெண்டாவது கல்யாணமா?

சமை: ஆமா...இல்லீங்க! அவனுக்கு இன்னும் கல்யாணமே ஆகலீங்களே...

சாந்: எவனுக்குடா?

சமை: நம்ம சங்கரம் பயலுக்கு!

சாந்: சங்கரம்பயலுக்கா? நல்ல ஆளுப்பா நீ! இவ்வளவு நாளா அவனைப்பத்திதான் சொல்லிகிட்டு இருக்கிறியா நீ...?

சமை: ஆமாங்க...நான் வேற யாரைப்பத்தி சொல்றது?

சாந்: ஆமா! அந்தப் பொண்ணுன்னு சொன்னியே அது...?

சமை: அது நம்ப வேலைக்காரப் பொண்ணுங்க! இங்க இருக்காளே வேலைக்காரி...

சாந்: அடசீ!...அய்யா, பொண்ணோடெ சுத்தாராருன்னு சொன்னியடா...

சமை: நான் அவனைத் தானுங்க—அந்தப் பய செய்யற தப்பை நெனைச்சிகிட்டு அவனை அய்யான்னு ... அய்யாகூட வர்ராங்களே! (சமரசம் வருகிறார்)

சம: என்ன. இங்கு விசாரணை நடக்குது?...உ...

சாந்: உம்...இங்க விசாரம்தான் இருக்கு. 'ணை' இல்லை!

சம: சர்தான்! சரி...உம். நீ போயி சமையலை கவனி...

சமை: சமையல் ஆயிடுச்சிங்க...

சம: ஆயிடுச்சா? ஆயிடுச்சில்ல...அப்ப கொஞ்சம் போட்டு தின்னு...நாய்... (சாந்தத்திடம்) இந்தா நான் ஒன்பேர்லே உள்ள சந்தேகத்தை வாபஸ் வாங்கிட்டேன். நீயும் அதே மாதிரி செய்யவேண்டியதுதானே!

சாந்: என்னது?

சம: பாரு. ராஜாவும் நல்லவன்; நீயும் நல்லவ! அதே மாதிரி என்னையும் நல்லவன்னு...

சாந்: உம்! ராஜாவும் நல்லவருல்ல; நானும் நல்லவ இல்ல; முன்னாலெ நெனைச்சிங்க பாருங்க; அதே மாதிரிதான்!

சம: அடா...அடா ... இந்தாப் பாரு! நான் என்னமோ தப்பா நடக்கிறதா நெனைச்சிக்கிட்டு. நீ தப்பா நடக்கிறமாதிரி ஆக்ட் பண்றே...ஆ! அந்தப் பொண்ணு இருக்கே...

சாந்: அழகான பொண்ணு! கவர்ச்சியானவ! பருவமங்கை!

சம: அதைச் சொல்லலே! வந்து அவ ரொம்ப ஏழை! ஆனா புத்திசாலி...

சாந்: ஆ! புத்திசாலி இல்லேன்னா வயசான ஆளை 'கவர்' பண்ண முடியுமா?

சம: சீ, சீ...! இது சரிப்பட்டு வராது...ஊக்கும்...எங்கியோ ஆரோ . கொளமோ பாக்க வேண்டியதுதான்!

சாந்: ஏன் அவளோட நீச்சல் விளையாட்டு நடத்தவா? ஜலக்கிரீடை... (பாபு வருகிறான்)

பாபு: யக்காவ்...

சாந்: என்னடா தம்பீ?

பாபு: அக்கா! அனுவசியமா, எனக்கும் அந்த ராஜாவுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதாலே, ஊர் பூரா எனக்கு ஒரே கெட்டபேரு அக்கா...

சாந்: அதுக்கு என்னு இப்போ?

பாபு: எப்படியாவது மறுபடியும் அந்த ராஜாகூட சேர்ந்து நாடகத்திலே நடிச்சி ... எனக்குள்ள கெட்ட பேரெல்லாம் போக்கணும்கா!

சாந் அதுக்கு ராஜா சம்மதிக்கணுமே!

சம; யார்தான் சம்மதிப்பா? ராஜா மனசு நோகும்படி என்னென்ன அக்ரமம் பண்ணி இருக்கிறுன் இவன்! அதனுலே இவனை சேத்துக்க மாட்டாங்க!

சாந்: ஏன் சேத்துக்க மாட்டாங்க ராஜா நான் என்ன சொன்னுலும் கேப்பாரு! தம்பி, நீ வாடா நான் சேக்கிறேன்.

சம; இந்தா...இந்தா...வீண் ஜம்பம் அடிச்சி அங்கே போயி அவமானப்படாதே! அவ்வளவுதான்!

சாந்: ஆ! தம்பி ஒன்னையும் அந்தக் கம்பெனிலே சேத்து, அந்தப்பொண்ணையும் அந்தக் கம்பெனிலே இருந்து வெலக்கல. என் பேரு சாந்தம்மா இல்லே...

சம: அய்யோ! அய்யோ! அந்தப் பொன்னு பாவம்,பாவம்!

சாந்: அய்யோ ... அய்யோ ... தவக்கிறவைப் பார்ரா ... அடப்போய்யா, வாடா தம்பீ...

பாபு அத்தான்! வர்ரேன்...

சம; உம்.. வர்ரேன்...! அத்தான் வர்ரேன். உம்...அய்யோ! இந்த ஒரு ராஜாவும். ராணியும் வந்தது இந்த குடும்பத்தை சீட்டு கட்டு கலேக்கிருப்பிலே கலேச்சுட்டாங்களே!

—★—

[பாபுவை ராஜாவின் நாடக கம்பெனியில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென சாந்தம்சிபார்சு செய்கிறுள் ராஜாவிடம்]

—★—

[ராணி தன்னுடையதந்தை ஞானக்கண்ணுவிடம்ராஜாவை கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக கூறுகிறுள். ஆனுல் அவளது தந்தை மறுத்து ராணியின் கணவன் இளமையிலேயே இறந்துவிட்டதாக கூறுகிறுர். ராணி தான் ஒரு விதவை என்று தனது தந்தை மூலம் தெரிந்துகொண்டு அலறித் துடிக்கிறுள்]

—★—

ராசா: ராணி விதவையா?—இல்லே—இல்லவே இல்லே! ராணி விதவையில்லே! அந்த வைர நிலவுக்குக் களங்கம் கற்பித்து என் வாழ்க்கையிலே மண்ணேத் தூவாதே பாபு!

பாபு: உம்...ராணி மூகராத முல்லை—கரம் படாத ரோஜா! அவளுக்கு நீயே ராஜா—என்றெல்லாம் வர்ண ஜால வார்த்தைகளைக் கொட்டி பொன்னான உன்னுடைய எதிர்காலத்தை நச்சுப்பொய்கையாக மாற்றிவிட வேண்டும் என்ற நாச எண்ணம் எனக்குக் கிடையாது நண்பனே! தேவரும், மூவரும் அறியச் சொல்கிறேன். தீயின் நாக்குகளை தேன் மலரின் செவ்விதழ்கள் என்று எண்ணி ஏமாறாதே!

'உம்...என்னடா; ஏதோ நாடகத்திலே பேசிய வசனங்களைத் திருப்பி ஒப்புவிக்கிறானே யென்றும்கருதாதே! தோழமை உணர்ச்சியிலே ஊற்றெடுத்து வெளிக் கிளம்பும் உண்மை களப்பா இவைகள்...!

ராஜா: போதும் பாபு, போதும்! தென்றலில்திரிந்துகொண்டிருக்கும் எங்கள் தித்திப்பான நினைவுகளை அழித்துவிடாதே பாபு!

பாபு: எனக்கென்ன...எப்படியோ போ...! அவள் ஒரு கைம் பெண்—கசங்கியமலர் என்கிறேன். கருவண்டின்காதிலே என் குரல் விழாவிட்டால், அதற்கு நான் என்னப்பா செய்ய முடியும்?

ராசா: பாபு! ராணி விதவையாகத்தான் இருக்கட்டுமே. அதனால் என்ன? பொன் மணியும் பூக்கொத்தும் போய்விடலாம், என் கண்மணியின் இளமைதனை—இருதயத்தை—விதவைக் கோலம் விழுங்கியதுண்டோ?

பாபு: அப்படியானால் உன் மனம்?

ராஜா: மறுமணத்திற்குச் சம்மதிக்கிறது, பாபு! ஆமாம், மறுமணத்திற்குச் சம்மதிக்கிறது...!

பாபு: ஆ!...பேஷ், பேஷ்!...உன் உறுதியைப் பாராட்டுகிறேன் தோழனே! ஆனால் ஒன்று, அந்த ராணியின்மீது எனக்கென்ன தெரியுமா கோபம்? அவள் விதவை என்பதை உன்னிடம் இத்தனை நாள் சொல்லாமலே மறைத்திருக்கிறாளே!—அப்படியானால்அவள் எவ்வளவுபெரிய வித்தாரக்கள்ளியாக இருக்க வேண்டும்...!

ராசா: ஆமாம்—ஆனால் பாபு, அவள்உண்மையில் விதவையாக இருந்தால்தானே என்னிடம் முன் கூட்டியே சொல்லியிருப்பாள்...!

பாபு: சரிதான்! வேதாளம் மறுபடியும் முருக்க மரம் ஏறிய கதைதான் உன்கதை...உம், ராஜா! எனக்கேன் வீண் வம்பு? நீயே அந்தப்பசப்புக்காரி ராணியிடம் கேள்...அப்போது தெரிந்துவிடும் அந்தப் பத்தினியின் பகல்வேஷம் எல்லாம்!

ராஜா: பாபு நிதானமாகப் பேசு! எனக்கும் உனக்கும் மீண்டும் ஏற்பட்டிருக்கிற நட்பு மாண்டுபோகாமலிருக்க

வேண்டுமென்றால் இதுபோன்ற கலகத் தம்புருக்களை மீட்டிக் கொண்டிருக்காதே!

[...என்று வெளியில் வர, ராணி நிற்கிறாள்.]

ராசா: ஓ, ராணி! ஏன் ராணி வாட்டமாய் இருக்கிறாய்? உம்.

ராணி: ஒன்றுமில்லை.

ராஜா ம்...ராணி! இன்று உன்னிடம் ஒரு சேதி கேட்கப் போகிறேன்—அதற்கு நீ கோபப்படாமல் பதில் சொல்ல வேண்டும், தெரியுமா?

ராணி: கேளுங்கள்!

ரர்சா; ம்...ஆமர்ம்...அ...ஹ...சரி! இந்தா இந்த மலரை உன் தலையிலே சூட்டிக்கொள்!

ராணி வேண்டாம்!

ராஜா ஏன், பூ என்றால் உனக்குப் பிடிப்பதில்லையா ராணி? உம்...நானும் இவ்வளவு நாளாய் பார்க்கிறேன், ஒரு நாள்கூட உன் தலையிலே நீ மலர் சூட்டிக்கொள்வதில்லை. ஏன்? சரி. பூ வேண்டாம்; பொட்டாவது வைத்துக்கொள்!...ம்...நெற்றியைக்காட்டு...ஜவ்வாது பொட்டு!

ரா: வேண்டாம்! எனக்கேன் இந்த அழகெல்லாம்?

ராசா: என்ன ராணி...விதவை மாதிரி எல்லாவற்றையும் வேண்டாம் வேண்டாம் என்கிறாய்? ஆங்...?

ரா: ஆ! [அழுகிறாள்.]

ராஜா; கோபமா ராணி?...நான் கேட்டது...ஆ! நான் விளையாட்டுக்குத்தான் கேட்டேன்...

ரா: விளையாட்டுத்தான்! விளையாட்டுப் பருவத்திலேநடைபெற்ற கலியாண விளையாட்டுத்தான்! அந்த விளையாட்டின் விளைவுதான், இதோ, இந்த ராணியின் விதவைக்கோலம்!

ராஜா: ஆ.

ரா; இனியும் மூடி வைத்துப் பயன் என்ன? மூளியாகி விட்டது என் வாழ்க்கை. முள்வேலி போட்டு மூலைக்கு அனுப்பி விட்டது இவ்வுலகம். என்னை வட்ட நிலா, கட்டிக் கரும்பு என்பீர்களே, உங்கள் ராணி ஒரு பட்ட மரம்!...பட்ட மரம்.

பாபு: பட்ட மரம் துளிர்க்காது—கெட்ட பால் சுவைக்காது. ஹ...ஹ...ஹ ராஜா இப்போதாவது பாபுவின் பேச்சில் ஒளிந்து கிடக்கும் பச்சை உண்மை புலப்படுகிறதா?

ராஜா: விதவை. என் ராணி விதவை. ராணி, இதை ஏன் இத்தனை நாள் என்னிடம் சொல்லவில்லை?

பாபு: இது ஒரு கேள்வியா? ஏமாறுகிறவர்கள் இருக்கிற வரைக்கும் ஏமாற்றுகிறவர்களுக்கு லாபந்தானே. இப்போது நீ கண்டு பிடித்துவிட்டாய்...அவளும் கண்ணீர் பாணத்தை பிரயோகிக்கத் தொடங்கிவிட்டாள்.

ராஜா: நீலிக் கண்ணீருக்கு இளகிவிடும் நெஞ்சம் எனக்குக் கிடையாது பாபு.

ராணி: அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! மோவா அரும்பு—தாவாச் சிறுமான்—என்றெல்லாம் அழைக்கப்பட்ட பருவத்திலே என் கழுத்திலே மாங்கல்யக் கயிறு பிணைக்கப் பட்டதாம்—நான் மாங்கல்யமிழந்த மங்கை என்று எனக்கே இன்றுதான் தெரியும்!

ராசா: அப்படியானால், இத்தனை நாள் ஏன் உன் கூந்தலிலே மலர் இல்லை? நெற்றியிலே பொட்டு இல்லை?...உம்...இவ்வளவு பெரிய உண்மையை மறைத்து என் உள்ளத்தைத் திருடிக்கொண்ட நீ வேறு என்னதான் செய்யமாட்டாய்!

பாபு: கொலைகூட செய்வாள்!

ராணி: அய்யோ! என் பேச்சை நம்புங்கள்...நான் சொல்வதைக் கேளுங்கள்... (கையைப் பிடிக்கிறாள்)

ராசா: கேட்டதெல்லாம் போதும், விடு என்னை...

ராணி: தாலி இழந்தவள் என்பதற்காகவா எனக்கு இந்தத் தண்டனை? வீழ்ந்துபோன சமுதாயத்திற்கு விழிப்பூட்டி, விசை ஒடிந்த தேகத்தில் வன்மையூட்டி, நாட்டை மறுமலர்ச்சி சோலையாக்கப் பணிபுரியும் படையிலோர் வீரரா நீங்கள்? விதவை யென்றதும் என் விழி நீரைக்கூட ஏளனம் புரிகிற அளவுக்கு அவ்வளவு கல்லாகவா உங்கள் நெஞ்சம் மாறிவிட்டது? என்னைப் பாருங்கள்...இந்தப் பருவக் கொடி பாழும் விதவைக் கட்டுப்பாடென்னும் சூறாவளியிலே சிக்கிச் சீரழியத்தான் வேண்டுமா? சொல்லுங்கள்...பதில் சொல்லுங்கள்!

ராசா: நீ தாலி இழந்தவள் என்பதைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. ஆனால் இத்தனை நாள் இந்த விஷயத்தை என்னிடம் மறைத்து என்னை ஏமாற்றியிருக்கிறாய் பார், அதை யாராலும் மன்னிக்கவே முடியாது...

ரா: நான் மறைக்கவில்லை—மறைக்கவே இல்லை. என்னிடம்தான் மறைத்துவிட்டார்கள், மகா பாவிகள்.

ராசா: சே! சே...!

ரா: இதைக் கேளுங்கள்—இதைக் கேளுங்கள்.

(ராசா போய்விடுகிறான்)

—★—

(ராணி தனியே வருந்திக்கொண்டிருக்கிறாள்)

பாபு: உலகத்தின் எழில் எல்லாம் ஒன்று திரண்ட அழகுப் பதுமை—காதல் பிச்சைக் கேட்டுக் கதறியதுபோது காலால் உதைத்துவிட்டுப் போய்விட்டான் மடையன். கண்ணே ராணி, கலங்காதே. ஈரேழு பதினாலு உலகத்தையும் விலையாகக் கொடுத்தாலும் ஈடாக முடியாத உனது இளமை-தேவாமிர்தக்கனியின்

மேனியிலும் காணமுடியாத உனது தேஜஸ்—இவையெல்லாம் விதவையென்னும் புயற் காற்றால் வீணாக அழிந்து போவதை நான் அனுமதிக்கமாட்டேன். தவங்கிடந்து பெற்ற தங்க விக்ரகமே, உன் பட்டுப் பாதங்களைத் தொட்டுக் கும்பிட நானிருக்கிறேன்...நீ இளம் விதவையாக மட்டுமல்ல, இன்றைக்குத்தான் விவாக ரத்து செய்துவிட்டு நீதி மன்றத்திலே இருந்து நேரே இங்கு வருவதாயிருந்தாலும்கூட ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன்...

ராணி: பாபு! உளறிக்கொண்டே இருக்காதே. உதைத்தாலும், அணைத்தாலும் இந்த உள்ளம் என் ராசா ஒருவருக்கு மட்டுமே இடமளிக்கும், ராணி ராசாவுக்குத்தான் சொந்தம்— இந்த சொந்தத்தை அவர் மறுத்தால்...ராணி உலக பந்தத்தையே அறுத்துக்கொள்வாளே தவிர, உன் போன்ற தீப் பந்தங்களிலே விழுந்து சாகும் விட்டில் பூச்சியாக மாட்டாள்.

பாபு: உம், ராசாவே பிறக்காமல் இருந்திருந்தால் என்ன செய்வாய் ?

ராணி: அப்படியேன் கற்பனை செய்கிறாய்? நானே பிறக்காமல் இருந்திருந்தால் நீ என்ன செய்வாயோ—அதைச் செய், இப்போது.

பாபு: ம், ராணி ராசாவுக்குத்தான் சொந்தம். ராணி ராசாவுக்குத்தான் சொந்தம். நான் அடிக்கும் துருப்புச் சீட்டிலே அந்த ராசாவே வெட்டுப்பட்டு விட்டால்...உம்...!

—✶—

ராணி வீடு

(ராசா கதவைத் தட்டுகிறான்)

ராசா: ராணி!...ராணி! ராணி...!

ஞான: (கதவைத் திறந்து) யாரு?...

ராசா: ராணி இல்லே?...

ஞான: ராணி இல்லே, நீங்க யாரு ?

ராசா: நான்தான் ராசா.

ஞான: ராசாவா? அடப்பாவி. என் குடும்பத்தைக் கெடுத்த துரோகி. என் மகளோட மனதைக் கலச்சி அவளை பாபாத்மாவாகச் செய்துவிட்டாயே. பாதகா. துரோகி.

ராசா: பெரியவரே, ஆத்திரப்படாதீங்க—என்னுடைய குற்றம் எதுவுமில்லே.

ஞான: ஆமாம். குற்றமெல்லாம் என்னுடையதுதான் ஒரு ஏழைக்கு உதவி செய்வதுபோல நடித்து, அப்பாவிப் பெண்ணை ஏமாற்றி, சாஸ்திரோக்தமான சம்பிரதாயத்தையே அழித்துவிட்டாயே, சண்டாளா. கொலைகாரப் பாதகா,

ராஜா: பெரியவரே! கொஞ்சம் பொறுமையோடு பேசுங்கள். உண்மையைத் தெரிந்துகொள்ளத்தான் நான் இங்கு வந்தேன்!

ஞான: உண்மை! என்ன உண்மை? ராணி விதவை! அவள் உனக்கு கிட்டாத பொருள்! இதுதான், நீ தெரிஞ்சுக்க வேண்டிய உண்மை! போய்விடு! என் முன்னால் நிற்காதே! போய்விடு...போ!

★

[பாபு கீதாவிடம் சாக்ரட்டீஸ் நாடகத்தில் சாக்ரட்டீஸாக நடிக்கும் ராஜாவுக்கு உண்மையான விஷத்தைக் கொடுத்து ராஜாவை கொன்றுவிட திட்டமிடுகிறான்]

★

★ ராணி வீடு ★

[ராணி விஷம்குடிக்க முடிவுசெய்து சமரசத்துக்கு கடிதம் எழுதுகிறாள்.]

விதவை என்ற சொல்லைவிட விஷம் என்ற சொல் சுவையாக இருக்கிறது!...இந்த வையகத்தில் வாழ முடியாத நிலைபெற்ற பெண்ணொருத்தி, இதுபோன்ற முடிவைத் தேர்ந்தெடுத்ததைத் தாங்கள் குற்றமெனக் கருதமாட்டீர்கள் என்று நம்புகிறேன்! விடைபெற்றுக்கொள்கிறேன்...

அன்புள்ள,
ராணி.

[அப்போது கரண்ட் வருகிறான்.]

கர: அம்மா! என்னம்மா இது நாடகத்துக்கு வராம...

ராணி: கரண்ட்! நல்லசமயத்தில் வந்தாய்...இந்தா...இந்த கடிதங்களைக் கொண்டுபோய் ராஜாவிடமும், சமரசத்திடமும் கொடுத்துவிடு!

கர: [வாங்கிக்கொண்டு] நீங்க நாடகத்துக்கு வரலியா? வாங்கம்மா, அருமையா இருக்கு நாடகம்!

★

★ சாக்ரடீஸ் (நாடகம்) ★

[கிரேக்கத்தின் வீதியிலே ஒரு நாள்.]

சாக்ரடீஸ்: "உன்னையே நீ அறிவாய், உன்னையே நீ அறிவாய்."

கிரேக்கத்தின் கீர்த்தி, புவன மறியாத தல்ல, அதற்காக இங்கே விழுந்திருக்கும் கீறல்களை மறைத்திட முயல்வது புண்ணுக்கு 'புனுகு தடவும் வேலையைப் போன்றது!...அதனால் தான் தோழர்களே. சிந்திக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்று சிரந் தாழ்த்தி உங்களை அழைக்கிறேன்!

உன்னையே நீ அறிவாய்! இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காக உங்களையெல்லாம் அழைக்கிறேன்! அறிவு... அறிவு! அகிலத்தின் எந்த மூலையிலிருந்தாலும், அதைத் தேடிப் பெறுவதற்காக உங்களை அழைக்கிறேன்! "உன்னையே நீ அறிவாய்"—இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காகத் தான் என் உயிரினுமினியவர்களே, உங்களையெல்லாம் அழைக்கிறேன்!

ஏற்ற மிகு ஏதென்சு நகரத்து எழில்மிக்க வாலிபர்களே! நாற்ற மெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க, இதோ! சாக்ரட்டீஸ்அழைக்கிறேன்; ஓடி வாருங்கள்!...ஓடி வாருங்கள்! வீரம் விலை போகாது—விவேகம் துணைக்கு வராவிட்டால்! தீட்டியவாளும், தினவெடுத்த தோள்களிலே தூக்கிய சட்டியும் மாத்திரம் போதாது தீரர்களே! இதோ நான் தரும் அறிவாயுதத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்! அறிவாயுதம்! அறிவாயுதம்! அகிலத்தின் அணையாத ஜோதி!

மெலிடஸ்: அறிவாயுதமாம்! அனைத்துலகும் அடி பணியும் அஸ்திரமாம்! குமுறும் எரிமலை—கொந்தளிக்கும் கடல் இவை களைவிடப் பயங்கரமானவன் சாக்ரடீஸ்!...அவன் தரும் அறிவாயுதம் கிரேக்கத்திலே தயாராகுமானல், நாம் தலை தூக்கவே முடியாது! முடியாது அனிடெஸ், என்ன சொல்கிறீர்...?

அனிடஸ்: மெலிடஸ்! நாம் கிறிய கோட்டைத் தாண்டாத கிரேக்க மக்களுக்கு அந்தக் கிழவன் அறிவுக் கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்துவிட வேண்டும்!

மெலி: ஆம்! அதுதான் சரி! சாக்ரடீஸ், நீ கைது செய்யப் படுகிறீர்! [உம்...என்று வீரர்களிடம் உத்திரவிடுகிருர்.]

★ நீதி மன்றம். ★

அனி: சாக்ரடீஸ், நாட்டில்நடமாடக்கூடாத ஒரு ஆத்மா! ஜனநாயக அரசாங்கத்தைக் குறைகூறும் அந்த ஐந்து உடல் முழுதும் விஷங்கொண்டது! கேட்டார் பிணிக்கும் சொற்களால், கேளாரும் வேட்ப மொழியும் வார்த்தைகளால், கேடு மலியும் கருத்துக்களை அள்ளி வழங்கி அரசாங்கத்துக்கு விரோதமாக, ஆண்டவனுக்கு விரோதமாக, சட்டத்திற்கு விரோதமாக, இளைஞர்களைத் தூண்டிவிடும் இழிகுணக் கிழவன்!

[சாக்ரடீஸ் சிரிக்கிருன்.]

நீதி: என்ன சிரிப்பு என்ன காரணம்?

சாக்: ஒன்றுமில்லை தலைவ!...ஆத்திரத்திலே அனிடஸ் தன்னை மறந்து என்னைப் பார்த்துக் கிழவன் என்று கேலி புரிகிருர்! அதை நினைத்தேன்—சிரித்தேன். கடல் நுரைபோல் நரைத்துவிட்ட தலை எனக்கும்—அனிடசுக்கும்! இல்லையா சபையோர்களே? என்ன அனிடஸ், உண்மைதானே?

மெலி: சாக்ரடீஸ்! வழக்கும் விசாரணையும் உங்கள் இரு வரின் தலையைபற்றி யல்ல, அதை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன்!

சாக்: மிகவும் நன்றி மெலிடஸ்! மிகவும் நன்றி! ஆனால் ஒன்று, எண்சாண் உடம்பிற்கு தலையே பிரதானம்போல், இந்த வழக்கிற்கும் தலைதான் பிரதானம்! என் தலையிலே இருந்து சுடர் விட்டுக் கிளம்பும் அறிவு—அதை அழிக்க கவிஞனாகிய உன் தலை யிலே இருந்து புறப்படும் அர்த்தமற்ற கற்பனைகள்—அரசியல் வாதி அனிடசின் தலையிலேயிருந்து பீறிட்டெழும் அதிகார ஆணவம்—இந்த மூன்றுக்குமிடையே நடக்கும் மும் முனைப் போராட்டம்! அதன் விளைவுதான் மெலிடஸ், இந்த வழக்கு!

மெலி: பார்த்தீர்களா, சட்டத்தையும் சபையையும் அவ மதிக்கிறான்!...இப்படித்தான், இளைஞர்களையெல்லாம் கெடுத் தான்...!

சாக் இளைஞர்களை ஒரு கிழவன் எப்படியப்பா கெடுக்க முடியும்? நானென்ன வாலிபருக்கு வலை வீசும் விலை மாதா?பருவ விருந்தளிக்கும் பாவையா?

மெலி: மாதரிடம் இல்லாத மயக்கு மொழி—வாலிபர்க்கு வலை வீசும் வனிதையரும் பெற்றிடாத வசீகரச் சொல் அலங் காரம்—வார்த்தை ஜாலம்—அடுக்குத் தொடர்—இப்படிப் பல மாயங்கள் கற்றவர் நீர்.

சாக்: மந்திரவாதி என்றுகூடச் சொல்வாய்...அன்புள்ள இளைஞனே! ஏதென்ஸ் நகரத்திலே நான் ஒருவன்தான் இளைஞர் களைக் கெடுக்கிறேன்...அப்படித்தானே?

மெலி: ஆமாம்!

சாக்: நீ கெடுக்கவில்லை?

மெலி: இல்லை!

சாக்: அனிடஸ்:?

மெலி: இல்லை?

சாக்: சிற்பி லைகன்...?

மெலி: இல்லை!

சாக்: இந்த நீதிபதி...?

மெலி: இல்லை!

சாக்: யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை, எல்லோரும் இளைஞர்களுக்கு நன்மையே செய்கிறார்கள், என்னைத் தவிர!... அப்படித்தானே?

மெலி: ஆமாம்...ஆமாம்...

சாக்: இத்தனைபெரும், ஏன் ஏதன்ஸ் நகரமே இளைஞர்களைத் திருத்தும்போது நான் ஒருவன் அவர்களுடைய பாதையை எப் படியப்பா திருப்பிவிடமுடியும்?

அனி: ஒரு குடம் பாலுக்கு, ஒரு துளி விஷம்!

சாக்: ஏன், இப்படியும் சொல்லலாமே, இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்கு! என்ன மெலிடஸ் திகைக்கிறாய்?

சபையோர்களே! வாலிபர்கள் என்னைச் சுற்றி வானம்பாடிகளைப்போல் வட்டமிடக் காரணம் என்னுடைய வார்த்தை அலங்காரங்கள் அல்ல வளங் குறையாத கருத்துக்கள் தரங்குறையாத கொள்கைகள்—இந்தத் தரணிக்குத் தேவையான தங்கம் நிகர் எண்ணங்கள்! அழகு மொழியால், அறங்கார அடுக்குகளால், அரும்பு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிறார்களே, அவர்களைக் கேட்கிறேன், அந்த மொழி எனக்கு மட்டும் சொந்தமல்லவே! அவர்கள் அதை பேசக்கூடாது என்று நான் தடை போட்டது கிடையதே; பேசிப்பார்க்கட்டும் அவர்களும்! பாபம் பேசித் தோற்றவர்கள்—பேசித் தோற்றவர்கள்—உம்...

நீதி: சாக்ரடீஸ்! பேச்சை நிறுத்தும், விளக்கம் தேவையில்லை. இந்த நீதி மன்றத்தின் அதிகப்படியான உறுப்பினர்களின் வாக்களிப்பின்படி நீர் விஷம் சாப்பிட்டு மரண தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது!

சாக்; கிரேக்க நாட்டு நீதி மன்றம் பெருமைக்குரிய தீர்ப்பை அளித்துவிட்டுமௌனப்புன்னகை புரிகிறது...நாட்டிலே நீண்ட நாட்களாக சூழ்ந்திருக்கும் இருளை விலக்கத்தான் முயற்சித்தேன் குறுகிய காலத்தில்! எழுபது வயதுக்கு மேல் முதல் முதலாக குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இந்தக் கிழவனுக்குத் தந்த பரிசு, சாக்ரடீஸ் தீமை செய்பவன்—விண்ணிலும் மண்ணிலும் என்ன இருக்கிறதென்று தேடிப் பார்க்கும் நாத்திகன்—பொய்களை உண்மையாக்கும் புரட்டன்—இப்படி எல்லாம் குற்றச் சாட்டுகள்! மரண தண்டனை!

கவலையில்லை; கனவு இல்லாத தூக்கத்தைப் போன்றது மரணம் என்றால் அந்த மரணத்துக்காக நான் ஏன் கவலைப்பட வேண்டும்! மரணத்துக்குப் பிறகு மனிதனுக்கு மறு உலகம் உண்டென்றால் அந்த உலகத்திலே, எனக்கு முன்னே குடியேறியிருக்கும் ஹோமர், பிண்டர், போன்ற கவிஞர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றவனாவேன்!...எனக்கு தண்டனையளித்த நண்பர்களே, நீங்கள் எதிர்காலத்துக்கு—பதில் சொல்லியே தீர வேண்டும்! எதிர்கால இளைஞர்கள் என்னைப்போல இவ்வளவு அமைதியாக கேள்வி கேட்க மாட்டார்கள்-அவர்களது கேள்விகளிலே அக்கினிப் பொறி கிளம்பும்! அனல், புனல், புயல், அத்தனையும் விசும்! அவர்களை அமைதி வழியில் கட்டிக் காத்து வரும் நான் போன பிறகு, புறப்படப்போகும் புரட்சி எரிமலையின் முன்னே நிற்க முடியாமல் சுயநலப் புலிகளே, நீங்களெல்லாம் சுக்கு நூறாகப்போய் விடுவீர்கள்!...சுக்கு நூறாகப்போய்

விடுவீர்கள்...! சரித்திரம் திரும்பும்: அதேபோல் மனிதனுக்கு மறு ஜென்மம் திரும்பு மென்றால், அதே ஜென்மத்திலும் இதே குற்றத்தை செய்தே தீருவேன்! செய்தே தீருவேன்! என் சிந்தை அணு ஒவ்வொன்றும் தேன் பாய்ச்சும் இந்தக் குற்றத்தை, எங்கும் எப்போதும், எந்த இடத்திலும் செய்து கொண்டே இருப்பேன்...!

★ சிறை ★

சாக்ரடீஸ்: அன்புள்ளவளே! பார்த்தாயா? பயனற்ற தத்துவ விசாரணையில் காலத்தைக் கழிக்கிறேன், தர்க்கவாதம் புரிந்து தொல்லைப்படுகிறேன் என்றெல்லாம் கோபித்துக் கொண்டாயே! இப்போது பார்—உன் கணவன் அகிலம் புகழும் வீரனாய், தேசம் புகழும் தியாகியாய் மாறிவிட்டான்... எக்ஸேன்திபி! நீ பாக்கியசாலி தான்! படைபலம் பணபலம் அத்தனை பலத்தையும் எதிர்த்து நின்று யாருக்கும் பணியாத பெருமையோடு விழிகளைக் கடைசியாக மூடப்போகும் கர்மவீரனுக்கு நீ மனைவி...குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்...அவர்கள் பெரியவர்களாக மாறி நேர்மை தவறி நடந்தால்—நான் உங்களைத் திருத்த முயன்றதுபோல், நீங்களும் அவர்களைத் திருத்த முயலுங்கள்...நேரமாகிறது, காவலர்கள் கோபிப்பர். கிரீட்டோ! இவர்களை அனுப்பிவை...

[அவள் போனபிறகு]

கிரீட்டோ! உனக்குத்தெரியுமல்லவா?...முப்பதுநாள்சிறை வாழ்வு இன்றோடு முடிந்து—நீதிமன்றத்தின் உத்திரவுப்படி விஷம் சாப்பிட்டு சாகவேண்டிய நன்னாள் இன்றுதான்...

கிரீட்; அருமை நண்பா! மலைகுலைந்தாலும்மனங்குலையாத மாவீரனே! உன் ஒளிவீசும் சுழற்கண்களை—துடிக்கும் அகன்ற புருவங்களை—தொகைதொகையாகப் பகைவரினும்—துவளாது தத்துவ விளக்கம் கொட்டும் உணர்ச்சிமிக்க உதடுகளை இனி ஒரு சாக்ரடீசின் உருவத்திலே நான் காணப்போகிறேனா?

[காவலன் விஷக்கிண்ணத்துடன் வருகிறான்.]

சாக்: அழாதே நண்பா! அதோ வந்துவிட்டது அமுதம். சிறைக் காவல. இதை என்ன செய்யவேண்டும்? முறைகளைச் சொல்லு.

காவ: பெரியவரே. விஷத்தை முழுவதும் குடிக்கவேண்டும். பிறகு இங்குமங்கும் நடந்துகொண்டே இருக்கவேண்டும். கால்கள் மரத்துப்போகும் வரையிலே அப்படி நடக்க வேண்டும்—பிறகு உட்காரலாம்—கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு ஜில்லிட்டுக்கொண்டே வரும்—பிறகு படுத்துவிட்டால்—

சாக்: ஆனந்தமான நித்திரை—கனவு மங்கையாலும் கலைக்க முடியாத நித்திரை. சிறைக்காவல, கொடு இப்படி...

[விஷக் கிண்ணத்தை வாங்குகிறான்.]

கிரி: நண்பா. சிறிதுநேரம் பொறுத்துக்கூட சாப்பிடலாம் ...சிறைச்சாலையிலே அதற்கு அனுமதி உண்டு.

சாக். கிரிட்டோ. உனக்கு மிகமிக அற்ப ஆசை. விஷத்தை இன்னும் இரண்டு நாழிகை கழித்து சாப்பிடுவதாக வைத்துக்கொள்; அதற்குள் திடீர் என்று இருதயம் வெடித்து நான் இறந்துவிட்டால் கிரேக்கநாட்டு நீதிமன்றத்தின் தண்டனையை எப்படி நிறைவேற்றுவது? புதிய சாக்ரடீசா பிறந்து வருவான்...? கிரிட்டோ, இந்தவிஷம் அழிக்கப்போவது என்னையல்ல—என் உடலை...

கிரி: ஏதன்சின் எழுச்சிமிக்க சிங்கமே. எங்கள் தங்கமே. கிரேக்கப் பெரியாரே. எம்மையும் உம்மையும் இந்த விஷம் பிரிக்கப்போகிறதா? அய்யகோ. நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே. ...நண்பா. கடைசியாக எனக்கு ஏதாவது சொல்லு...

சாக்: புதிதாக என்ன சொல்லப் போகிறேன். உன்னையே நீ அறிந்துகொள். எதையும், ஏன், எப்படி எதற்காக என்று கேள்—அப்படிக் கேட்டதால்தான் சிலை வடிக்கும் இந்தசிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினான். அவர் சொன்னார்—இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்...எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய். இதைத்தான் உனக்கும், இந்த உலகத்துக்கும் சொல்ல விரும்புகிறேன்...

கிரிட்: சாக்ரடீஸ். உனது பிணத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்?...

சாக்: புதைப்பதாயிருந்தால் இந்தநாட்டில் உலவும்புழுகு மூட்டைகளையும் என்னோடு போட்டுப் புதைத்து மண்ணாக்கி விடு. எரிப்பதாயிருந்தால் ஏமாற்றுக்காரர்களின் சுவடிகளையும் என்னோடு சேர்த்து சுட்டுச் சாம்பலாக்கித் தண்ணீரில் கரைத்து விடு. விடைகொடு, விஷம் அழைக்கிறது. என் தேசத்துப் பெருமக்களிடம் விடைபெற்றுக்கொள்ளப்போகிறேன்...

எனதருமை ஏதன்சு நகரத்துப் பெருமக்களே. ...

இதோ, சாக்ரடீஸ் சந்தோஷமாக சாகப்போகிறான். கிரேக்க நாட்டு நீதிமன்றம் கூடைக் கணக்கிலே அவன் மீது குற்றங்களைக் கொட்டி, கோப்பை நிறைய நஞ்சையும் கொடுத்து, பருகடா இந்த உயிர் பருகும் பாயசத்தை என்று கட்டளையிட்டிருக்கிறது—விஷக் கிண்ணத்தின் விளிம்பிலே, உபதேசங்களை உதிர்த்த இந்த சாக்ரடீசின் உதடுகள் பதியப்

போகின்றன, ...இன்னும் ஓரிரு விநாடிகள். அதன் பிறகு சாக்ரடீஸ் என்று அழைக்கப்படும் இந்த உடல், உயிர், எல்லாமே அதனதன் தொடர்பை அறுத்துக்கொண்டு வாழ்க்கைத் தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

வருகிறேன் கிரேக்கமே. வருகிறேன்...என தருமை ஏதென்சுநகரமே. வருகிறேன். நான் ஆடியோடி ஆவேசமாகப் பேசுவதற்குத் துணைபுரிந்த ஏதென்சுநகரத்து எழில்வீதிகளே. வீதியோரத்து மர நிழல்களே! வீட்டோரத்துத் திண்ணைகளே! உங்கள் அனைவரிடமிருந்தும் இந்த கிழவன் விடை பெறுகிறான்! பீடு நடையும் பெருமித நோக்கமும் கொண்ட இளைஞர்களே. நாடு காக்கும் நல்ல தம்பிகளே. பேரன்பு கொண்டோரே பெரியோரே. என் பெற்ற தாய்மாரே. நல் இளஞ் சிங்கங்காள். உங்கள் அனைவர்க்கும் சாக்ரடீசின் இறுதி வணக்கம் உரியதாகுக...இந்தக் கிழவன் கிரேக்க இளைஞர்களைக் கெடுத்ததாக யாராவது உண்மையாக, உளமாற நினைத்தால் அவர்கள் என்னை மன்னிக்கட்டும். மன்னிக்கட்டும்...வருகிறேன், வணக்கம். ஏ. ஜெகமே. சிந்திக்கத் தவறாதே. உன்னையே நீ எண்ணிப்பார். உன்னையே நீ எண்ணிப்பார்...

[விஷம் குடிக்கப்போக, நாடகத்தில் உணர்ச்சி வசப்பட்ட சமரசம் எழுந்து, மேடைக்கு ஓடி வருகிறார்.]

சம. வேண்டாம்...இம்...வேண்டாம். சாக்ரடீஸ் விஷம் குடிக்கக்கூடாது. சாக்ரடீசு குற்றமற்ற மனுஷன்...இங்

ஆ. வேண்டாம். வேண்டாம். சாக்ரடீஸ் அய்யோ. வேண்டாம். நீங்க சாகக்கூடாது. கல்விக் களஞ்சியம் சாகறதாவது. எதுக்காக சாக்ரடீஸ் சாகனும்...என்ன குற்றம் செஞ்சார்? சிந்திக்கச் சொன்னார். ஏன், எதுக்குன்னு அது குற்றமா? சிந்திக்கிறது குற்றம்னு, மனிதனுக்கு மூளை இருக்கிறதே குற்றமாச்சே...சாக விடமாட்டேன்...இந்த கிரேக்க நாட்டு நீதி மன்றம் செய்யத் தவறின ஒரு காரியத்தை நான் செய்யறேன்... சாகவிட மாட்டேன். இந்தப் பெரியாரை இழந்துட்டா அப்புறம் ஆயிரம் வருஷம் தேடினாலும் இந்த மாதிரி அறிவு நமக்குகிடைக்குமா...? அய்யோ, இந்த விஷத்தை குடிக்க வேண்டியது இந்த வாயா? இதை குடிக்கிறதுக்கு வாய் இருக்கு...இருக்கு. நான் காட்டுறேன் உங்களுக்கு...அந்த வாய்தான் இதைக் குடிக்கணும்...மெலிடஸ்...மெலிடஸ்.

[மெலிடஸ், உருவ பாபு திகைக்கிறான்]

ஏ. மெலிடஸ், வா இங்கே. குடி—உம்—இந்தா...சண்டாளா. சாப்பிடு.

பாபு: அத்தான்...

சம: அத்தாஞ? நாஞ? இப்போ நான் அத்தான்ல; நீதிபதி நீ மெலிடஸ்.

மக்கள்: அதுதான் சரி—அதுதான் சரி.

சம: சரியான வார்த்தை...குடிக்கச் சொல்றேன்...இந்தா குடி. உம். சாக்ரடீஸ் முடிவை நான் மாத்துரேன். உம். என்ன முழிக்கிறே?

(பாபு தயங்க. கீதாவின் தாய் உள்ளேஇருந்து ஓடிவந்து)

தாய்: அய்யோ...அய்யோ...வேண்டாம்...வேண்டாம். உண்மையான விஷம்...

சம: ஆ

தாய்: பாபு சாப்புட்டா செத்துப் போயிடுவாரு...

சம; உண்மையான விஷம். ஆமாம்...

தாய்; மேடைமேலே ராஜாவைக் கொல்றதுக்காக பாபு விஷத்தை கலந்திருக்கிருரு...

சம; உண்மையான விஷமா இது? இந்தா குடி. வேண்டாம் நீ குடிச்சு செத்துப் போயிட்டென்ளு நான் கொலைகாரஞயிடுவேன் ...அது முடியாது போலீஸ்...வாங்க.

(போலீஸ் வருகிறது)

சாந்தம், பாத்தியா உன் தம்பி செஞ்ச வேலையை?

(பாபு கைது செய்யப்படுகிருன்.)

சாந்: என் தம்பியா? அவன் கொலைகாரப்பய, மாட்டுங்க அவன் கையிலே விலங்கை.

—★—

(மனப் போராட்டம்)

(விஷக்கிண்ணத்துடன் ராணி)

ஞானக்கண் குரல்: இந்த அப்பன் உனக்கு வேண்டுமாஞல் உன் மனதில் உள்ள கல்யாண ஆசையை விட்டுவிடு. கன்னிப் பெண்ணுகவே வாழு.

ராஜாவின் குரல். நீலிக்கண்ணீருக்கு இளகிவிடும் நெஞ்சம் எனக்குக் கிடையாது பாபு.

சாந்தம்மா. ஏம்மா மின்னல்கொடி. மாயப்பொடி தூவுறியா மாயப்பொடி.

ஞான; ராணி. நீ விதவையென்று தெரிந்தால் நீ யாரைக் காதலிக்கிருயோ அவன் கூட உன்னை விரும்பமாட்டான்! அவன் கூட உன்னை விரும்பமாட்டான்....

ராஜா; நீ விதவை என்பதைப்பற்றிகூட எனக்கு கவலையில்லை. ஆஞல் இதை நான் என்னிடம் அதை மறைத்து வைத்து என்னை ஏமாற்றி இருக்கிருய் பார். அதை யாராலும் மன்னிக்க முடியாது யாராலும் மன்னிக்க முடியாது.

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
10/8 முத்து நகர் திருப்பூர்.

ஞான: நீ விதவை.

ராஜர்: விதவை.

சார்: வித்தாரக்கள்ளி! விபசாரி!

பல குரல்கள்: விதவை! விதவை! விதவை! விதவை! புழுதியிலே வீசப்பட்ட வீணை! சிதைந்துபோன இசை! சிதறி விட்ட சிலை! கசங்கிய மலர்! கருகிய மொட்டு! கலைந்துவிட்ட ஓவியம்! கைம்பெண்! கைம்பெண்!

—✶—

சம: ராஜர்! நல்லவேளை, என்னையறியாமலே எப்படியோ உன்னை நான் காப்பாத்திட்டேனே...

ராஜா: ரொம்ப நன்றி சார்...

கரண்ட்: (அங்கு வந்து) இந்தாங்க சார் உங்களுக்கு லெட்டர்...

சம: ஏது இன்னேரத்தில லெட்டர்? ஆ! ராணி!

(ஓடுகிறார். ராஜாவும் கடிதத்தைப் படிக்கிறான்.)

—✶—

சமரசம்; ராணி...ராணி...அய்யா!

ஞான: யாரு?...

சம; ராணி எங்கே?...நான் சமரசம்.

ஞான; சமரசமா?...அய்யா, கேட்டீங்களா சேதியை...?

சம: என்ன?

ஞான: என் குடும்பத்துக்கு களங்கம் வந்துடுச்சி...

சம; என்னது?...

ஞான: ராணி மோசம்போயிட்டா,

சம: அய்யா...என்ன சொல்றீங்க?

ஞான; யாரோ ராசாவாம்.., அவனோட சேர்ந்து...மானமா வாழ்ந்த என் குடும்பத்திலே மாருத அவமானத்தை உண்டாக் கிட்டா...என் கௌரவமெல்லாம் மண்ணோட மண்ணுப் போச்சு...

சம; அய்யோ—ராணியே மண்ணுபோக பாக்கிரு! விஷம் சாப்பிட்டு சாகப்போறதா இதோ பாருங்க கடுதாசி எழுதி இருக்கு...

ஞான: ஆ! ராணி...!

['ராணி' என்று முட்டி மோதிக்கொண்டு உள்ளே போகிருர்.]

ஞான; ராணி...ராணி...எங்க என் ராணி...?

சம; பெரியவரே! இனி உம்ம கதறல்...அந்த பொண்ணு காதிலே விழவே விழாது...

ஞான: அய்யோ! இப்படி யெல்லாம் வரும்னு தெரிஞ்சா ...உன் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருப்பேனே அம்மா.

சம: இப்ப சொல்லி என்ன பிரயோசனம்...? ஒண்ணும் பிரயோசனமில்லே...ம்...ஒப்பாரி வச்சு அழுவுறதுக்காகவே உயிரோடு இருக்கிறவங்களைக் கொல்றது...உலகத்துக்கே பழக்கமாப் போச்சே!

[ராஜா வருகிருன், வேகமாக.]

ராஜா: ராணி...ராணி...அய்யா! ராணி எங்கே...? ராணி... ராணி...

சம: பதருதே ராஜா...காரியம் எல்லாம் தீந்தது...உன் காதல் கைகூட முடியாத கனவாகவேப் பேச்சு!...

ராஜா; அய்யா! என்ன சொல்றீங்க? பெரியவரே, என் ராணி எங்கே?

சம; பெரியவரும் நீயும் சேர்ந்துதான்...ஒரு பெண்ணைப் பிணமாகவே ஆக்கிட்டீங்களே! சாவிலும், வாழ்விலும் பிரிய மாட்டோம்னு சத்தியம்செய்யறது; சபதம் போடுறது; கடைசியிலே, கன்னிப் பெண்களை...இப்படி விஷம் சாப்பிட்டு சாக வைக்கிறது—காதல் ஒங்களுக்கு ஒரு கண்ணு மூச்சி விளையாட்டாப் போச்சு!...ம்...போ...போய் பாரு உன் காதலியை! போ! ...போ!...

[கதவை உடைத்து உள்ளே போகிருன். ராணி கீழே விழுந்து கிடக்கிருள்.]

ராணி...ராணி...

ராணி...எங்கிருந்தோ வந்தாய். என் இருதயச் சோலையிலே கானம் பாடும் வானம்பாடியாய்; களிப்பிலாடும் அழகு மயிலாய்; துள்ளும் மாளுய்; கொஞ்சும் கிளியாய்...பறந்தாய்... திரிந்தாய்...என்னைப் பரவசமடையச் செய்தாய்...கடைசியில் என்னை அழைக்காமலேயே, உன் பயணத்தைத் தொடங்கி விட்டாய்!...

பழத் தமிழ் பேசும் பதுமையே; சுவைக் கனியே! சுந்திர நிலவே! காதற் கவிபாடி என் கனவிலெல்லாம் சதிராடும் கண்ணழகி! கடைசியாக நீ என்ன நினைத்து உயிர்விட்டாய்? என்னை நினைத்தா?...இந்தப் பாவியின் இரக்கமற்ற பேச்சை நினைத்தா? ...என் கோகிலமே! குற்றமற்ற உன்மீது சீறி விழுந்த எனக்கு இப்படியா நீ தண்டனை தரவேண்டும்...? இந்த மனிதத்தன்மையற்றவனை மன்னிக்கும் பெருந்தன்மை, என் மரகதமே! உன்னோடு பிறக்காமலா போய்விட்டது...? பிறக்காமலா போய் விட்டது? அய்யோ! இந்தக் கொடுமைகளைப் பார்க்காமல், நாடக மேடையிலேயே என் கண்ணை மூடியிருப்பேன். அதையும் நீங்கள் தான் கெடுத்து விட்டீர்கள்...அதையும் நீங்கள் தான் கெடுத்துவிட்டீர்கள்...

அய்யா! பெரியவரே!...ராணி கல்யாணமாகாதவள்! மழலைப் பருவத்திலே நீங்கள் நடத்தியது கல்யாணமல்ல; மரப் பொம்மை விளையாட்டு!

ராணி என் மனைவி!...என் வாழ்க்கைத் துணைவியென்று நான் வாயார—மனமாரச் சொல்லி அழுவதற்கு அனுமதி தாருங்கள்...அனுமதி தாருங்கள்...மறுமணத்திற்குச் சம்மதித்தீர்கள் என்பதற்கு அறிகுறியாக அவள் பிணத்துக்கு நான் மாலையிட உத்திரவு கொடுங்கள்...உத்திரவு கொடுங்கள்...ஏன் பேசாமல் இருக்கிறீர் பெரியவரே—ஏன் பேசாமல் இருக்கிறீர்...?

ராணி...ராணி...உன் அழகு விழிகளைத் திறந்து என்னை ஒருமுறை பார் ராணி! நான் உன் கழுத்திலே மாலையிட்டு உன்னை மனைவி என்று அழைக்கப் போவதை ஒருமுறை பார்த்துவிட்டு, அமுது கசியும் உன் இதழ் திறந்து 'அத்தான்' என்று என்னை ஒருமுறை அழைத்துவிட்டு, பிறகு செத்துவிடு ராணி! ராணி!

[ராஜா திடுக்கிட்டு திரும்புகிறான்.]

சமரசம் குரல்: பக்தா, பயப்படாதே! எழுந்திரு! ராணி உன் இஷ்டம்போல் சிறிது நேரம் உயிரோடிருந்து விட்டு பிறகு இறந்துபோக வரம் தந்தோம்...

ராஜா: நீங்க என்ன சொல்றீங்க? எனக்கொன்னும் புரியலியே?

சமரசம்: ராணி எழுந்திரு.

(ராணி எழுந்திருக்கிருள்.)

ஞான: என்ன, ராணி உயிரோடவா இருக்கு?

சம: ஆமாம்! ஏன் திகைக்கிறீங்க?...இல்லே தெகப்பானேன்னு கேக்கிறேன்...ராணி உயிரோடதான் இருக்குது... சாகப்போன ராணியை நான் எப்படி காப்பாத்தினேன் தெரியும்ல...ராணி விஷத்தை எடுத்து சாப்பிடப் போச்சு...நல்ல வேளையா அந்த நேரத்திலே நான் வந்தேன்.

(முன்)

(ராணி விஷம் குடிக்கப் போகிருள். சமரசம் வருகிருர்.)

சம: ராணி...ராணி...என்ன இது?...

ராணி: என்னை சாக விடுங்கள்...நான் இனிமேல் இந்த உலகத்தில் வாழ்ந்து பயனென்ன? நான் வாழ முடியாதவள்... வாழக் கூடாதவள்...

சம: ராணி, நான் வாழவைக்கிறேன். இந்தா பாரு! வாழ்க்கையிலே தோல்வியடைஞ்சவங் கெல்லாம்—தற்கொலை பண்ணிக்க ஆரம்பிச்சா...உலகத்திலே...முக்கால்வாசி ஜனத் தொகை எப்பவோ காலியா போயிருக்கும்...கவலைப்படாதே.

ராணி: வேண்டாம்...

சம: அய்யய்யோ! வேண்டாம், நான் சொல்றதைக்கேளு ...கதவை தாப்பாபோட்டுட்டு விஷம் சாப்பிட்டுவிட்டு செத்தது மாதிரி படுத்துகிட. பாக்கியை நான் பாத்துக்கிறேன்... உம்...உடனே!

—★—

சம: இப்ப புரிஞ்சுதா ராணிக்கு உயிர் வந்த ரகசியம்...?

ஞான: எப்படியோ என் ராணி பிழைச்சிடிச்சி.

ராணி: அப்பா...

ஞான: ராணி...

ராணி: அப்பா! நான் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்து விடுங்கள்... (காலில் விழுகிருள்)

ஞான: எழுந்திரிம்மா...இந்த தள்ளாத வயசுலே என்னே எங்க தனியா தவிக்கவிட்டுட்டு போயிடுறியோன்னு ஏங்னேச் சேன்...

சம: இப்பத்தான் எல்லாம்நல்லாவே முடிஞ்சுபோச்சே...

ராணி: உங்க குடும்பத்திலும் சச்சரவு ஏற்படவும் நான் தான் காரணமா இருந்தேன்—நீங்களும் மன்னிச்சுடுங்க.

சம: மறப்போம்; மன்னிப்போம்!

ராஜா: ராணி, நீ விழவேண்டிய காலு இன்னும் ஒண்ணு பாக்கியிருக்கு. இந்தம்மாதான் உன் மேலே ரொம்ப கோபமா யிருக்காங்க. இதபாரு மொதல்ல, அவுங்க கால்ல விழு!...

சாந்தம்மா: மகராசியா இரும்மா!...காதலர் இருவர் கருத் தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்...

சம: ஹீ...ஹீ...அதை நீ சொல்லிட்டியா?...நான் சொல்லலாம்னு இருந்தேன்...சரி; குறள் எல்லாருக்கும் பொது...விடு.

(சத்தம் கேட்கவே) யாரது...என்ன?

(கரண்ட், சங்கரன், கண்ணம்மா மூவரும் வருதல்.)

கரண்ட்: ஆகாகா—தகராறு! பெரிய தகராறு...பெரிய தகராறு.

சம:ஏய்...ஏய்...என்னப்பா என்ன தகராறு...?

கரண்ட்: காதலிச்சாச்சு...யாரு மொதல்ல மாலே போட றதுன்னு தகராறு!

சம: காதலிச்சாச்சுல்ல. அப்ப 'கேப்'விடப்புடாது! இந்த விஷயத்திலே லேட் பண்ணிறு அப்புறம் அது விஷம் வரையி லும் போயிடும். மொதல்ல மாலேயைப் போடு.

(கரண்ட் கழுத்தை நீட்டுகிறுன்)

சங்: நானுங்க...

சம: இந்தா பொண்ணு இங்கவா! இவனு?...

(ஆமாம் என்று தலேயசைக்க)

எய்! கொடு இப்படி. ஆளப்பாரு...போடுங்க...

ராஜா: அப்ப சரி...சார், எல்லாம் நல்லவிதமா முடிஞ்சுது.

சம: ஆமா, நல்லவிதமா முடிஞ்சுது.

ராஜா: அப்ப நீங்களெல்லாம் கொஞ்சம் ஒதுங்கிக்கிறீங்களா?

சம: ம்...புரிஞ்சுபோச்சு. நாங்க வர்றோம்.

★ தோட்டம் ★

ராணி: கையை விடுங்கள் ராஜா...

ராஜா: கைவிட மாட்டேன் கண்ணே!...என் இதயத்தின் வீதியிலே ஜோதி விளக்காக உன்னை ஏற்றி வைத்திருக்கிறேன் ...குறும்புத்தனத்திற்குப் பெயர்போன உன் நீலக் குறு நயனங்கள், காதல் பாஷை பேசுவதை என் இதயத்தின் காதுகளால் கேட்க முடிகிறது...

மாதுளையின் நிறங் காட்டும் உன் மாணிக்க இதழ்கள், உன் மனதைத் திறந்து காட்டுவதையும் என்னால் பார்க்க முடிகிறது.

அந்தி வானத்தின் சிகப்பு காட்டும் உன் கன்னக் கதுப்புகளிலே தோன்றும் மின்னலிலே உன் நெஞ்சின் மென்மை தெரிகிறது...எனக்கு சோதனை போதும் சுந்தரி...

ராணி: போங்க ராஜா...

ராஜா: ராணி! ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். எதை மறைத்தாலும் மறைக்கலாம், ஆனால் இந்தக் காதல் இருக்கிறதே அதை மட்டும் என்றுமே மறைக்க முடியாது...தெரியுமா?

(இருவரும் பாடுகிறார்கள்)

நலம் வாழ்க!

—✱—

அன்பு அச்சகம், மதுரை:— 56